பக்கங்கள்: இருபது

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 07 செவ்வாய்க்கிழமை (20.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 145

# இலங்கைக்கு இந்தியா வழங்கும்

# இராணுவ, அரசியல் உதவிகளை நிறுத்துக!

## புதுடில்லி மாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானம்

புதுடில்லி, ஏப்பரல் 20

**இன அழிப்பில் ஈடுபட்ட இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கி வரும் இராணுவ, அரசியல் மற்றும் அபிவிருத்தி உதவிகளை இந்தியா நிறுத்த வேண்டும்.**

**புதுடில்லியில் நடைபெற்ற "பேசப் படாத இனப்படுகொலைகள், இலங்கையில் போர்க் குற்றங்கள்" என்ற மாநாட்டில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.**

டில்லி தமிழ் மாணவர் பேரவை, ஜனநாயக மாணவர் பேரவை ஆகிய இரண்டும் இணைந்து கடந்த வியாழக்கிழமை (15 ஆம் திகதி) நடத்திய ஒருநாள் மாநாட்டின் முடிவில் மொத்தம் ஐந்து தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

டப்பிளினைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் நிரந்தர மக்கள் நீதிமன்றம் வெளியிட்ட அறிக்கையில், இலங்கை அரசாங்கம் போர்க் குற்றங்களை இழைத்ததாகவும், மனிதத் தன்மைக்கு - மனித பண்புகளுக்கு - எதிரான குற்றங்களை இழைத்ததாகவும் தீர்ப்பு வழங்கியிருந்தது. அதனை மேற்கோள் காட்டிய பேச்சாளர்கள் பலரும், இலங்கை அரசு இன அழிப்பில் ஈடுபட்டிருந்த போதிலும் அதிகாரமுள்ள சர்வதேச நாடுகள் போர்க் குற்

(20 பக்கம் பார்க்க)

## கப்பலில் தரித்திருந்த தமிழ் அகதிகள் இந்தோனேஷியாவுக்குள் நுழைவு

கொழும்பு, ஏப். 20

ஆஸ்திரேலிய அரசு தமக்கு புகலிட அனுமதி வழங்கும்வரை கப்பலைவிட்டு இறங்கமாட்டோம் எனத் தெரிவித்து வந்த ஈழத்தமிழ் அகதிகள் சுமார் 200 பேர் வரையில் நேற்று இந்தோனோஷிய நாட்டிற்குள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 6 மாதங்களாக இவர்கள் துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பலில் வாழ்ந்து, பல்வேறு இன்னல்களை அனுபவித்த போதிலும், ஆஸ்திரேலியா, இந்தோனேஷிய அரசு

(20 பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் தாயாருக்கு தமிழகத்தில் சிகிச்சை: நடவடிக்கை எடுப்பார் எனக் கலைஞர் அறிவிப்பு

சென்னை, ஏப். 20

பிரபாகரனின் தாயார் தமிழகத்தில் மீண்டும் சிகிச்சை பெற விரும்பினால் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்படும் என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

மலேஷியன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கடந்த 16ஆம் திகதி இரவு 10.45 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்தடைந்தார் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள். பக்கவாத நோய்க்குச் சிகிச்சை எடுக்க கோலாலம்பூரிலிருந்து சென்னைக்கு வந்த அவரை விமானத்தில் இருந்து இறங்க விடாமல் தடுத்திருக்கிறார்கள் சுங்க அதிகாரிகள். இந்தியாவுக்குள் நுழைவதற்கான உரிமை உங்களிடம் இல்லை என பார்

(20 பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மஹிந்த - ரணில் நேற்றுக்காலை முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஏப்.20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் நேற்றுக் காலை அலரிமாளிகையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரான இச்சந்திப்பின்போது நாடாளுமன்றில் சபாநாயகரைத் தெரிவுசெய்தல் தொடர்பாகவே பேசப்பட்டது என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் இருவரும் கலந்துரையாடினர் என்று உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் சில தெரிவிக்கின்றன.

இதேசமயம், புதிய அரசமைப்புத் திருத்தம், அதை நிறைவேற்ற எதிர்க்கட்சிகளின்

(20 பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்ற விசாரணை தொடர்ந்தும் இன்றும் நடக்கும்

கொழும்பு, ஏப். 20

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணை நேற்றுப் பகல் முழு அளவில் நடைபெற்றது.

ஜெனரல் பொன்சேகா தரப்பில் கிளப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை குறித்து இன்று தொடர்ந்தும் விசாரணை நடத்துவதற்கு இராணுவ நீதிமன்றம் தீர்மானித்திருக்கின்றது.

ஒழுங்குபடுத்தப்பட்ட நடைமுறைகளுக்கு மாறாக இராணுவத்துக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்தார் என்று தெரிவித்து ஜெனரல் பொன்சேகாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் குறித்து மேஜர் ஜெனரல் எம்.பி.பீரிஸ் தலைமையிலான இரண்டாவது இராணுவ நீதிமன்றமே தனது விசாரணைகளை நேற்று ஆரம்பித்தது.

அச்சமயம், ஜெனரல் பொன்சேகா சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்ஸி அரசகுலரட்ண பூர்வாங்க ஆட்சேபனைகளைக் கிளப்பினார்.

இராணுவத் தளபதிப் பதவியில் இருந்த ஒருவருக்கு எதிராக இத்தகைய இராணுவ நீதிமன்ற விசாரணைகளை நடத்த முடியாது எனவும் -

மேற்படி குற்றச்சாட்டுக் குறித்து விசாரிக்கும் சட்ட அதிகாரம் இந்த இராணுவ நீதிமன்றத்துக்குக் கிடையாது எனவும் -

அவர் வாதங்களைச் சமர்ப்பித்தார்.

இந்த ஆட்சேபனைகள் தொடர்பாக அரசுத் தரப்பின் பதிலை இராணுவ நீதிமன்றம் இன்று கவனத்தில் எடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய நாடாளுமன்ற உறுப்பினராக ஜெனரல் பொன்சேகா தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். புதிய நாடாளுமன்றம் நாளை மறுதினம் கூட இருக்கின்றது. அதற்கிடையில் ஜெனரல் பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணை இப்படி மறுபக்கத்தில் முடுக்கி விடப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-சி)

## பஸ் ஊழியர்கள் மட்டக்களப்பில் பணிப்பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஏப். 20

மட்டக்களப்பில் நேற்று இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு பஸ் டிப்போ முகாமையாளரைத் தற்காலிகமாகப் பணியிலிருந்து விலகுமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதம அதிகாரி விடுத்துள்ள அறிவிப்பை அடுத்தே, பஸ் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக, மட்டக்களப்பு படுவான்கரைக்கான பஸ் போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது. (அ-சி)

## 38 பேருடன் தற்காலிக அமைச்சரவை

கொழும்பு, ஏப். 20

38 உறுப்பினர்களுடன் தற்காலிக அமைச்சரவையே நாளை பதவியேற்கும் என்று அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் நவம்பரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது பதவிக் காலத்துக்கெனச் சத்தியப் பிரமாணம் செய்தபின்னரே நிரந்தரமான அமைச்சரவை பதவியேற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

38 அமைச்சர்கள் மட்டும் அடங்கிய அமைச்சரவை அமைக்கப்படுவதால், பதவியிழக்கும் ஏனைய அமைச்சர்கள், அவர்கள் ஏற்கனவே பொறுப்பில் இருந்த அமைச்சுக்களை மேற்பார்வை செய்யும் பணிகளை முன்னெடுப்பார்கள் என்றும் கூறப்பட்டது.

தனக்கு விசுவாசமான தனது பணிகளுக்கு உறுதுணையாக நிற்பவர்களே இந்தத் தற்காலிக அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-1)

## மீள் வாக்களிப்பு இன்று; இரண்டாயிரம் சீருடையினர் பாதுகாப்புக் கடமையில்

கொழும்பு, ஏப். 20

கண்டி மாவட்டத்தில் - நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் கும்புறுப்பிட்டி ஆகிய இடங்களுக்கான மீள்வாக்கெடுப்பு இன்று இடம்பெறுகின்றது.

காலை 7மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறும் இந்த வாக்களிப்பை ஒட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட இரண்டாயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தேர்தல் பணிகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்தினதும் பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்திய ஏழு பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் சொன்னார். விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளமையால் மக்கள் அச்சமின்றி வாக்களிப்பில் கலந்துகொள்ளலாம் என்றும் காமினி நவரட்ண மேலும் தெரிவித்தார்.

இத்தேர்தல் நடவடிக்கைகளுக்காக 650 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்

(20 பக்கம் பார்க்க)

கல்வனைஸ்ட் கூரைத் தகடுகள்
Five Star Brand
G.I. ROOFING SHEETS
6 அடி தொடக்கம் 10 அடிவரை பெற்றுக்கொள்ளலாம்
Jeysons Trading Company
123, Maha Vidyalaya Mawatha, Colombo - 13.
Contact No: 0777410503.

## மாணவன் கபிலநாத் படுகொலை வழக்கு: சந்தேக நபர்கள் நால்வர் சார்பான மனுக்களை சாவகச்சேரி நீதிவான் நேற்று நிராகரித்தார்

யாழ்ப்பாணம், ஏப். 20

சாகவச்சேரி வர்த்தகரின் மகன் கபிலநாத் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு சந்தேக நபர்கள் சார்பில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

பிரஸ்தாப வழக்கு சாவகச்சேரி நீதிவான் ரி.ஜே. பிரபாகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அப்போது, சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரினர்.

(20 பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரின் புல்லுக்குளத்துக்கும் புதுவருடத்தோடு நல்ல காலம்!



யாழ்ப்பாணம், ஏப். 20

யுத்தம் முடிவடைந்து ஏறத்தாழ ஒரு வருடம் நெருங்கி வருகிறது. இந்த பத்து, பதினொரு மாதங்களில் குடாநாட்டில், குறிப்பாக யாழ்.நகரில் எத்தனை, எத்தனையோ மாற்றங்கள். எமது கலாசா ரத்திலும் கூட மாற்றங்கள் ஏராளமே!

யாழ்.நகரின் மாற்றங்களின் வரிசையில் தற்போது எவருமே கவனிப்பாரற்றுக் கிடந்த புல்லுக்குளத்துக்கும் 'நல்ல காலம்' வந்துள்ளது! யாழ் - கோட்டை, முற்றவெளி, துரையப்பா ஸ்ரேடியம் போன்றவை அமைந்துள்ள பகுதியில் புல்லுக்குளம் காணப்படுவதால் புதுவருடத்தோடு அதற்கும் 'விடிவு' வருகிறது.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் புல்லுக்குளம் புனரமைக்கப்பட்டு, மெருகூட்டப்படுகிறது. அதன் ஒரு கட்டமாகக் குளத்தின் கரையோரப் பகுதிக்கட்டுகள் புனரமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.(ஒ-23)

# தமிழரசுக் கட்சியின் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 20

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையின் விசேட கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மார்ட்டின் வீதியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்டக் கிளைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடை பெறும் இக்கூட்டத்தில், நடந்து முடிந்த தேர்தல் தொடர்பாகவும் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட கட்சிக் கிளைகளை மீளமைக்கும் பணியை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவும் இன்றைய அரசியல் நிலை

# நீரிழிவுப் பிரிவு இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஏப். 20

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சைப் பிரிவு செயற்படத் தொடங்கியுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினரால் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவுக்குரிய மருத்துவ சாதனங்கள் பொருத்தப்பட்டன. அத்துடன் பரிசோதனைக்குரிய இரசாயனப் பொருள்களும் வந்து சேர்ந்துள்ளன.

அதைத் தொடர்ந்தே தற்போது சிகிச்சைப் பிரிவு இயங்கத் தொடங்கியுள்ளதாக வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வை. இராசரத்தினம் தெரிவித்தார்.

சிகிச்சைப் பிரிவுக்கான இரசாயனப் பொருள்கள் இல்லாததால் இயங்காமல் உள்ளதாக ஏற்கனவே உதயனில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-207)


## முகவர் தேவை (Franchise Holder)

உலகப்பிரசித்திபெற்ற Godrej, Luomanke, Bleujay, Chamber, Dortec, Sanitair Hagar, Englan, Italica இலச்சனையுடைய குளியலறைச் சாதனங்களை யாழ். மாவட்டத்தில் விநியோகிப்பதற்கு முகவர் (Franchise Holder) தேவை.

Uncommon Homes
Showroom of Global mass marketing (pvt) Ltd.
# 23, Pagoda Road,
Nugegoda.
T.P: 0772113350, 0772811170

## பதவி வெற்றிடம்

அபிவிருத்திக் கிளை : பருத்தித்துறை
பதவி : பிரதேச விற்பனை ஒருங்கிணைப்பாளர் (Area Sales Organizer)
குறைந்த பட்ச தகைமை : G.C.E (A/L) மற்றும் காப்புறுதித் துறையில் மூன்று ஆண்டுகள் அனுபவம்.
அனுகூலம் : மாதாந்த அடிப்படைத் தொகையுடன் கூடிய மேலதிக கொடுப்பனவுகள். (வணிக செயற்பாட்டின் அடிப்படையில்)

விண்ணப்பதாரர்கள் தங்களது சுயவிவரக் கோவையை 26.04.2010இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தொலைநகலில் அல்லது நேரடியாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.

Marketing Manager - LIC (Lanka) Ltd.
29/2, Sharnell Building, Visaka Road,
Colombo- 04. Fax No: 011 – 2590495.

(C/566983)

## காணவில்லை



சின்னையா செல்லத்துரை என்பவரை 16.04.2010 அன்று வெள்ளிக்கிழமையில் இருந்து காணவில்லை. இவரை காண்பவர்கள் கீழ் வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

32/6, நீக்கிலஸ் லேன்,
கச்சேரி, நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (C/566984)
தொ.பே.இல: 0776660410, 0771742415

## சுகவாழ்வுக்கான பயணம் வேலைவாய்ப்பு

JFHL

எமது நிறுவனத்தின் வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு திட்ட உத்தியோகத்தர்கள் தேவை.
ஒப்பந்த காலம் : மோதங்கள்
தகைமை : GCE O/L சித்தி Computer அறிவு
அலுவலக வேலை, களவேலை இரண்டும் ஆற்றுதல் வேண்டும்.
உரிய ஆவணங்களுடன் 23.04.2010 வெள்ளி முற்பகல் 10.30 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.
தொ.பே. இல: 021 321 6436
அன்னசத்திர லேன், பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (97192)

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ந.ஜெயபாலசுந்தரம் அவர்களின் அன்புத் தாயார்

### நடராசா செல்லம்மா

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம். (C/566985)
செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## தவறிவிட்டது

பொற்பதி வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சண்முகலிங்கம் பிறேமதாஸ் என்பவரது NPHO - 8491 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் புத்தகம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன யாழ்.நகருக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொ.பேயில் தொடர்பு கொள்ளவும்.
0771698441, 0779220816 (97193)

## வீடு விற்பனைக்கு

நல்லூர்க் கோவில் சுற்றாடலில் யாழ். மாநகரசபை எல்லைக்குள் முத்திரைச் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட அழகான வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0777432645.
எனது பக்கம் தரகர் தேவையில்லை. (97197)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. காசாளர்
02. சிட்டை எழுதுனர்
03. பார்சல் கட்டுபவர்
04. தேநீர், றொட்டி, றோல் தயாரிப்பாளர்
05. சமையல் உதவியாளர்
06. உணவு பரிமாறுபவர்

மற்றும் இதர வேலைகளுக்கும் ஆள்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். உடன் விண்ணப்பிக்கவும்.

ஹொட்டல் றொலெக்ஸ்,
340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2808 (97198)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1973இல் பிறந்த, கிரகபாவம் 13, நட்சத்திரம் மூலம், அரச உயர் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு : 0213210803 (97199)

## மரண அறிவித்தல்

### குலசிங்கம் நகுலன்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் நகுலன் நேற்று (19.04.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சிற்றம்பலம்-பாக்கியம், இராமலிங்கம் நடராஜா-சிவயோகம் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிற்றம்பலம் குலசிங்கம் மற்றும் தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், அருந்ததி, காலஞ்சென்றவர்களான தமயந்தி, மஞ்சுளா மற்றும் கோசலை (பிரான்ஸ்), இந்திரன் (கனடா) ஆகியோரின் சகோதரரும், சிவயோகன், சிறிரவீந்திரா, ராகுலன் (பிரான்ஸ்), மல்லிகா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், அபிஷேக் (கனடா), சயனுதா (கனடா) ஆகியோரின் பெரிய தகப்பனும், அர்ஜின் (W.F.P, Jaffna), தீபிகா, ஆர்த்திகா, கவீனா (பிரான்ஸ்), விதுசன் (பிரான்ஸ்), அனித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே. 0213214427 (97203)
தகவல்: தனலட்சுமி குலசிங்கம் (தாயார்).

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியலட்சுமி சண்முகலிங்கன்

எம்மை அன்புடனும், பண்புடனும் வளர்த்து நல்லறிவு ஊட்டி நல் ஆசான்களாய் அகிலத்தில் தலை நிமிர வைத்த எம் அன்புத் தாயே!

நல் மனைவியாய்-நல் மாமியாய்- நல் அப்பம்மாவாய்- அம்மம்மாவாய்- நல் மைத்துனியாய் எம்முடன் வாழ்ந்த எமது அன்புத் தெய்வமே! எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உம் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது. என்றென்றும் உம் நினைவுடனேயே வாழும்....

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர், மைத்துனிமார்.

சாலை வீதி, கற்கோவளம், பருத்தித்துறை. (97251)
தகவல்: சு.ரவீந்திரநாதன், (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்.)

## பூபதி பேக்கரி மிசின்

ஜேர்மனியில் பாவித்த பேக்கரி மிசின்களும், புதிய தாய்வான் பேக்கரி மிசின்களும் உடன் விற்பனைக்கு






தொடர்பு:
பூபதி காட்சியறை
யாழ்.மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே: 0777427777, 0213001000.


# சாரதிக்கு அபராதம் ரூபா 25 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஏப்.20

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகனத்தின் சாரதிக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத்தொகைசெலுத்தத் தவறினால் ஒரு மாத சிறைத் தண்டனை அனுப[illegible] (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் 'சொதப்பல்' போக்குத் தொடர்கிறது

இலங்கை விவகாரத்தை - குறிப்பாக ஈழத் தமிழர் விவகாரத்தை - கையாள்வதில் இந்தியாவின் 'சொதப்பல்' போக்கு மீண்டும் ஒரு தடவை நிரூபணமாகியிருக்கின்றது. - தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் இந்தியா வருவதற்கு அனுமதி அளித்து விட்டுப் பின்னர் விமானத்தை விட்டு இறங்கவே விடாமல் - அனுமதிக்காமல் - அவரைத் திருப்பி அனுப்பிய குளறுபடித்தனம் மூலம் இம்முறை நடந்தேறியுள்ளது.

இப்படி இலங்கை விவகாரத்தைக் குளறுபடித்தனமாகக் கையாள்வது இந்தியாவின் வழமைப்பாங்கு அன்றி வேறில்லை.

எண்பதுகளில் இலங்கை விடயத்தை மிக மோசமாகக் கையாண்டு பேரவமானத்துடன் இலங்கையிலிருந்து மூடை, முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு இந்தியப் பேரரசு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டதற்கும் கூட இந்திய அதிகார வர்க்கத்துக்குள் நீடித்த இந்தக் குளறுபடித் தனமே பிரதான காரணம் என்பது அக்காலகட்டத்தில் இவ் விடயங்களில் சம்பந்தப்பட்டிருந்த பலருக்கும் தெரிந்த விடயம்தான்.

புதுடில்லியிலும் சென்னையிலும் இலங்கை விடயத்தை - இலங்கைத் தமிழர் தரப்பு சம்பந்தப்பட்ட விவகாரங்களை - கையாளும் பல தரப்புகள் இருந்தன; இருக்கின்றன. உள்துறை அமைச்சின் கீழ் இயங்கும் ஐ.பி.(புலனாய்வுப் பிரிவு), சி.பி.ஐ.(மத்திய புலன் விசாரணைப் பிரிவு) மற்றும் 'றோ', வெளிவிவகார அமைச்சு, பிரதமர் அலுவலகம், பாதுகாப்பு அமைச்சு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு என பல தரப்புகள் இலங்கை விவகாரத்தைத் தத்தமதுபாட்டில் கையாண்டு குழப்பி அடித்தமையை எண்பதுகளில் தரிசித்தோம்.

உதாரணத்துக்கு ஒரு சம்பவம். இந்திய அமைதிப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் கொடூர யுத்தம் மூண்டிருந்த காலம். புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சமரசம் பேசும் எத்தனமாக, அச்சமயம் தளபதி கிட்டுவுடன் தமிழகத்தில் இருந்த ஜொனி என்ற போராளியை இந்தியாவின் ஒரு புல னாய்வுப் பிரிவு, விசேட விமானத்தில் வவுனியாவுக்குக் கூட்டிவந்து வவுனியா காடு வழியாக முல்லைத்தீவுப் பகுதிக்கு அனுப்பி வைத்தது. இந்தியத் தரப்பிடமிருந்து பிரிந்து, தனித்து முல்லைக் காட்டுக்குள் சென்ற ஜொனி அங்கு தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார்; பேசினார். ஆக்கபூர் வமான சில திட்ட யோசனை வரைபுகளுடன் வவுனியா நோக்கிப் புறப்பட்டார். இந்தியாவின் மற்றொரு புலனாய்வுப் பிரிவு இத்தகவலை முற்கூட்டியே அறிந்து, காட்டுக்குள் பொறிவைத்துக் காத்திருந்து ஜொனியை மடக்கி, சுட்டுக் கொன்றுவிட்டு ஆவணங்களைக் கைப்பற்றி, தனது எஜமானர்களுக்கு - தனது தலைமைக்கு - தனது திறமையையும் விசுவாசத்தையும் காட்டிக்கொண்டது. ஆனால் ஜொனி மூலமாக எடுக்கப்பட்ட சமரச முயற்சி அவரது உயிரோடு அப்படியே செயலிழந்துபோனது.

இப்படி, இந்திய அதிகார வர்க்கம் தனக்குள் பல பிரிவுகளாக நின்று, தன்னையும் குழப்பி, இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்துக்கான பல்வேறு நன்முயற்சிகளையும் குழப்பி நிற்பதுதான் நமது பேரவலமாகும். இதுவே வரலாற்றுப்பட்டறிவும் தொடர்கதையுமாகும்.

அன்னை பார்வதி வேலுப்பிள்ளை விடயத்திலும் இந்தியத் தரப்பின் இத்தகைய குளறுபடித்தனமே அரங்கேறியிருக் கின்றது என்பது வெளிப்படை. அதை அறிவதற்கு இது தொடர்பான சம்பவங்களின் கோவையைப் பார்க்க வேண்டும்.

அன்னை பார்வதிக்கும் அவரது உதவியாளருக்கும் மலேஷியாவில் உள்ள இந்தியத் தூதரகம் கடந்த வெள்ளியன்றுதான் இந்தியா செல்ல விஸா வழங்கியது. அன்று இரவே அவர்கள் சென்னை பயணமானார்கள். நள்ளிரவே அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

ஆனால் அன்னை பார்வதி இந்தியா செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றார் என்ற செய்தியை, மலேஷியாவில் உள்ள இந்தியத் தூதரகம் கடந்த வெள்ளியன்று அவருக்கு விஸா வழங்குவதற்கு முன்னரே 'உதயன்', 'சுடர் ஒளி' நாளிதழ்கள் முற்பக்கத்தில் மிக உறுதியான செய்தியாக வெளியிட்டுவிட்டன.

கடந்த வியாழனன்று இரவு அச்சான 'உதயன்', 'சுடர்ஒளி' நாளிதழ் களின் முற்பக்கத்தில் 'பிரபாகரனின் தாயார் இந்தியா வர அனுமதி' என்ற தலைப்பில் 'சென்னை' இடக்குறிப்பிட்டு அச்செய்தி பிரசுரமாகியிருந்தது.

*.........பிரபாகரனின் தாயார் மருத்துவக் கவனிப்புக்காக இந்தியா வரவிரும்பினால் அதற்கு இந்தியா அனுமதி அளிக்கும் என்று சென்னை வட்டாரங்களில் இருந்து தெரி யவருகின்றது. இதற்கான இணக்கத்தை இந்தியா ஏற்கனவே பிரபாகரனின் தாயாரின் பராமரிப்பாளருக்குத் தெரியப்படுத்தி விட்டதாகவும் அறியவந்தது.*

*பிரபாகரனின் தந்தையார் திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் மறைவை அடுத்து, வல்வெட்டித்துறையில் தங்கியிருந்த பார்வதி வேலுப்பிள்ளை பின்னர் கொழும்பு ஊடாக வெளிநாடு ஒன்றுக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.*

*அவர் தற்சமயம் மலேஷியா அல்லது சிங்கப்பூரில் தங்கியிருக்கிறார் என்று கூறப்படுகின்றது.*

*''மருத்துவக் கவனிப்பு என்ற மனிதாபிமான அடிப்படையில் அவருக்குத் தமிழகத்தில் தங்கியிருப்பதற்கான அனுமதியை இந்தியா வழங்க முன்வந்துள்ளது. அதற்கான தகவல், சம்பந்தப்பட்ட தரப்புக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பிரபாகரனின் தாயார் எந்நேரமும் இந்தியா வரலாம். அதற்குத் தடையோ, இடைஞ்சலோ இல்லை. ஆனால், அவரைக் கூட்டி வரும் சாக்கில் முன்னாள் எம்.பியான சிவாஜிலிங்கம் நாட்டுக்குள் வர அனுமதிக்கப்படமாட்டார்.'' - என இந்திய அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.*

- இப்படி அந்தச் செய்தியில் 'உதயன்', 'சுடர் ஒளி' நாளிதழ்கள் உறுதியாகத் தகவல் வெளியிட்டிருந்தன.

பிரபாவின் தாயாருக்கு விஸா அனுமதி அவரின் கையில் வழங்கப்படுவதற்கு முன்னரே அது பற்றிய தகவலை இந்தியாவின் அதிகாரபூர்வ வட்டாரம் ஒன்றிடமிருந்து 'உதயன்', 'சுடர் ஒளி' பெற்றுக்கொள்ள முடிந்தது - அதுவும் திட்டவட்டமான, உறுதியான செய்தியாக.

அப்படி அவருக்கு அனுமதி அளித்துவிட்டு, கடைசி நேரத்தில் அவரை விமானத்திலிருந்து இறங்கவிடாமல் திருப்பி அனுப்பிய குளறுபடித்தனத்துக்கு இந்திய அதிகார வர்க்கத்துக்குள் இருக்கும் வழமையான தலைமைப் பிளவே - அதிகாரப் போட்டியே - காரணம் என்பது இப்போது உள்வீட்டுத் தகவலாகக் கிடைத்திருக்கின்றது.

இதில் பரிதாபத்துக்குரிய - வேதனைக்குரிய - விடயம் என்னவென்றால், புதுடில்லி வழங்கிய அனுமதிக்கு கடைசி நேரத்தில் முட்டுக்கட்டை போட்டு அதனைக் குழப்பியவர் தமிழின் பெயரால் அரசியல் நடத்தும் தமிழகத் தலைவர் ஒருவர் என்பதுதான்!

அந்தப் பின்னணி குறித்து பிறிதொரு ஆசிரிய தலையங்கப் பத்தியில் ஆராய்வோம்.

# கடும் வெப்பநிலை இன்னும் இரு வாரங்கள் குடாநாட்டில் தொடரும் சாத்தியம்!

## வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.20

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை இன்னும் இரு வார காலத்துக்கு தொடரும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன என்று திருநெல்வேலியிலுள்ள யாழ்.மாவட்ட வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி வே.புஷ்பநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு-

இந்தமாதம் நான்காம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரையும் இலங்கைக்கு நேரே சூரியன் உச்சம் கொடுக்கும் காலப்பகுதியாக இருந்தது. சூரியன் உச்சம் கொடுக்கும் குறித்த காலப்பகுதியைப் போன்றே தற்போதும் அதிக வெப்பநிலையே தொடர்கிறது. இந்தநிலை மேலும் இருவார காலத்துக்குத் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாதம் ஆரம்பம் தொடக்கம் 19 ஆம் திகதி வரையும் 35-36 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. சராசரி வெப்பநிலையை விட இது அதிகமாகும்.

இந்த மாதத்திற்குரிய மழை வீழ்ச்சியின் சராசரி அளவும் மிகவும் குறைவடைந்துள்ளது. இந்த வாரம் 18.9 மில்லி மீற்றர் மழையே பதிவாகியிருக்கிறது. ஆனால் கடந்த வருடம் ஏப்பிரல் மாதத்தில் 204.4 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. இந்த மாதத்துக்கான சராசரி மழை வீழ்ச்சியின் அளவு 52.3 மில்லி மீற்றர் ஆகும்.

தற்போது நிலவும் இந்த வெப்ப கால நிலையைத் தொடர்ந்து மாலை வேளையில் இடி யுடன் கூடிய மழை ஆங்காங்கே பெய்யக் கூடிய சாத்தியக் கூறுகளும் உள்ளன -என்றார்.

(4-14)

# அரச ஊழியர்களுக்கான ஆங்கிலமொழிப் பயிற்சி

நாவற்குழி, ஏப்.20

அரசதுறை உத்தியோகத்தர்களின் ஆங்கிலமொழி ஆற்றலை வளர்க்கும் நோக்கில் ஜி.ரி.இசற் நிறுவனம் நடத்தும் ஒரு மாத கால பயிற்சி நெறி நேற்றுத் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகியது.

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகிய இப் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்விற்கு மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளரும், இக்கற்கை நெறியின் பதில் பணிப்பாளருமாகிய வி.ரி. செல்வரத்தினம் தலைமை வகித்தார்.

ஒருமாத காலம் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் மத்திய, மாகாண அரச துறையைச் சேர்ந்த 40 உத்தியோகத்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

பயிற்சியின் வளவாளர்களாக பிரிட்டிஷ் கவுன்சிலைச் சேர்ந்த இரு பிரித்தானிய விரிவுரையாளர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜி.ரி.இசற். நிறுவனம் கடந்த 4 வருடங்களாக இந்த ஆங்கிலப் பயிற்சி நெறியை நடத்தி அரசதுறை உத்தி யோகத்தர்களின் ஆற்றலை மேம்படுத்தி வருகின்றது. (50-121)

## புது வருடத்தையொட்டி

# மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே புதிய நாணயத்தாள்கள் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப்.20

புதுவருடத்தை ஒட்டி மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே புதிய நாணயத் தாள்கள் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் புதிய நாணயத்தாள்கள் சகல வங்கிகளுக்கும் பகிர்ந்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

குறைந்தளவு நாணயத்தாள்களே வந்ததால் வாடிக்கையாளர்கள் பலரும் வங்கிகளுக்குச் சென்று அவற்றை பெறமுடியாது ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

புதுவருடத்தை ஒட்டியும் கைவிஷேடம் வழங்குவதற்காகவும் புதிய நாணயத் தாள்களைப் பெறுவதற்கு சிலர் வங்கிகளுக்கு அலைந்து திரிந்ததையும் காணமுடிந்தது.

(04-224)

# கீரிமலைத் தீர்த்தக் கேணிப் பகுதியைப் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்துக!

## மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப். 20

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலைப் புனிதத் தீர்த்தக்கேணி மற்றும் அதனை சூழ உள்ள சுற்றாடல் பகுதியை புனிதப் பிரதேசமாகப் பிரகட னப்படுத்த வேண்டும்.

இவ்வாறு பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தீர்த்தக் கேணியில் நீராட வரும் மக்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதனைவிட இறந்தவர்களுக்கான பிதிர்க்கடன் நிறைவேற்றும் கிரியைகளும் தீர்த்தக் கேணியின் மறுபுறத்தில் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் நகுலேஸ்வர ஆலயத்திலும் காலை தொடக்கம் மாலை வரை பூசைவழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஆனால் இவற்றையெல்லாம் கருத்திலெடுக்காது சிலர் குறிப்பாக தென்பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளாக வருவோர் இந்தப் புனிதப் பிரதேசத்தில் மாமிசம் மற்றும் மதுபானம் என்பவற்றைப் பயன் படுத்துகின்றனர்.

எனவே தெய்வீகச் சூழல் மிக்க இந்தப் பிரதேசத்தினை புனித பிரதேசமாக அறிவிக்க வேண்டும் - என்றும் மக்கள் சுட்டிக்காட்டினார்கள்.

(04-224)

# கலைஞர் கல்வயலுக்குப் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 20

2009 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருது பெற்ற கவிமாமணி கல்வயல் வே.குமாரசாமிக்கு தென்மராட்சிக் கலாமன்ற ஆதரவில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது. தென்மராட்சி கலைமன்றக் கலாசார மண்டபத்தில் (சாவகச்சேரி) எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்விற்கு மன்றத் தலைவர் க.கேதீஸ்வரன் தலைமை வகிப்பார்.

ஆசியுரைகளை கலாபூசணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் , வண.பிதா கே.ஜே.டபிள்யூ. தேவசகாயம் ஆகியோர் வழங்குவர். தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்கந்தமூர்த்தி, தேசிய கலை இலக்கிய பேரவைப் பொதுச் செயலாளர் சோ.தேவராஜன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு, தாயகம் பிரதம ஆசிரியர் க.தணிகாசலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.இரகுபரன் நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றுவார்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள 'பாட்டுத்திறத்தாலே' என்னும் தலைப்பில் அமைந்த கவியரங்கத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் ச.மார்க்கண்டு, சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் வே. உதயகுமார், தமிழாசிரியர் த. நாகேஸ்வரன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் பங்கேற்கின்றனர். (50-55-207)

# மனதாரச் சேவையாற்றுவதன் மூலமே சமூகத்தின் நன்மதிப்பைப் பெறமுடியும்

## சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி உரை

யாழ்ப்பாணம், ஏப்.20

சமூகத்திற்கு மனத்திருப்தியுடனும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்றவற்றை அனுசரித்தும் சேவையாற்றுவதே சிறந்தது. அவ்வாறு சேவையாற்றுவதன் மூலமே அந்தச் சமூகத்தின் நன்மதிப்பை பெற முடியும்

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவி திருமதி ருக்குமணி ஆனந்தவேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமரர் நீர்வையூர் கா.சிவபாலனின் நினைவஞ்சலிப் பேருரைக்கு தலைமை வகித்து உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நீர்வேலிப் பிரதேசத்தில் பல்வேறு தரப்பிலுமான அமைப்புக்களில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து மண்ணுக்குச் சிறந்த முறையில் சேவையாற்றியவர்தான் அமரர் சிவபாலன்.

நாங்கள் ஒரு கிராமத்திற்கு எவ்வாறு சேவைகளை மேற்கொள்கின்றோமோ அதற்கேற்பவே அப்பிரதேச மக்களின் மனங்களை நிறைவடையச் செய்து நீங்கா இடம்பிடிக்க முடியும்.

கடமையோடும் சேவை மனப்பாங்குடனும் நாம் சேவையாற்ற வேண்டும்.

ஒரு நகரத்திலோ, கிராமத்திலோ பல்வேறு தரப்பட்ட குறைபாடுகள் இருக்கும். இந்தக் குறைபாடுகளை இனங் கண்டு அவற்றிக்கு பரிகாரம் காண்பது அந்தப் பிரதேசங்களில் இருக்கும் அமைப்புக்களைச் சார்ந்தது.

நாம் பதவிக்காகவும், கதிரைக்காகவும் பெரியளவில் இருக்கக் கூடாது. எமக்குத் தரப்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்து மக்களின் மனங்களை நிறைவடையச் செய்ய வேண்டும் என்றார். (04-224)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 8 | 21.04.2010 |
| | புதன்கிழமை |
| திதி | : சப்தமி |
| | மு.இ. 11.29 வரை |
| நட்சத்திரம் : | புனர்பூசம் |
| | பி.ப.03.16 வரை |
| சுபநேரம் | : 04.31 - 06.01 வரை |
| ராகுகாலம் | : 12.01-01.31 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சியறைக்கான இடம் தேவை**

அதி நவீனகுளியலறைச் சாதனங்களை யாழ்.மாவட்டத்தில் காட்சிப்படுத்துவதற்கு யாழ்.நகருக்குள் வசதியான இடம் தேவை.

உடனடி தொடர்புகளுக்கு:
தொ.பே 0772113350,
0772811170.


## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம் - திருநெல்வேலி

மேற்படி உணவகத்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணப்பல்கலைக் கழக பதிவாளர் பணிமனையில் 2010.05.05ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக 1000 ரூபா உம் மீளளிக்கப்படாத கட்டணமாக 200 ரூபா உம் தனித் தனியாக பல்கலைக்கழக நிதிக் கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'உணவகக் கேள்வி' எனத் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் நலச் சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி/566981)

## ஆசிரியர்களுக்கான தரவட்டக் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ். கல்வி வலயப் பாட்சாலைகளில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இடையே உருவாக்கப்பட்டுள்ள தரவட்டத்தின் ஏற்பாட்டில், யாழ். கல்விவலய அனுசரணையுடன் நாளை புதன்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை, யாழ். கல்விவலய ஆசிரியர்வள நிலையத்தில் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

இக்கருத்தமர்வில், புதிய பாடத்திட்ட விரிவாக்கங்கள் பற்றியும், செயல்முறை கற்பித்தல் பற்றியும், கருத்துரைகள் இடம் பெறவுள்ளன. இக்கருத்தரங்கை தேசிய கல்வி நிறுவன நாடகமும் அரங்கியலும் பாட இணைப்பாளர் எஸ்.செல்வகுமாரும், கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கமும் வழிநடத்தவுள்ளனர்.

இக்கருத்தமர்வில் யாழ். கல்வி வலயத்தில் தரம் 10-13 வரை அரங்கியல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

ஆர்வமுடைய ஏனைய வலய ஆசிரியர்களும் இக்கருத்தமர்வில் கலந்து கொள்ள முடியுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-1)

## உலக மலேரியா தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 20

உலக மலேரியா தினத்தை ஒட்டி யாழ். பிராந்திய மலேரியா தடைப்பகுதியினரால் நடத்தப்பட்ட கட்டுரை, சித்திரப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:-

**கட்டுரைப்போட்டி**

திருநாவுக்கரசு பிரணவன் - 12 சி, ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை., செல்வி ஜெயசேகரம் டென்சி - பாலம் இல்லம், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.; திருமதி க. குலநாயகம் - விக்ரோறியா கல்லூரி, சுழிபுரம்.

**சித்திரப்போட்டி**

செ. ஜெகன் - பாலசிங்கம் விடுதி, யாழ் பல்கலைக்கழகம்., சண்முகம் நிருபராஜ் - பாலசிங்கம் விடுதி, யாழ்.பல்கலைக்கழகம்., அருளம்பலம் பிரபாகரன் - திருநெல்வேலி.

(ஒ-1)

## மரண அறிவித்தல்



### திருமதி. சோமசுந்தரம் சத்தியவதி

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சோமசுந்தரம் சத்தியவதி அவர்கள் 17.04.2010 சனிக்கிழமை அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லமுத்து (கொத்தாசி) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான புனிதவதி, இலங்காபதி மற்றும் நல்லகுணவதி, தர்மகுணவதி, அம்பிகாபதி ஆகியோரின் அன்புச்சகோதரியும், நல்லையா மற்றும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, நடராசா (C.T.B) ஆகியோரின் மைத்துனியும், ஆனந்தராஜா (சந்திரன் C.T.B) ஆனந்தபுஸ்பராணி (இந்திரா), சற்குணராசா (ராசன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், கமலவேணி, நடராசா, தபோநிதி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.04.2010 வியாழக்கிழமை காலை 8.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 10.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : குடும்பத்தினர்,**
**140, முகாந்திரம் வீதி, கொள்ளுப்பிட்டி.**


UNION BANK

# VACANCIES

Union Bank of Colombo Limited has in its strategic redirection determined the need to integrate with development policies of the Country. In its rapid expansion plans the Bank intends increasing its branch network and broadening the scope of banking and financial services to its growing clientele. Accordingly the Bank requires to recruit staff for the following vacancies.

**Assistant Manager-Vavuniya Branch**

Candidates must have at least 5 years experience at the executive level in a Bank having covered overall banking operations, credit and other related areas.

They must have a flair for excellent customer relations with the ability to assist in business development activities.

**Officers -Chunnakam & Mannar Branches**

Candidates must have thorough knowledge of banking operations including the process of cash management together with overall knowledge in banking.

Hands on experience of at least 3-5 years in a Bank is necessary.

Applications must be forwarded with names of two non-related referees within 7 days of this advertisement to reach the following address. The post applied for must be marked at the top left hand corner of the envelope.

**Vice President,**
**Human Resources, Admin & Business Support,**
**Union Bank of Colombo Ltd,**
**15 A, Alfred Place,**
**Colombo -3.**

(சி/566983)


## மரண அறிவித்தல்



### இராமநாதன் புஸ்பயோகேந்திரன்

(உரிமையாளர் 'வெங்டேஸ்வரா'
202 குமார வீதி, கொழும்பு-11, )
பொருளாளர், இணுவில் மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
கொழும்புக்கிளை)

இணுவில் கிழக்கு தியேட்டர் வீதியைப் பிறப்பிடமாகவும் 2/2 A புளொக், அரச தொடர்மாடி, பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்டிருந்த இராமநாதன் புஸ்பயோகேந்திரன் 18.04.2010 அன்று காலமானார். அன்னார் அமரர் சங்கரப்பிள்ளை இராமநாதன் அன்னலட்சுமி தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், நவரட்ணராஜா, அமரர் இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், கார்த்திகாவின் அன்புக் கணவரும், ராதிகேஸ் (மாணவன், கொழும்பு றோயல் கல்லூரி), ரதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராஜலிங்கம், அமரர் புஸ்பேந்திரா, புஸ்பயோகேந்திரி, புஸ்பராணி (ஜேர்மனி), குகேந்திரன் (ஜேர்மனி), சங்கரநாதன் (சங்கர் ரேட்ஸ், கொழும்பு-11), அமரர் உருத்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுந்தரலீலாவதி, கதிர்காமநாதன் (வவுனியா), அமரர் விவேகானந்தன் (ஜேர்மனி), தயாளினி (ஜேர்மனி), தர்மினி, யசோதரா நடராஜா, அமரர் மனோராஜ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரகதீஸ்வரன், ரஜந்தி, ரட்ணா, மஞ்சு, செந்தூரன், பிரசா, மீரா ஆகியோரின் சிறிய தந்தையும், பத்மசுதன், தினேஸ், சுகானா, லக்ஸனா, ஆகியோரின் பெரிய தந்தையும் கலைவாணி, காயத்திரி, தர்மிகா, ரஸ்னா, டயானா, பிரதீபா, கிருத்திகா, ஆகியோரின் மாமனாரும் நடராஜா (முத்தையா பிள்ளை அன்ட் கோ) வின் சகலனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 21.04.2010 புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் ஜெயரட்ண மலர்ச்சாலையில் (பொரளை) நடைபெற்று பி.ப. 4.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (அன்னாரது பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று செவ்வாய்கிழமையும் இல. 83/9, 37 ஆவது ஒழுங்கையில் உள்ள இல்லத்தில் வைக்கப்படும்

**தகவல்: இ. சங்கரநாதன் (சர்வா)**
**2502010, 0777-555391**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன சிறுவர் வைத்தியசாலை அமைக்க 80 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்க!

## வடமாகாணப் பிரதம செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.20

வடக்கிற்கான சிறுவர் வைத்தியசாலையை நவீன முறையில் அமைக்க 80 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யவேண்டும்.

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமியை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு -

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிர்வாகத்திற்கு உட்பட்ட வகையில் -

குடிதண்ணீர், நிலவளம் உள்ள சங்கானை மற்றும் தெல்லிப்பழைப் பகுதிகளில் 100 படுக்கைகள் கொண்ட சிறுவர் வைத்தியசாலை அமைக்க இடமுண்டு என்றும் -

இத்திட்டத்தினை நிறைவேற்ற 80 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து -

மருத்துவ ஆளணியினரையும் உரிய காலத்தில் வழங்கி உதவவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இதேவேளை -

வடக்கில் அமைக்கப்படவுள்ள நவீன சிறுவர் வைத்தியசாலையின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதியின் சிரேஷ்ட செயலாளர் லலித் வீரதுங்க சம்பந்தப்பட்ட அமைப்பின் தலைவரை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நவீன சிறுவர் வைத்தியசாலை நிதி ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக, வடக்கு மாகாண பிரதம செயலாளரிடம் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 22.07.2009 அன்று இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு 8 மாதங்கள் ஆகியும் இதுவரை எவ்வித முன்னேற்றமும் இன்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-302)

## கிளிநொச்சியில் வெள்ளியன்று 'மினி சூறாவளி'

யாழ்ப்பாணம்,ஏப்.20

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் மினி சூறாவளியுடன் கூடிய பலத்த மழை பெய்துள்ளது.

திடீரெனப் பெய்த மழையை அடுத்து மினி சூறாவளிக் காற்றும் இப்பகுதியில் வீசியது.

இந்த மினி சூறாவளிக் காற்றினால் பயன்தரும் மரங்கள் பலவும் சாய்ந்து முறிந்துள்ளன.

அதனைவிட மீளக்குடியமர்ந்த மக்களின் குடியிருப்புக்கள் சிலவும் சேதமுற்றுள்ளன. (04-224)





'ஏஸியா எக்ஸ்சிபிசன் கொன்வென்சன்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த 17ஆம் திகதி ஆரம்பமான கண்காட்சியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிமால் லியுகே, கலர்கோன் றாவ்விங் ரைல்ஸ் நிறுவன முகாமையாளர் யு.எல்.செனவிரத்தின, ஜனசக்தி அசூரன்ஸ் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் ஆ.ஆனல்ட் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதல் மூன்று படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் கண்காட்சியினைப் பார்வையிடுவதை அடுத்துள்ள படத்தில் காணலாம். (படங்கள் : ரட்ணம், உமா)

## பயணிகளோடு கண்ணாம்பூச்சியாடும் சுன்னாகம் வீதியோரக் கற்குவியல்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.20

சுன்னாகம் சூராவத்தை, சுன்னாகம் கிழக்குப் பகுதிகளில் வீதிகளின் ஓரத்தில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கற்குவியல்களால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சுன்னாகம் பிரதேச சபையினர் வீதிகளைச் செப்பனிடும் பொருட்டு சூராவத்தை, சுன்னாகம் கிழக்கு ஆகிய பகுதிகளில் கற்களைக் குவித்து வைத்துள்ளனர். ஆனால் மாதக்கணக்காகியும் வீதி வேலைகள் ஆரம்பிக்கப்படாமையினால் கற்குவியல்கள் சிதைந்து வீதிகளை ஆக்கிரமித்துக் காணப்படுகின்றன. இதன் காரணமாக இந்த வீதிகளில் பயணிக்கும் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய நிலையில் உள்ளனர். மிதிவண்டிகளில் செல்வோர் கீழே இறங்கி நடந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. இரவு வேளைகளில் இந்த வீதியினூடாகப் பயணிப்போரின் நிலைதான் பரிதாபகரமானது. இவர்கள் பயணிக்கும் இரு சக்கர வாகனங்கள் கற்குவியல்களில் மோதி சறுக்கி விழுவதனால் பலர் காயமுற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சுன்னாகம் பிரதேச சபையினர் இனியும் கால தாமதம் செய்யாது குறிப்பிட்ட வீதி வேலைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமெனப் பிரதேச மக்கள் எதிர்பார்க்கின்றனர். (க-4)




## யாழ்.நகருக்கு அடுத்ததாக நெல்லியடி வங்கிகளின் நகரமாக மாறியுள்ளது

வடமராட்சி,ஏப்.20

நெல்லியடியில் அரச, தனியார் வங்கிகள் உட்பட 7 வங்கிக்கிளைகள் தற்போது செயல்பட்டுவருகின்றன.

யாழ்.நகருக்கு அடுத்ததாக புறநகர்ப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையான வங்கிக் கிளைகள் நெல்லியடி பட்டினத்திலேயே அமைந்துள்ளன.

இப்பட்டினத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகிய அரச வங்கிக் கிளைகளுடன், ஹற்றன் நஷனல் வங்கி, கொமர்ஷல் வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி ஆகிய நான்கு தனியார் வங்கிக்கிளைகளும் இயங்கி வருகின் றன.

வடமராட்சிப் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையான வங்கிக் கிளைகளைக் கொண்ட இடமாகவும் நெல்லியடி மாறியுள்ளது. (04-236)

## பயணிப்போரை வீழ்த்துவதற்காக வாய்பிளந்து காத்திருக்கும் மதகு

யாழ்ப்பாணம்,ஏப்.20

நாயன்மார்கட்டிலிருந்து ஏ-9 வீதிக்குச் செல்லும் செம்மணி வீதியில் உள்ள மதகு ஒன்று கடந்த பல மாதங்களாகச் சேதமடைந்த நிலையில் இருப்பதாகப் பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

செம்மணி இந்து மயானத்திற்கு அண்மையாகக் காணப்படும் சேத மடைந்த மதகின் மேல் சேதமடைந்ததற்கான அடையாளக் குறிவைக்கப்பட்டுள்ளதே தவிர இதனைத் திருத்துவதற்கான நடவடிக்கை எதனையும் யாழ். மாநகர சபை இதுவரைமேற்கொள்ளவில்லை எனவும் கூறப்படுகிறது.



தற்போது ஏ-9 வீதியில் வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதால் பலர் யாழ்.நகர் செல்வதற்கு இவ்வீதியையே தற்போது பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் இரவு வேளைகளில் இவ்வீதியால் செல்வோர் இந்த மதகில் உள்ள குழியில் வீழ்ந்து விபத்துக்குள்ளாக நேரிடுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே இந்தவிடயத்தில் யாழ். மாநகர சபை உடனடிக் கவனமெடுத்து இதனைச் சீர் செய்யவேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (4-288)

## நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் ஈடுபட புதிய படகு விரைவில் தருவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.20

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்துவதற்கென புதிய படகு ஒன்று விரைவில் தருவிக்கப்படவுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

சுமார் 100 பயணிகளை ஏற்றக் கூடியதாக இந்தப் படகு நவீன முறையில் கட்டப்பட்டு வருகின்றது.

இந்தப் புதிய படகை எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் இங்கே தருவித்துச் சேவையில் அமர்த்துவதற்கான துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (04-224)

## எரிபொருள் நிரப்பும் கருவி பழுதடைந்ததால் புங்குடுதீவில் பெற்றோல் விநியோகம் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.20

புங்குடுதீவிலுள்ள எரிபொருள் நிலையத்தின் பெற்றோல் நிரப்பும் கருவி பல மாதங்களாகப் பழுதடைந்த நிலையில் உள்ளதால் பாவனையாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவுக்கான எரிபொருள் விநியோகத்தை புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்கம் மேற்கொண்டு வருகின்றது. போதிய எரிபொருள்கள் கையிருப்பில் உள்ள போதும் தாங்கியில் இருந்து பெற்றோலை வெளியே எடுப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கருவி பல மாதங்களாக பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் இப்பகுதி வாகனப் பாவனையாளர்களும், நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களுக்கு வந்து செல்லும் உல்லாசப் பிரயாணிகளும் எரிபொருள்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஆகவே கால தாமதம் செய்யாது பழுதடைந்திருக்கும் பெற்றோல் நிரப்பு கருவியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (04-க-188)

## யாழ்.-பருத்தித்துறை வீதி அகலமாக்கல்; மூன்றாம் கட்டப்பணிகள் ஆரம்பம்

வடமராட்சி,ஏப்.20

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மூன்றாம் கட்டமாக வல்லை - பருத்தித்துறை வீதியை அகலமாக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இப்பிரதான வீதியை அகலமாக்கும் திட்டத்தின் கீழ் முதலாம் கட்டமாக வல்லை தொடக்கம் புத்தூர்ச் சந்திவரையான வீதி அகலமாக்கும் பணி முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. இப்பணியில் அரைவாசி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து புத்தூர்ச் சந்தி தொடக்கம் இருபாலைச் சந்திவரை இரண்டாம் கட்டமாகவும், வல்லை தொடக்கம் பருத்தித்துறை வரை மூன்றாம் கட்டமாகவும் வீதியை அகலமாக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இருபாலை தொடக்கம் பருத்தித்துறை வரையான வீதி அகலமாக்கும் பணி இவ்வருடத்திற்குள் நிறைவுறும் என யாழ். வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (04-236)

## வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு விரைவில் 300 பரல்களில் தார் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஏப்.20

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு விரைவில் 300 பரல்களில் தார் எடுத்து வரப்படவுள்ளது.

இந்தத் தாரைப் பயன்படுத்தி சேதமடைந்திருக்கும் குடாநாட்டின் பிரதான வீதிகள் பலவும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது கையிருப்பில் உள்ள தார் முடிவுற்றுள்ளதால் வீதிகள் சில தார்க் கலவையைப் பயன்படுத்தியே சீர்செய்யப்பட்டு வருகின்றன.

இந்தத் தார்க் கலவையும் வவுனியாவில் இருந்தே எடுத்து வரப்படுகின்றது.

தார்க்கலவை மூலம் சேதமடைந்திருக்கும் பகுதிகள் அடைக்கப்பட்டு வருகின்றன. எனினும் தார்க்கலவை மூலம் செப்பனிடப்பட்ட பகுதிகளில் சில நாள்களிலேயே மீண்டும் குழிகளாகி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.பல்கலைக்கழகத்தில் முதன்முறையாக பொதுக்கலைமாணிப் பட்டம் பெற்ற இனிய வாழ்வு இல்லத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இனிய இல்ல அலுவலகத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பட்டதாரிகளான ரா.ராஜ்குமார், ஆ.அனுராதா, யசோதரன், பொ.சிவகுமார் ஆகியோர் முறையே கரித்தாஸ் - கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் அருட்திரு சி.கி.ஜெயக்குமார், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் கிருபாகரன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.அருந்தாகரன், யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோரால் கௌரவிக்கப்படுவதனைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: உமா)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீரர்களை ஊக்குவிக்க வேண்டியவர்கள் இப்படியும் செய்யலாமா? இதற்கு எம்மவர்களும் துணை போகின்றனரா?

யாழ். குடா நாட்டில் அண்மையில் நடந்து முடிந்த மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளதோடு பலரது விமர்ச னங்களுக்கும் உள்ளாகியுள்ளது.

இதேவேளை, மேற்படி போட்டி யாழ். குடாநாட்டு இளைய தலை முறையினரிடையே நல்ல பண்பையும், நம்பிக்கையையும் வளர்ப்பதோடு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக விரக்தியையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது என் றால் அது மிகையாகாது.

குறிப்பிட்ட மரதன் ஓட்டப்போட்டியில் ஆகக்குறைந்தது 5000 பேரையாவது கலந்துகொள்ளச் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் . மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் அமைப்பாளர் கள் எதிர்பார்த்ததற்கும் மேலாக அதிகமானோர் இந்தப் போட்டியில் கலந்துகொண்டனர். இந்தப் போட்டியை நடத்திய நிறுவனம் தனது இலக்கை இலகுவாக அடைந்து விட்டது என் றாலும் மறுபுறத்தில் பலத்த விமர்சனத்திற்கும், கண்டனத்துக்கும் ஆளாகியுள்ளது என்ற உண்மையைக் கூறத் தான் வேண்டும்.

மொழிப் பிரச்சினை காரணமாக இப் போட்டிக்கான ஏற்பாடுகளில் உள்ளூரைச் சேர்ந்த பலர் இணைக்கப் பட்டிருந்தனர். போட்டியில் கலந்து கொள்வதற்கென காலை 6 மணிக்கே போட்டியாளர்கள் தமது வீடுகளிலிருந்து புறப்பட்டு யாழ். துரையப்பா விளையாட் டரங்கிற்கு வரத் தொடங்கி விட்டார்கள். இவர்கள் தமது காலை உணவைக்கூட உண்பதற்கு அவகாசம் இல்லை- அன்று பிற்பகல் 2 மணிக்கு போட்டிகள் ஆரம் பமாகும் என்ற அறிவிப்புக்கு இணங்க காலையில் பதிவுகளை மேற்கொள்ளுவ தற்காகவே இவர்கள் நேரத்துடன் சென் றிருந்தனர்.

போட்டியாளர்களுக்கு குறிப்பிட்ட நிறுவனத்தின் விளம்பரம் பொறிக்கப் பட்ட பெனியன், 100ரூபா பணம், குறிப்பிட்ட நிறுவனத்தின் தயாரிப்பான ஒரு மா ரின் என்பன வழங்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே இவை வழங்கப்பட்ட போதிலும், பலருக்கு கிடைக்காமையால் ஏமாற்றமடைந்தனர். பின்னர் இவர்களைத் தமது பிரிவு பிரதேச செயலகங்களுக்குச் சென்று பெற்றுக் கொள்ளுமாறு கூறப்பட்டது. இவர்களும் அங்கு சென்று விளையாட்டு அலுவலர்களைச் சந்தித்து இது பற்றிக் கேட்டனர். அவர்கள் தமக்கு எதுவுமே தெரியாதெனக் கூறிக் கையை விரித்து விட , வீரர்கள் பெரும் ஏமாற்றத்துடன் வீடு திருப்பினார்கள்.

மறுபக்கத்தில் 2 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்ட போட்டி 3 மணித்தியாலங்கள் தாமதமாக பி.ப 5 மணிக்கு ஆரம்பானது. அதுவும் கூட ஒழுங்காக ஆரம்பிக்கப்படவில்லை. துரையப்பா விளையாட்டரங்கில் பொருத்தப்பட்டிருந்த கம்பிகளைத் தூக்கியும், அவற்றின் மேலால் பாய்ந்தும் வீரர்கள் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் ஓடிய பின்னர் போட்டி இன்னமும் ஆரம்பிக்கப் படவில்லையெனக் கூறி அவர்கள் திரும்ப அழைக்கப்பட்டு மீண்டும் போட்டி 5.20 மணியளவில் ஆரம்பமாகியது. நடுவர்கள் மற்றும் மத்தியஸ்தர்களிடம் இதுபற்றி கேட்டபோது ' எம்மை வரச் சொன்னார்கள் வந்துள்ளோம் எமக்கு வேறு எதுவும் தெரியாது' என்று பொறுப்பற்ற விதத்தில் பதிலைக் கூறி தமது செயலை நியாயப் படுத்திக்கொண்டனர். அதுமட்டுமல்ல ஏனைய போட்டிகளின் நடுவர்களும், மத்தியஸ்தர்களும் பணம்பெற்றே கடமையாற்றுகின்றனர். நாங்கள் இலவசமாக வந்து வேலை செய்கின்றோம் என்று கூறி ஏனைய போட்டிகளின் நடுவர்களை வசைபாடி தமது ஆற்றலை நிலைநிறுத் திக் கொண்டனர்.

யாழ். குடாநாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் தேசிய அளவில் சாதனை புரிய வேண்டும் என வாயளவில் கூறிக் கொள்ளும் இவர்கள் இத்தகைய ஒழுங் கற்ற நிகழ்வுகளுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்- அல்லது உரிய முறையில் போட்டிகளை ஒழுங்குபடுத்தி நடத்த ஆவன செய்யவேண்டும்.

மீண்டும் துரையப்பா விளையாட் டரங்கின் முன் வீதியில் இருந்து போட்டி ஆரம்பமாகியது. அப்போது கூட சிலர் ஓடுவதும், வேறுசிலர் ஓடும்போது தடுத்து நிறுத்தப்பட்டு மீண்டும் ஓடுவதும் போன்ற காட்சிகள் போட்டி ஆரம் பமாகும் இடத்தில் நடைபெற்றதை அவதானிக்க முடிந்தது. இத்தனைக் கும் நடுவில் நேரக்கணிப்பாளர்கள், நடுவர்கள், மத்தியஸ்தர்கள் எனப் பல நூற்றுக் கணக்கானவர்கள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

யுத்தம் ஓய்ந்த பின்னர் என்ன செய்வது என்று தெரியாது தடுமாறி நிற்கும் எமது இளைய தலைமுறை யினரை எதற்கும் பயன்படுத்தலாம், எப்படியும் நடத்தலாம், யார் கேட்கப் போகிறார்கள் என்ற மனநிலை தற்போது ஓங்கி நிற் கின்றது. இதற்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்- இதற்கு எம்மவர்கள் துணை போகக்கூடாது- எதுவும் நடக்கட்டும், எமக்கு என்ன வந்தது என்ற மன நிலை யில் இருந்து அவர்கள் விடுபட வேண்டும்- தடுமாறி நிற்கும் இளைய தலைமுறையினருக்கு நல்ல வழிகாட்டலை வழங்கி வழமான எதிர் காலத்தை ஏற்படுத்தித்தரவேண்டும். இதனை விடுத்து விரக்தி்யையும் ஏமாற்றத் தையும் அவர்களுக்கு ஏற்படுத்தி எதிர் காலத்தில் வன்முறையாளர்களாக அவர்களை மாற்றக் கூடாது.

-விண்ணன்-

எதிர்காலத்தில் இத்தகைய போட்டிகளை நடத்தும் போது குறைகள் எது வும் நிகழாதவாறு நல்ல முகாமைத் துவத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்து கொள்வதே சாலச் சிறந்தது.

****

## உடுவில் பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

வலி. வடக்கு, ஏப்.19

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான மெய் வன்மைப் போட்டியில் வெற்றி பெற்ற வர் களின் விவரங்கள் வருமாறு:-

**10,000 மீற்றர் ஓட்டம்**

எஸ்.பபி (ஞான முருகன் வி.க), யோ.ஜீவன்ராஜ் (உடுவில் மத்திய வி.க), ப.ஜெயராம் (சுன்னாகம் ஐயனார் வி.க).

**5000 மீற்றர் ஓட்டம்**

எஸ்.பபி (ஞானமுருகன் வி.க), க.கானமூர்த்தி (இணுவில் இந்து வி.க), செ.மதிஸ் (ஞானமுருகன் வி.க).

**1500 மீற்றர் ஓட்டம்**

எஸ்.மதிஸ் (ஞானமுருகன் வி.க), ரா.ஜெகன் (ஞானமுருகன் வி.க), தே.சிந்துஜன் (உடுவில் மத்தி வி.க).

**100 மீற்றர் ஓட்டம்**

கு.விதுஷன் (இணுவில் இந்து வி.க), க.யசோதரன் (இணுவில் இந்து வி.க),

**200 மீற்றர் ஓட்டம்**

ரி.புருசோத்மன் (உடுவில் மத்தி வி.க), க.யசோதரன் (இணுவில் இந்து வி.க),

**400 மீற்றர் ஓட்டம்**

க.புருசோத்தமன் (உடுவில் மத்தி வி.க),தி.புருசோத்மன் (ஞானமுருகன் வி.க), நி.பிரசாந்தன் (இணுவில் இந்து வி.க).

**800 மீற்றர் ஓட்டம்**

ரா.ஜெகன், செ.மதீஸ்,தி. புருசோத்மன் (ஞானமுருகன் வி.க).

**தட்டெறிதல்**

த.பரணீகரன் (ஞானமுருகன் வி.க), அ.கஜன் (சுன்னாகம் காந்தியமன்ற வி.க), ச.தனஞ்சயன் (சுன்னாகம் ஐயனார் வி.க).

**ஈட்டி எறிதல்**

ப.துஷாந்தன் (உடுவில் மத்தி வி.க), ச.மகிழன் (மல்லாகம் ஸ்ரீமுருகன் வி.க), ச.கஜேந்திரன் (சுன்னாகம் காந்தியமன்ற வி.க).

**நீளம் பாய்தல்**

கே.சுகந்தன் (இணுவில் கலாஜோதி வி.க), கே.விதுசன் (இணுவில் இந்து வி.க), கே.யசோதரன் (இணுவில் இந்து வி.க).

**குண்டு எறிதல்**

கே.அன்புக்குமார் (ஞானமுருகன் வி.க), எஸ். ஜெகன் (தாவடி காளியம்பாள் வி.க), எஸ்.ஆதி (இணுவில் அண்ணா வி.க).

**தத்தி மிதித்துப் பாய்தல்**

கே.சுகந்தன் (இணுவில் கலாஜோதி வி.க), க.புருசோத்தமன் (உடுவில் மத்தி வி.க), ரி.கில் மன் (தாவடி காளியம்பாள் வி.க),

உயரம் பாய்தல், கே.கலிஸ்டன் (உடுவில் மத்தி வி.க), ரி.கில்மன் (தாவடி காளியம் பாள் வி.க), ந.பிரசாந்தன் (இணுவில் இந்து வி.க). (6-86)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

## உதைபந்தாட்ட இறுதியாட்டத்தின்போது மத்தியஸ்தர் கடுமையாகத் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஏப்.20

உதைபந்தாட்ட இறுதிப்போட்டி ஒன் றின்போது அணி ஒன்றின் விளையாட்டு வீரர்கள் மற்றும் ஆதரவாளர்களால் போட்டி மத்தியஸ்தர் கடுமையகத் தாக்கப்பட்ட சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும் பிராய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 7பேர் பங்குபற்றிய விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் மூன்று கோயில் மைதானத் தில் இடம்பெற்றது.

இதில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சென்.நீக்கிலஸ் அணி வீரர் ஒருவர் விதிமுறைகளை மீறி நடந்து கொண்டமையால் மத்தியஸ்தர் மஞ்சள் அட்டை காண்பித்தார்.

இதனை எதிர்த்து அந்த வீரர் மத்தியஸ் தருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். இதனையடுத்து மத்தியஸ்தர் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் மத்தியஸ்தர் அந்த வீரருக்கு சிவப்பு அட்டை காண்பித்தார். இதனையடுத்து அங்கிருந்தவர்கள் மத்தியஸ்தர் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டதாகவும் அதன் பின்னர் அங்கு திரண்டிருந்த ஆதரவாளர்களுக்கும் மைதானத்துக்குள் புகுந்து தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தடுக்க முற்பட்ட றோயல் விளையாட்டுக்கழக அணிவீரர் ஒருவரும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இரு விளையாட்டுக் கழகங்களின் ஆதரவாளர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த மோதல் தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத் திற்கு உடனடியாக விரைந்து கடும் காயங் களுக்கு இலக்கான மத்தியஸ்தர், ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிவீரர் ஆகியோரை மீட்டு யாழ். பேதனா வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

(50-23-86)

## 513 ஆவது படையணி நடத்திய கரப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனானது பண்ணாகம் கணேசன் விளையாட்டுக்கழகம்

வலி. வடக்கு, ஏப். 19

513ஆவது படைப்பிரிவினர் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

தமிழ்- சிங்கள புத்தாண்டை யொட்டி 513 ஆவது படைப்பிரிவினர் கழகங்களுக்கு இடையே கரப்பந் தாட்டப் போட்டியை நடத்தினர்

சுன்னாகம் பிரதேசசபையின் மருதனார் மடம் மைதானத்தில் நடத்தப்பட்ட இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட் டுக்கழகமும் பண்ணாகம் கணேசன் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஐந்து சுற்றுக்களைக் கொண்டதாக அமைந்த இப்போட்டியில் முதல் மூன்று சுற்றுக்களையும் 25:19, 25:15, 25:20 எனும் புள்ளிகள் அடிப்படையில் பண்ணாகம் கணேசன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியனைக் கைப்பற்றியது. (2-86)

## 23 பேர் சித்தியடைந்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்.19

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்திய 2010ஆம் ஆண்டுக்கான உதை பந்தாட்ட மத்தியஸ்தர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் 23பேர் சித்தியடைந் துள்ளனர்.

சித்தியடைந்தவர்களின் விவரம் வருமாறு:

ஆர்.விஜிதரன், எஸ்.சிவச் செல் வம், எஸ்.சண்கயன், எம்.கபிலன், ரி.லக்ஸ்மன், எம்.தினேஸ், எஸ்.நிஷாந் தன், செல்வ நிஷாந்தன், ரி.நிதர்சன், எ.றூப வர்ணன், ரி.பிரதீபன், எல்.சுவேந் திரா, கே.அகில தீபன், ரி.தேவானந்த், வி.மனோறாஜ், ஆர்.சாந்தகுமார், ஜி.கஜ முகானந்தன், ரி.ரஜிகரன், எஸ்.பானு ராஜ், ஜி.பொமி நாதன், கே.கலைஞான தரன் , கே.அரவிந் தன், ரி.நிருஷாந்.

(50-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராம் கொலை செய்யப்பட்ட ஏப்ரல் 29 ஆம் திகதியை 'ஊடகவியலாளர் விழிப்பு தினமாக' அனுஷ்டியுங்கள்!

## தமிழ் ஊடக ஆர்வலர்கள் தரப்பிலிருந்து வேண்டுகோள்



கொழும்பு, ஏப்.20

பிரபல ஊடகவியலாளர் 'தராக்கி' சிவராம் படுகொலை செய்யப்பட்ட ஏப்ரல் 29 ஆம் திகதியை 'இலங்கை ஊடகவியலாளர் விழிப்பு தினமாக' அறிவித்து அனுஷ்டிக்கும்படி இலங்கையிலும், புலம்பெயர் தேசங்களிலும் வசிக்கும் தமிழ் ஊடக ஆர்வலர்கள் கோரியிருக் கின்றனர்.

இவ்விடயத்தை ஒட்டி இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவரும், தற்போது புலம் பெயர்ந்து சுவிஸில் வசித்து வருகின்றவருமான இரா.துரைரத்தினம், ஏனைய ஊடகத் தரப்பினர் சார்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஸ்ரீலங்காவில் சுதந்திரக்கட்சி வழிவந்த சந்திரிகா,மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சியில் ஊடகத்துறையைச் சேர்ந்த 35 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் நிமலராஜன், மட்டக்களப்பில் நடேசன், கொழும்பில் சிவராம் என ஊடகத்துறையைச் சேர்ந்த 30 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

நேரடியான கொலை அச்சுறுத்தல் காரணமாகப் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஊடகவியலாளர்களின் உரிமைகளுக்காகப் பணியாற்றிக்கொண்டிருந்த சுதந்திர ஊடக அமைப்பின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய, இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர்களான ஆர்.துரைரத்தினம், ராஜ்குமார், கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் செயலாளர் சண். தவராசா உட்படப் பலர் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

இக் கொலைகளில் பெரும்பாலானவற்றை ஸ்ரீலங்கா அரச படையினரும், புலனாய்வுப் பிரிவினரும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தோருமே செய்தனர் எனக் குற்றம்சாட்டப்படுகிறது. இந்தப் பின்னணியில் இப்படுகொலைகளைப் புரிந்தவர்கள் மீது ஸ்ரீலங்காவின் நீதித்துறை எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகள் ஒரு எல்லைக்கப்பால் தடுக்கப்பட்டு, முடக்கப்பட்ட சம்பவங்களையே நாம் காண்கிறோம். நிமலராஜன், சிவராம் ஆகியோரின் படுகொலைகளில் சிலர் கைது செய்யப்பட்ட போதிலும் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டமையையும், சிவராமின் வழக்கு ஆவணங்களான தடயப்பொருட்கள் திட்டமிட்டுத் தீவைக்கப்பட்டு அழிக்கப்பட்டமையையும் அவதானிக்கும் எவரும் இந்தப் பின்னணியில் அரசின் கரங்களே நேரடியாக இருந்தன என்பதை மறுக்க முடியாது.

ஸ்ரீலங்காவின் நீதித்துறை படுகொலை செய்யப்பட்ட எந்த ஒரு ஊடகவியலாளரின் வழக்கையும் விசாரித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கவில்லை. அதிகாரக்கூரங்கள் இந்தக் கொலைகளின் பின்னணியில் இருந்ததன் விளைவாகவே குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிச் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றனர். எனவே ஸ்ரீலங்கா அரசின் நீதித்துறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது என்ற உண்மையை சர்வதேச நாடுகளுக்கும் மனித உரிமை அமைப்புகளுக்கும் தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுத்து உணர்த்த வேண்டியது உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் கடமையாகும்.

உலகில் ஊடகத்துறையை மிக மோசமாக அடக்கி வைத்திருக்கும் சீனா, ஈராக்,பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் நட்பு நாடாக இருக்கும் ஸ்ரீலங்காவும் உலகில் ஊடகத்துறையை அடக்கும் நாடுகளில் முன்னணியில் இருந்து வருகிறது.

எனவே தனது தேசம் ஜனநாயக நாடு என்றும், தான் ஊடக சுதந்திரத்துக்கு மதிப்பளிப்பதாகவும் கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலைகளையும் ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறையையும் சர்வதேச நாடுகளினதும், மனித உரிமை அமைப்புகளினதும் கவனத்திற்குக் கொண்டுவரும் ஒரு நாளாக சிவராம் படுகொலை செய்யப்பட்ட தினத்தை தமிழ் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும், அனைத்து தமிழ் மக்களும் பயன்படுத்த வேண்டும்.

ஏப்ரல் 29ஆம் திகதியை இலங்கை ஊடகவியலாளர் விழிப்பு தினமாக அறிவிப்பதுடன் அன்றைய தினத் தில் சர்வதேச அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் மனித உரிமைகளை மதிக்கும் நாடுகளுக்கு இந்தப் படுகொலைகளுக்கு நீதி கோரித் தனித் தனியான மனுக்களை அனுப்பவும் வேண்டும். மனித உரிமைகளைப் பேணுவதாகவும் தமிழ் மக்களுக்கு சமஉரிமை வழங்குவதாகவும் பிரசாரம் செய்துகொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசின் பொய்ப் பிரசாரத்தை அதன் மூலம் முறியடிக்க முடியும்.

இந்தப் பணியை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் முன்னெடுக்க வேண்டும். இதன் மூலமே ஸ்ரீலங்கா அரசை சர்வதேசத்தின் முன் குற்றவாளியாக்க முடியும்.

ஏப்ரல் 29ஆம் திகதியை ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான ஊடக விழிப்பு தினமாகப் பிரகடனம் செய்து அன்றைய தினம் சர்வதேச அமைப்புகளுக்குத் தமிழ் மக்கள் மனுக்களை அனுப்பவேண்டும். இது எனது தனிப்பட்ட கோரிக்கை அல்ல. இலங்கையில் இருக்கும் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் மற்றும் பிரித்தானியாவில் உள்ள ஊடகவியலாளர் இதயச்சந்திரன் போன்ற நண்பர்களுடன் நடத்திய ஆலோசனைகளின் பின்பே இக்கோரிக்கையை தமிழ் ஊடகங்களிடம் விடுவதென முடிவு செய்தோம்.

எனவே உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் ஊடகவியலாளர்களும், தமிழ் ஊடகங்களும் இந்தப் பணியை முன்னெடுக்க வேண்டும் என எமது இனத்தின் விடுதலையை நேசித்து அந்த மண்ணில் மடிந்துபோன எமது ஊடக நண்பர்களின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன் - என்று உள்ளது. (சி)


### வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் முன்னணி வர்த்தக நிலையத்திற்கு சிட்டை லிகிதர், காசாளர், சேல்ஸ்மன் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும். யாழ்.மாநகரசபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0212221165

### தவறிவிட்டது

மாகியம்பிட்டி, மானிப்பாய்க்கிடையில் முச்சக்கர வண்டி (ஆட்டோ) சம்பந்தமான சகல ஆவணங்களும் நேற்று முன்தினம் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0774156627, 0775548591


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சின்னத்துரை நாகராஜா (புல்டோ)

(வாகன மின்இணைப்பாளர்)

எங்கள் குடும்பத்தின் அன்புத் தந்தையே!
அன்பாலே எமை அரவணைத்து பண்பாலே எமை வழி நடத்தியவரே!
நிலையில்லாத வாழ்வினிலே நீங்காத நினைவுகளைத் தந்துவிட்டு
நிலையான வாழ்வைத் தேடிச் சென்றீரே!
எங்கள் வழி, எங்கள் சத்தியம், எங்கள் ஒளியும் நீங்களே!
இறைவன் எமக்களித்த மிகப்பெரிய அன்பளிப்பு எங்கள் தந்தை.

எம் தந்தையாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் கலந்து கொண்டும், தொலைபேசியில் ஆறுதல் கூறியோர், பலவழிகளிலும் உதவிபுரிந்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!! !

முரசொலி வீதி,
சுதிரிப்பாய், அச்சுவேலி.

(97175)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் அன்னம் நடராசா



தோற்றம்
08.05.1924

மறைவு
21.03.2010

கடந்த 21.03.2010 ஞாயிற்றுக்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(97171)

ந.சிவகுமாரும்,
குடும்பத்தினரும்.

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16 ★ 06 ★ 1940



மறைவு
30 ★ 04 ★ 2009

### திருமதி முருகேசு செல்வலட்சுமி

திதி:சஷ்டி

ஆறவில்லை அம்மா எங்கள் இதயம்
மறப்போமா உங்கள் அன்பு முகத்தை
ஆசையாய் எம்மை வளர்த்து அறிவூட்டி
வளமுடன் வாழ வைத்தீர்கள்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(97181)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகிர்தி வருடத்தில் உங்கள் இராசிக்கு என்ன பலன்...?

## தனுசு



உங்கள் ராசிக்கு இந்த வருடம் பிரதான கிரகங்களான குரு, சனி, ராகு, கேது ஆகியவற்றில் குருபகவான் மட்டுமே அனுகூலப் பலன்தரும் வகையில் உள்ளார். இதனால் உங்களுக்கு இவ்வாண்டு சிக்கல் நிறைந்த ஆண்டாகவே இருக்கும். பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு செயற்படுவது நல்லது. குடும்பச் செலவுக்கு கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். வீடு, வாகன வகையில் இப்போதைய நிலை அப்படியே நீடிக்கும். புத்திரர்கள் உங்கள் கண்டிப்பைப் புறக்கணித்து தங்கள் இஷ்டத்திற்கு நடக்க ஆரம்பிப்பர். மே, ஜூன், ஜூலை மாதங்களில் குருபகவான் அதிகார வக்ரகதியாக கும்பராசியில் அமருகிறார். இந்தச் சமயத்தில் வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படும். பயணங்களின்போது பாதுகாப்பாக இருக்க வேண்டும். தம்பதியர் இடையே சச்சரவு ஏற்பட வாய்ப்புண்டு. பலகாலம் சேர்த்து வைத்த நற்புகழைப் பேணுவதில் கவனம் வேண்டும். நண்பர்களிடம் கொடுக்கல், வாங்கலில் அதிருப்தி ஏற்படும் கிரகநிலை உள்ளது. குடும்பத்தை நடத்துவதற்குரிய செலவுக்கு கஷ்டப்பட வேண்டியிருக்கும். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற அனுகூலநிலை உண்டு.

**தொழிலதிபர்கள்**

கல்வி நிறுவனங்கள், நிதிநிறுவனம், வைத்தியசாலை, புடைவை, இரும்பு, அரைக்கும் ஆலை ஆகியவற்றின் அதிபர்கள் தங்கள் தொழிலில் பின்தங்க நேரிடும். நிர்வாகச் செலவு உயரும். வாடிக்கையாளர்களுக்கு சலுகைத் திட்டங்களை அறிவிக்க வேண்டியிருக்கும். மின்சாரம், இலத்திரனியல் காகிதம், உதிரிபாகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிலதிபர்கள் அளவான உற்பத்தியும், சுமாரான இலாபமும் பெறுவர்.

**வியாபாரிகள்**

நகை, புடைவை, அரிசி, தோல்பொருள்கள், உடற்பயிற்சிக்கருவி, மருந்து, மருத்துவ உபகரணம், இசைக்கருவிகள், வாசனைத் திரவியங்கள், அழகுசாதனப்பொருள், பாத்திரம், காகிதப் பொருள்கள், அளவீட்டுக் கருவிகள், உணவுப் பண்டம், மின்சாரப் பொருள்கள், கட்டுமானப் பொருள்கள், காய்கறி ஆகியவற்றை வியாபாரம் செய்பவர்களுக்கு நிலைமை சாதகமாக இல்லை. மற்றவர்களும் கூடுதல் ஈடுபாட்டுடன் வியாபாரத்தில் செயற்படுவதால் மட்டுமே பலன்களைப் பெறலாம். மூலதனத்தை உயர்த்தினால் அதற்கேற்ற வருமானம் இருக்காது. வாகனங்கள் மூலம் வருமானம் நன்றாக இருக்கும். பிறருக்காக கையெழுத்திடுவதைத் தவிர்க்க வேண்டும்.

**பணியாளர்கள்**

அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்களுக்கு கவனச்சிதறல், பணியில் பிடிப்பின்மை ஏற்பட்டு அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாக நேரும். பணிச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு வளரும். தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் கவனக்குறைவு காரணமாக உற்பத்தி இழப்புக்கு காரணமாக அமைந்து அபராதம் கட்ட நேரிடலாம். பணியில் நேரம் தவறாமையையும், கவனமும் கொண்டால் மட்டுமே பிரச்சினைகளைத் தடுக்கலாம்.

**மாணவர்கள்**

ஊடகத்துறை, ஆசிரியர்பயிற்சி, சாஸ்திரப்படிப்பு, இலக்கியம், ஓவியம், மருத்துவம், வணிகவியல், வங்கியியல், தகவல் தொழில்நுட்பம், வியாபாரம், முகாமைத்துவம், சட்டம், அரச நிர்வாகம் சார்ந்த துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்கள் தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து படித்துத் தரத்தேர்ச்சி பெறுவர். பிற துறை மாணவர்களுக்கு படிப்புப் பரவாயில்லை என்ற நிலை இருக்கும். படிப்புக்கான பணத்துக்குச் சிரமப்பட வேண்டியிருக்கும்.

**பெண்கள்**

அரசு, தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள் கூடுதல் பணிச்சுமைக்கு உட்படுவர். பணியை நிறைவேற்ற முடியாமல் திண்டாடி அதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவர். சலுகைகள் சுமாராகவே கிடைக்கும். குடும்பப் பெண்கள், அன்றாடச் செலவுக்கு பணமின்றித் திண்டாடுவர். சிக்கனம் தேவை. கணவர் வழி சார்ந்த உறவினர்களை விமர்சித்து சிக்கலில் மாட்டநேரும். சுயதொழில்புரியும் பெண்கள், தொழிலை அபிவிருத்தி செய்தாலும் சுமாரான அளவு வியாபாரமே நடக்கும்.

**அரசியல்வாதிகள்**

ஆதரவாளர்கள் வாழ்வில் முன்னேற சொந்தப் பணச் செலவில் தேவைப்படும் உதவியைச் செய்து கொடுப்பீர்கள். சமூகத்தில் நற்பெயர் பெற அனுகூலக் காரணிகள் பலம் பெறும். எதிரிகளால் தொல்லை உண்டு. அவர்களிடம் இருந்து விலகிப்போவதால் காலமும், பணமும் பெருமளவு மிச்சப்படும். புத்திரர்கள் அரசியல் பணியில் ஒத்துழைக்கமாட்டார்கள். மே, ஜூன், ஜூலை மாதங்களில் அனுபவம் நிறைந்தவர்களின் ஆலோசனையும், உதவியும் கிடைத்து உங்களுக்கு புதிய பதவி கிடைக்கும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்கள், சராசரி வியாபாரமும், மிதமான இலாபமும் பெறுவர்.

**விவசாயிகள்**

பயிர் வளர்ப்பதற்கு அதிக செலவு ஏற்படும். கால்நடைகள் வளர்ப்பினால் மே, ஜூன், ஜூலையில் கூடுதல் பணவரவு வரும். நிலம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான தீர்ப்புப் பெறத் தாமதம் ஏற்படும்.

## மகரம்



உங்கள் ராசிக்கு இந்த வருடம் பிரதான கிரகங்களான குரு, சனி, ராகு, கேது ஆகியவற்றில் வருடத்தின் பிற்பகுதியில் கேதுவும், வருடத் தொடக்கத்தில் மூன்று மாதம் குருவும் நல்ல பலன்களைத் தரும்வகையில் உள்ளனர். அஷ்டமத்து சனி இன்னும் ஐந்து மாதங்களில் முடிகிறது என்பதால், அதுவரைப் பொறுமையாக இருக்கவும். கோபதாபம் குறைந்து சாந்த எண்ணம் மேலோங்கும். வீடு, வாகனம் சார்ந்த வகையில் இருப்பதைப் பாதுகாத்தாலே போதுமென்றநிலை இருக்கும். அஷ்டமத்து சனியினால் செப்ரெம்பருக்குப் பிறகு அபிவிருத்திப் பணிகளைச் செய்தால் போதும். மே, ஜூன், ஜூலை மாதங்களில் குருபகவான் அதிகார வக்ரகதியாக கும்பராசியில் அமர்வு பெறுகிறார். இந்தக் காலம் உங்கள் வாழ்வில் மறுமலர்ச்சியும், தாராள பணவரவும், குடும்பத்தில் மங்கள நிகழ்வும் ஏற்படும். உங்கள் உடல்நலத்துடன் புத்திரர்களின் உடல்நலமும் பாதிக்கப்படக் கூடும். பூர்வ சொத்தில் வருமானம் சுமாரான அளவில் கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் சிக்குவதற்கு வாய்ப்புண்டு. குடும்பத் தேவைகளுக்காக சேமிப்புப் பணத்தைச் செலவு செய்வதும் கடன் பெறுவதுமான தன்மை இருக்கும். தம்பதியரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு குறைந்த அனுகூலமே உள்ளது.

**தொழிலதிபர்கள்**

இரும்பு, புடைவை, காகிதம், மின்சாரம், இலத்திரனியல் சாதனங்கள், பால் பொருள்கள், வாசனைத் திரவியம், வீட்டு அலங்காரப் பொருள்கள், பிளாஸ்டிக், மரத்தொழில் செய்வோர் கடும் முயற்சி செய்தாலும் அளவான இலாபமே சம்பாதிக்க முடியும். பால்பொருள்கள், மோட்டார் உதிரிப்பாகங்கள், உழவுத்தொழில் கருவிகள், உற்பத்தி செய்பவர்கள் புதிய ஒப்பந்தம் கிடைத்து தாராள பண வரவு பெறுவர். மற்றவர்களுக்கு இவர்களை விட வருமானம் அதிகமாக இருக்கும். அபிவிருத்திப் பணிகளைச் செய்ய முற்பட வேண்டாம். தொழிலில் புதிய ஒப்பந்தகாரர்களைச் சேர்த்தாலும் சிரமமே.

**வியாபாரிகள்**

நகை, புடைவை, அரிசி, மின்னணு சாதனங்கள், மருத்துவ உபகரணங்கள், மருந்து, காய்கறி, பழம், பேக்கரி, உதிரிபாகங்கள், அழகுசாதனப் பொருள்கள், கட்டுமானப் பொருள், அலங்காரப் பொருள்கள், பால் பொருள்கள் வியாபாரம் செய்பவர்கள் சுமாரான வளர்ச்சி காண்பர். மற்றவர்களுக்கு இவர்களை விட அதிக இலாபம் இருக்கும். நிர்வாகச் செலவு அதிகரித்து கடன் வாங்கும் நிலை ஏற்படும்.

**பணியாளர்கள்**

அரசு, தனியார் துறையில் பணி புரிபவர்கள் சோம்பல் அதிகரிப்பால் பணியில் தொய்வு ஏற்பட்டு அதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவர். சிலருக்கு ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படும் கிரகநிலை உள்ளது. கவனம். இயந்திரம், கொதிகலன், மின்சாரம், தொழில்நுட்பப்பணி போன்றவற்றில் உள்ளவர்கள் பாதுகாப்பு நடைமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். சகபணியாளர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். குடும்பத்தின் தேவையை நிறைவேற்ற நிர்வாகத்திடம் கடன் வாங்க வேண்டி வரும். சலுகைகள் பெரிய அளவுக்கு இராது. மே, ஜூன், ஜூலைமாதங்களில் குரு பார்வையால் குறைகள் விலகி வளர்ச்சித்தன்மை ஏற்படும்.

**மாணவர்கள்**

தகவல் தொழில் நுட்பம், பொறியியல், விவசாயம், மருத்துவம், சினிமா தொழில் நுட்பம், இசை, நடனம், ஓவியம், அழகுக்கலை, சட்டம் உட்பட பல்வேறு துறையில் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு கவனச்சிதறல் ஏற்பட்டு படிப்புப் பின்தங்கும். படிப்புக்குரிய செலவுக்கும் திண்டாட்டமாகவே இருக்கும். பயணங்களின் போது பாதுகாப்பு அவசியம் தேவை.

தருபவர்: வித்யா

**பெண்கள்**

அரசு, தனியார் துறையில் பணிபுரியும் பெண்களின் பணிகளில் தொய்வு ஏற்படும். நிர்வாகம் சொல்வதைப் புரிந்து கொள்ளாமல் பணியாற்றி அவர்களால் கண்டிக்கப் படவும் வாய்ப்புண்டு. பணம் கொடுக்கல், வாங்கலில் எவருக்காகவும் பொறுப்பேற்கக் கூடாது. குடும்பப் பெண்கள் வீட்டுச் செலவுக்கு திண்டாட வேண்டியிருக்கும். புத்திரர்களை ஒழுங்கு படுத்துவதற்குள் போதும் மென்றாகிவிடும். சுய தொழில் புரியும் பெண்கள் சுமாரான இலாபமே காண முடியும். அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டால் பிரச்சினையும் பண இழப்புமே ஏற்படும்.

**அரசியல்வாதிகள்**

ஆதரவாளர்களின் உதவியுடன் அரசியலில் பலம்பெறும் வாய்ப்புகளைச் சரியாக நிறைவேற்றுவீர்கள். பணச்செலவு அதிகரிக்கும். எதிரியின் தொந்தரவால் சில அனுகூலங்களைப் பெறுவதற்கு தாமதமாகும். புத்திரர்களின்விருப்பத்தை அரசியலில் செயற்படுத்த வேண்டிய கட்டாயம் வரும். மே, ஜூன், ஜூலை மாதங்களில் அரசு தொடர்புடைய அனுகூலங்களை எளிதாகப் பெறுவீர்கள். தகுதிக்கு மீறிய விவகாரங்களில் தலையிட்டு கெட்ட பெயரும், சட்ட சிக்கலும் வரும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்கள் சுமாரான வருமானமே காண்பர்.

**விவசாயிகள்**

கால்நடை வளர்ப்பிலும் சுமாரான அளவிலேயே பணம் கிடைக்கும். மே, ஜூன், ஜூலை மாதங்களில் அனைத்து வகையிலும், வளர்ச்சியும், வருமானமும் கூடும். இந்தக் காலம் குடும்பத்தில் சுபநிகழ்ச்சியும் நடைபெற வழிபிறக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## அளவையியலும் விஞ்ஞான முறையும் | 01

★ பகுதி 1,2,3 ஆகியவற்றிலிருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிந்தெடுத்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

### பகுதி - I

01. அ. கீறிட்ட இடங்களை பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக. சரியான விடைக்கு ஒரு புள்ளி வழங்கப்படும். தவறான விடைக்கு ஒரு புள்ளி குறைக்கப்படும்.
   1) ........................ அனுபவ விஞ்ஞானமாகக் கொள்ளப்பட்டபோதிலும் தூயகணிதம் .............................. ஆகக் கொள்ளப்படுகிறது.
   2) சமூக விஞ்ஞானமாகக் கொள்ளப்படும் .............................. இது வரையறைகளின் கீழ் ........................ வும் கொள்ளப்படுகிறது.
   3) மரபணுவியல் .............................. விஞ்ஞானமாகக் கொள்ளப்படும்போது தாவரவியல் ........................ விஞ்ஞானமாகும்.
   4) ஒழுக்கவியல் ........................ விஞ்ஞானமாக கொள்ளப்படும். ஆனால், கைரேகைசாஸ்திரம் ..............................
   5) கணினி விஞ்ஞானம் .............................. சரியான உதாரணமாக அமையும்போது அதீத உளவியல் உண்மையில் ......................

   ஆ. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானவையா அல்லது பொய்யானவையா எனக் குறிப்பிடுக.
   சரியான விடைக்கு ஒரு புள்ளி வழங்கப்படும். தவறான விடைக்கு ஒரு புள்ளி குறைக்கப்படும்.
   1) அளவையியல் உயர்நெறி விஞ்ஞானமாகும்.
   2) உய்த்தறிவாதத்தின் முடிவு எப்போதும் உண்மையாகும்.
   3) கருதுகோள் ஏற்கப்படுவதற்கு தற்கரீதியான முறை ஒன்று உள்ளது.
   4) பூமி தட்டைவடிவானது என்பது விஞ்ஞானக் கருதுகோள் ஆகும்.
   5) விஞ்ஞானங்கள் எல்லாம் அனுபவ சோதனைக்கு உட்படுத்தக்கூடியவை.
   6) ஒரு விதிக்கு எதிராக மேலும் ஒரு விதி படைக்க முடியாது.
   7) மலடி தன்மகனுடன் செல்கிறாள் என்பது சோதித்து அறியவேண்டிய கூற்றாகும்.
   8) சமூக விஞ்ஞானங்களின் தீர்ப்பு சோதனையை பயன்படுத்த முடியாது.

02. அன்ரன் வான் லியூவன் ஹூக் அவர்கள் லென்சுகளைக் கடைந்து பொழுது போக்கிற்காக மைக்ரஸ்கோப்பை தயாரித்தார். மேலும் தன்னுடைய கடையிலும் பல லென்சுகளைக் கடைந்து புதிதாக பல மைக்ரஸ்கோப்புகளை தயாரித்தார். அக்காலத்தில் மைக்ரஸ்கோப்புகள் கடைகளில் விற்பனை செய்யப்படுவதில்லை. அது குழந்தைகளின் விளையாட்டுப்பொருளாக இருந்தது. லியூவன் ஹூக் பிறப்பதற்கு முன்பே 1590 இல் S.ஜான்சன் என்பவர் இரண்டு லென்சுகளைக் கொண்ட மைக்ரஸ்கோப்பைத் தயாரித்திருந்தார். லியூவன் ஹூக் தயாரித்த மைக்ராஸ்கோப் 270 மடங்கு உருப்பெருக்கும் தன்மையைக் கொண்டது. இவர் தயாரித்த மைக்ராஸ்கோப் மூலமாக கம்பளி நூல், தலைமுடி என்பவற்றை அவதானித்து படம் வரைந்தும் குறிப்பெடுத்தும் வைத்தார். மணிக்கணக்காக பொறுமையுடன் அவதானிக்கும் தன்மை அவருக்கு உண்டு. 1673 ஆம் ஆண்டு ஒருநாள் அவர் தேங்கியிருந்த மழை நீர் ஒரு சொட்டை மைக்ராஸ்கோப் மூலம் பார்த்தார். அதில் ஏராளமான நுண்ணுயிர்கள் அங்கும் இங்கும் தாறுமாறாக ஓடிக்கொண்டிருந்தன. அவை நீந்திக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருப்பதாக அவருக்குத் தோன்றின. இவற்றை வெறும் கண்களால் பார்க்கக்கூடியதை விட 1,000 மடங்கு சிறியது.

கண்ணுக்குத் தெரியாத இந்த ஒரு செல் உயிரியை சிறு உயிரி அல்லது நுண் விலங்கு என்றார். இதைப் படமாக வரைந்துவைத்தார். இதுவே பக்டீரியா ஆகும். முதன்முதலில் பக்டீரியாவை பார்த்தவர் இவர்தான். ஆனால், அது என்ன என அவரால் கூறமுடியவில்லை. மழை பெய்யும்போது நுண்ணுயிர்களும் ஆகாயத்திலிருந்து வந்திருக்கவேண்டும் என்று எண்ணினார். அதை அறிய மழை பெய்யும்போது நேரடியாக சேகரித்த நீரில் சோதித்தார். நுண்ணுயிர் எதுவும் காணப்படவில்லை. பலநாட்கள் தேங்கிய நீரில்தான் நுண்ணுயிர் காணப்பட்டது. இவை அவற்றின் பெற்றோர் வழி வந்தது என நம்பினார்.

இரத்தம் இரத்தக்குழாய் வழியாக செல்வதைப் பார்த்தார். மேலும் மிகச் சிறிய நுண்ணிய இரத்தக்குழாயையும் அதன் சுவர்களையும் பார்த்தார். வில்லியம் ஹார்வே 1616 இல் இரத்தச் சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்த போதிலும் மயிரிழை போன்ற நுண்ணிய குழாய்களைப் பார்க்கமுடியவில்லை. 1695 ஆம் ஆண்டின் பின்னே நோய்க்கு காரணமாக இருக்கும் கிருமிகளை மருத்துவர்கள் ஆய்வுசெய்தனர். இதன் பின்பே விஞ்ஞானம் வளர்ச்சி அடையத்தொடங்கியது எனலாம்.

பின்வருவனவற்றுக்கு விடை தருக.
1) லியூவன் ஹூக் கண்டுபிடிப்பாளராக வருவதற்கு உதவிய அவரது குண இயல்பை விஞ்ஞானிகளின் மனப்பாங்குடன் ஒப்பிட்டு விளக்குக.
2) மழைநீரில் அவதானிக்கப்பட்ட நுண்ணுயிர் தொடர்பாகப் பின்வருவனவற்றிற்கு விடை தருக.
   1. நுண்ணுயிர் தொடர்பாக கருதுகோள் முன்வைக்கப்பட்டதா?
   2. நுண்ணுயிர் கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு எத்தன்மையானது?
   3. மைக்ரஸ்கோப்பை முதலில் வடிவமைத்தவர் யார்?
   4. ஹார்வேயினால் மயிரிழை போன்ற இரத்தக்குழாய்களை ஏன் அவதானிக்க முடியவில்லை.
3) நுண்ணுயிர்கள் எவ்வாறு தோன்றுகின்றன என அறிவதற்கு லியூவன் ஹூக் செய்த சோதனை யாது? அதனைப் பரிசோதனையாகக் கொள்ளலாமா? ஏன் என்பதற்கு விளக்கம் தருக?

## SPECIAL GUIDE FOR 2010 A/L ARTS STUDENTS

4) மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கு மைக்ரஸ்கோப்பின் பங்களிப்பை விளக்குக.

03. அ. நோக்கலை அடிப்படையாகக் கொண்டு சரியான முடிவுகள் அமைக்கப்பட்டுள்ளதால் பரிசோதனை முக்கியமற்றதாகும். இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? விளக்குக.
   ஆ. விஞ்ஞான வளர்ச்சியில் தீர்ப்புச் சோதனையானது பிரதான பங்கு வகிக்கிறது. உதாரணத்துடன் விளக்குக.
   இ. புடைவை வியாபாரி தன் கையால் இரண்டு முழம் அளந்து கொடுத்தது ஒரு மீற்றருக்கு சரியாக காணப்பட்டது. என்பதால் முழம் திருத்தமான அளவீடாக கொள்ளலாமா? விளக்குக. விஞ்ஞானத்திற்கு வேறுபட்ட அளவீடுகளின் பயனை விளக்குக.

04. அ. விஞ்ஞானக் கருதுகோள் ஒன்றிற்கு இருக்கவேண்டிய பண்புகள் எவை? பத்தாம் இடத்திற்கு வியாழன் வருவது நிச்சயம் இடமாற்றத்தைத் தரும் என்பதில் கருதுகோளின் பண்புகள் உள்ளதா? விளக்குக.
   ஆ. விஞ்ஞான விதிகளுக்கும் கோட்பாடுகளுக்குமிடையே வேறுபாடுகளை உதாரணத்துடன் விளக்குக.
   இ. இயற்கையின் தோற்றப்பாடு ஒன்றை நாளாந்தம் கண்டுகொண்ட போதிலும் அதன் விளக்கத்தைப் பெற்றுத்தருவதே விஞ்ஞான விளக்கமாகும். உதாரணத்துடன் விளக்குக.

05. அ. நிகழ்தகவு பற்றிய பாரம்பரிய விளக்கத்திற்கமைய நிகழ்தகவு செயற்படுவதற்கான நிபந்தனைகள் எவை? நிகழ்தகவுச் சூத்திரத்துடன் விளக்குக.
   ஆ. நிகழ்தகவு பற்றிய மீள்திறன் விளக்கம் எச்சந்தர்ப்பத்தில் சிறப்பாகப் பொருந்துகிறது. உதாரணத்துடன் விளக்குக.
   இ. ஒரு கூடையினுள் ஒரே அளவான 4 பந்துகள் உள்ளன. அவற்றுள் 2 சிவப்பு, 2 பச்சை. கூடையிலிருந்து எழுமாறாக ஒரு பந்து எடுக்கப்பட்டு அதன் நிறம் குறிக்கப்படுகிறது. எடுத்த பந்து திரும்பி வைக்கப்படாத வகையில் பிறிதொரு பந்து எடுக்கப்பட்டு அதன்நிறம் குறிக்கப்படுகிறது. அதுவும் திருப்பி இடப்படாத நிலையில் மீண்டும் ஒரு பந்து எடுக்கப்படுகிறது. பின்வருவனவற்றைக் காட்டுக.
   1) எடுக்கப்படும் மூன்று பந்துகளும் சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?
   2) எடுக்கப்பட்ட மூன்று பந்துகளுள் இரண்டு சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?
   3) மூன்று எடுப்புக்களில் முதலாவது மட்டும் சிவப்பாக இருப்பதற்குரிய நிகழ்தகவு என்ன?
   4) இந்நிகழ்வுக்கான மாதிரி வெளியை வரைந்து காட்டுக.

### பகுதி - II

06. அ. சம மாதிரிகள், வகையீட்டு மாதிரிகள் என்பவற்றை உதாரணத்துடன் விளக்குக.
   ஆ. 25, 30, 45, 30, 15, 70, 65, என்ற எண்தொகுதியில் இருந்து பின்வருவனவற்றைக் கணிக்குக.
   1. சராசரி  2. இடையம்
   3. முகடு  4. வீச்சு
   இ. சராசரி விலகலிலும் பார்க்க நியமவிலகல் திருத்தமானதாக கொள்ளக் காரணம் யாது? உதாரணத்துடன் விளக்குக.

07. அ. கட்டுப்பாட்டுக்குழு சோதனை முறை சமூகவிஞ்ஞான ஆய்வுக்கும் இயற்கை விஞ்ஞான ஆய்வுக்கும் பயன்படும் முறையாக உள்ளது. அதேபோல் இயற்கை விஞ்ஞான ஆய்வு முறைகளைச் சமூக விஞ்ஞானத்தில் பயன்படுத்தினால் திருப்தியான முடிவை எட்டலாமா? ஆராய்க.
   ஆ. சமூக விஞ்ஞான ஆய்வுகளில் புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதனால் சமூகவிஞ்ஞானத்துறைகள் வேகமாக முன்னேறுகின்றன. பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

08. பின்வருவன்வற்றிற்கு பொருத்தமான உதாரணத்துடன் விளக்கம் தருக.
   1) சமூக விஞ்ஞானத்தின் புறவயத்தன்மை.
   2) சமூக விஞ்ஞனத்தில் மாதிரித்தெரிவு.
   3) சுயதோல்விதரும் எதிர்வுகூறல் எண்ணக்கரு.
   4) பாதுகாப்பு விதிக்காட்டுரு விளக்கம்.

### பகுதி - III

09. அ. கொப்பனிக்கஸின் பங்களிப்பு இல்லை எனில், நாம் உலகுபற்றி எதுவும் தெரியாதவர்களாய் இருந்திருப்போம். கொப்பனிக்கஸின் புரட்சி என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் யாது? விளக்குக.
   ஆ. வில்லியம் ஹார்வே விஞ்ஞானத்திற்காற்றிய பங்களிப்பு யாது? மருத்துவத்துறையில் அதன் முக்கியத்துவம் யாது? விளக்குக.

10. அ. மரபணுத் தொழில்நுட்பத்தின் அடிப்படைக் கருத்து யாது? விலங்கு வேளாண்மையிலும் விவசாய தொழில்நுட்பத்திலும் ஆற்றும் செல்வாக்கினை விளக்குக.
   ஆ. முதலாளித்துவம் தன்னைத்தானே அழிக்கும் என்ற மாக்ஸியவாதிகளின் கூற்று எதிர் வினையான விளைவைத் தந்துள்ளது. இக்கூற்றினை ஆராய்க.

11. அ. தோமஸ்கூன், போல் பயிராபேண்ட் ஆகியோரின் விஞ்ஞான முறையியலின் கட்டமைப்பை விளக்குக.
   ஆ. காள் பொப்பரின் ''உரைகல்லை'' பிரயோகிப்பதில் எழும் பிரச்சினைகளை விளக்கி ஆராய்க.

12. அ. நவீன விஞ்ஞான வளர்ச்சி சமய, ஒழுக்க விழுமியங்களுக்கு அச்சுறுத்தலாக அமைகிறது. ஆராய்க.
   ஆ. ''சந்திராயன்'' இந்திய விண்வெளித் தொழில்நுட்பத்தின் ஒரு மைல்கல் ஆகும். ஆராய்க.

-நிறைவுற்றது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# இந்து நாகரிகம்

## பகுதி - I

* ''அ'' பகுதியில் முதலாம் வினாவுக்கும், ''ஆ'' பகுதியில் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

### பகுதி 'அ'

* பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.

01. வேதங்களில் குறிப்பிடப்படும் விண்ணுக்குரிய தேவர்கள் அடங்கிய தொகுதி,
அ. வர்ணன், உருத்திரன், உஷை, இராத்திரி, சூரியன்.
ஆ. வர்ணன், இந்திரன், உஷை, இராத்திரி, சூரியன்.
இ. வர்ணன், விஷ்ணு, உஷை, இராத்திரி, சூரியன்.
ஈ. வர்ணன், வாயு, உஷை, இராத்திரி, சூரியன்.
உ. வர்ணன், உருத்திரன், ஆதித்தியன், சூரியன், விஷ்ணு.

02. சிவ புராணங்கள் அடங்கிய தொகுதி,
அ. சிவபுராணம், மார்க்கண்டேய புராணம், கந்தபுராணம், வராக புராணம், பெரிய புராணம்.
ஆ. சிவபுராணம், பௌடிய புராணம், மார்க்கண்டேய புராணம், கந்தபுராணம், வராக புராணம்.
இ. சிவபுராணம், மார்க்கண்டேய புராணம், கந்தபுராணம், மச்ச புராணம், பெரிய புராணம்.
ஈ. சிவபுராணம், மார்க்கண்டேய புராணம், கந்த புராணம், வராக புராணம், பெரிய புராணம்.
உ. சிவபுராணம், மார்க்கண்டேய புராணம், கந்தபுராணம், அக்கினிபுராணம், பௌடிய புராணம்.

03. சிவபெருமானின் அட்டவீரட்டச் செயல்கள் அடங்கிய தொகுதி,
அ. முப்புரம் எரித்தமை, காலனை உதைத்தமை, மன்மதனை எரித்தமை, தக்கன் செருக்கு அடங்கியமை, அந்தகாசுரனை அழித்தமை.
ஆ. முப்புரம் எரித்தமை, காலனை உதைத்தமை, மன்மதனை எரித்தமை, தக்கன் செருக்கு அடக்கியமை, கயமுகாசுரனை அழித்தமை.
இ. முப்புரம் எரித்தமை, காலனை உதைத்தமை, மன்மதனை எரித்தமை, அந்தகாசுரனை அழித்தமை, பிட்டுக்கு மண் சுமந்தமை.
ஈ. முப்புரம் எரித்தமை, காலனை உதைத்தமை, பிட்டுக்கு மண்சுமந்தமை, தக்கன் செருக்கு அடக்கியமை, கயமுகாசுரனை அழித்தமை.
உ. கயமுகாசுரனை அழித்தமை, காலனை உதைத்தமை, அந்தகாசுரனை அழித்தமை, மன்மதனை எரித்தமை, தக்கன் செருக்கு அடக்கியமை.

04. வடநாட்டு பக்தி நெறியாளர்கள்,
அ. இராமானுஜர், இராமானந்தர், சைதன்யர், மீராபாய், ஆண்டாள்.
ஆ. இராமானந்தர், சைதன்யர், மீராபாய், துளசிதாசர், கபீர்தாசர்.
இ. இராமானந்தர், மீராபாய், துளசிதாசர், ஆண்டாள், சைதன்யர்.
ஈ. இராமானந்தர், சைதன்யர், மீராபாய், ஆண்டாள், கபீர்தாசர்.
உ. இராமானந்தர், மீராபாய், துளசிதாசர், ஆண்டாள், கபீர்தாசர்.

05. குப்தர் காலத்தில் அரண்மனையை அலங்கரித்த புலவர்கள்,
அ. காளிதாசர், வராகமித்திரர், விசாகதத்தர், கௌடில்யர், ஆரியபட்டர்.
ஆ. காளிதாசர், கௌடில்யர், ஆரியபட்டர், விசாகதத்தர், பாரவி.
இ. காளிதாசர், கௌடில்யர், ஆரியபட்டர், வராகமித்திரர், மாகன்.
ஈ. காளிதாசர், ஆரியபட்டர், வராகமித்திரர், விசாகதத்தர், பாரவி.
உ. காளிதாசர், பாரவி, கௌடில்யர், வராகமித்திரர், மாகன்.

* 6-10 வரையுள்ள வினாக்களில் அமைந்துள்ள வாக்கியங்கள் சரியாயின் "சரி" எனவும், பிழையாயின் "பிழை" எனவும் அடைப்புக்குள் எழுதுக.

06. அருச்சுனனின் கதையை விளக்குவது கிருதார்ச்சுனியம் என்ற நூலாகும். (    )

07. சிவரகசியம் என்ற நூலை எழுதியவர் வியாச முனிவர். (    )

08. பயன்கருதிச் செய்யப்படும் கிரியை நிஷ்காமியக் கிரியை எனப்படும். (    )

09. சங்ககால முருகவழிபாட்டில் வேலன் வெறியாடலும் ஒன்று. (    )

10. பஞ்ச புராணங்களில் இறுதியாக ஓதப்படுவது பெரியபுராணம். (    )

* பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

11. பெரிய புராணத்தில் இடம்பெறாத சமய குரவர் யார்?
..........................................................................................

12. குமரகுருபரர் பாடிய நூல்கள் இரண்டு தருக.
..........................................................................................

13. திருப்பல்லாண்டு பாடிய சைவ, வைணவ அடியார்கள் யாவர்?
..........................................................................................

14. பெரிய புராணத்தின் முதன்நூல் எது? வழிநூல் எது?
..........................................................................................

15. ஸ்ரீ தட்சணகைலாய புராணத்தைப் பாடியவர் யார்?
..........................................................................................

* பின்வரும் கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.

16. முருகக்கடவுள் பற்றிக் காளிதாசரால் பாடப்பட்ட நூல் ..........................................

17. ஆண்டாள் பாடிய பாசுரங்கள் .............................. , .............................. என்பனவாகும்.

18. சங்கரரால் தாபிக்கப்பட்ட மடங்கள் .............................. , ..............................

19. சிவபெருமான் மீது அன்பு பூண்டமையினால் .............................. சிவபாதசேகரன் என்ற விருதுப்பெயர் ஏற்பட்டது.

20. சைவ சமயத்தின் இரு பிரிவுகளாவன .............................., ..............................

### பகுதி 'ஆ'

* எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. இந்து நாகரிக வளர்ச்சியில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தினை பின்வரும் அடிப்படையில் ஆராய்க.
அ. இருக்கு வேதகால கடவுள் கோட்பாடு.
ஆ. தத்துவ சிந்தனை.
இ. அரசியல்.
ஈ. பெண்கள்.

02. புராணங்கள் கூறும் பஞ்ச இலக்கண மரபினைச் சுருக்கமாக விளக்கி இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் புராணங்கள் பெறும் முக்கியத்தினை ஆராய்க.

03. பல்லவர் கால பக்தி வளர்ச்சியினை பின்வருவனவற்றை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.
அ. சமய இலக்கியங்கள்.
ஆ. நாயன்மார்களும் ஆழ்வார்களும்.
இ. மன்னர்களின் பங்களிப்பு.

04. விஜயநகர நாயக்கர் காலத்தில் அரசியல், சமயம், இலக்கியம், கலை ஆகியவற்றின் வளர்ச்சிப் போக்கினை விளக்குக.

05. சாக்த மதம் தொடர்பாக பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
அ. காலந்தோறும் ஏற்பட்ட வளர்ச்சி.
ஆ. தத்துவக் கோட்பாடு.
இ. விழாக்களும் விரதங்களும்.
ஈ. சமூகச் செல்வாக்கு.

06. நவீன சீர்திருத்த இயக்கங்கள் தோற்றம் பெற்றமைக்கான சூழ்நிலையினைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு பிரமசமாசத்தின் பணிகளை விளக்குக.

07. ஆறுமுக நாவலர் சைவ சமயத்திற்கு ஆற்றிய பணிகளைத் தொகுத்து எழுதுக.

08. அநுராதபுர காலம் தொடக்கம் பொலநறுவைக்காலம் வரையிலான இந்துசமய வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை ஆராய்க.

09. பின்வருவனவற்றுள் நான்கிற்கு மட்டும் சிறுகுறிப்புகள் எழுதுக.
அ. வர்ணன்.
ஆ. முன்னேஸ்வரம்.
இ. சேக்கிழார்.
ஈ. திருமந்திரம்.
உ. திருவாவடுதுறை ஆதீனம்.

## பகுதி - II

* 'அ' பகுதியில் முதலாம் வினாவுக்கும், 'ஆ' பகுதியில் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

### பகுதி 'அ'

01. வேதாந்த சூத்திரம் என்ற நூலின் ஆசிரியர்,
1) பாதராயணர். 2) கௌடபாதர். 3) கோவிந்தபிள்ளை.
4) சங்கரர். 5) இராமனுஜர்.

02. நவக்கிரகங்களில் நடுவில் இருக்கும் கிரகம்,
1) சந்திரன். 2) சனி. 3) சூரியன்.
4) கேது. 5) புதன்.

03. வேதாங்கங்களின் எண்ணிக்கை,
1) 2 2) 3 3) 4
4) 6 5) 8

04. ராயர் கோபுர எழுச்சிக்காலம்,
1) குப்தர் காலம். 2) பல்லவர் காலம். 3) சோழர் காலம்.
4) நாயக்கர் காலம். 5) இருபதாம் நூற்றாண்டு.

05. பெண்களின் நன்மை கருதிச் செய்யப்படும் கிரியை,
1) ராஜ கர்மாணி. 2) புத்திர காமேஷ்டி. 3) ஸ்திரிகர் மாணி.
4) அஸ்வமேதம். 5) வாஜபேயம்.

* 06-10 வரையுள்ள வினாக்களில் அமைந்துள்ள வாக்கியங்கள் சரியாயின் "சரி" எனவும், பிழையாயின் "பிழை" எனவும் அடைப்புக்குள் எழுதுக.

06. ஒழுக்கக் கோட்பாட்டின் கடவுள் வர்ணன். (    )

07. இறைவனிடம் முற்றாக சரணாகதி அடைதல் பக்தி எனப்படும். (    )

08. தசோபநிடதங்களுக்கு உரை எழுதியவர் சங்கரர். (    )

09. சைவ சித்தாந்தம் கூறும் முத்தி சுத்தாத்வைதம். (    )

10. ''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்.'' எனக்கூறியவர் மெய்கண்டதேவர் ஆவார். (    )

* பின்வரும் வினாக்களின் விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.

11. அவைதீக மதங்கள் எனப்படுபவை யாவை?
..........................................................................................

12. இராமானுஜரால் எழுதப்பட்ட நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
..........................................................................................

13. நடராஜ மூர்த்தத்தில் தூக்கிய திருவடி குறித்து நிற்கும் தொழில் எது?
..........................................................................................

14. ஈழத்தில் இரண்டாம் சிவ தேவாலயம் என அழைக்கப்படும் தலம் எது?
..........................................................................................

15. கோயில்களில் விமானம் என அழைக்கப்படும் பகுதி யாது?
..........................................................................................

* பின்வரும் வினாக்களில் வரும் இடைவெளிகளில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

16. இறைவன் தாருகாவனத்தில் முனிவர்களின் அகந்தையை அடக்க எடுத்த மூர்த்தம் .............

17. நசிகேதனுக்கும் யமனுக்கும் நடைபெற்ற உரையாடல் .............................. உபநிடதத்தில் இடம்பெற்றுள்ளது.

18. மகேந்திரவர்மனுக்கு வழங்கப்பட்ட விருதுப் பெயர்கள் இரண்டு .............................. ..............................

19. விபுலானந்தரால் எழுதப்பட்ட இசை நூல் ..............................

20. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகக் காணப்படுவதால் .............................. எனப் பெயர் பெறும்.

### பகுதி 'ஆ'

* எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

02. ''இந்து தத்துவ வளர்ச்சிக்கு நிலைக்களனாக உபநிடதங்கள் விளங்குகின்றன.'' இக்கூற்றின் அடிப்படையில் பின்வருவனவற்றை ஆராய்க.
அ. உபநிடதங்களின் சிறப்பு.
ஆ. உபநிடதங்கள் கூறும் மகாவாக்கியங்கள்.
இ. உபநிடதங்கள் கூறும் அடிப்படைக் கோட்பாடுகள்.
ஈ. தரிசனங்களின் வளர்ச்சிக்கு உபநிடதங்களின் பங்களிப்பு.

03. வேதாந்தக் கோட்பாட்டு வளர்ச்சியினை பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
அ. வேதாந்த தத்துவக் கோட்பாடுகள் தோற்றம் பெறுவதற்கான காரணங்கள்.
ஆ. பிரமாணங்களும் பிரமாண நூல்களும்.
இ. மூலப்பொருள், உலகம் முத்தி பற்றிய சிந்தனைகள் என்பவற்றில் சங்கரர், இராமனுஜர் கருத்துக்கள்.

04. சைவ சித்தாந்த தத்துவக் கோட்பாட்டில் பதி பெறும் முக்கியத்துவத்தினை பின்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.
அ. கடவுள் உண்டு என்பதை நிரூபிக்கும் விதம்.
ஆ. பதியின் சர்வ வியாபகம்.
இ. பதிக்கும் பசுவுக்குமிடையிலான தொடர்பு.

05. ''ஆன்மாவை அணுத்தன்மையாக்குவது ஆணவம்.'' இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை சைவ சித்தாந்த தத்துவத்தின் அடிப்படையில் விளக்குக.

06. பண்டைய இந்துக்களின் பொருளாதார சிந்தனை வளர்ச்சி பற்றி கட்டுரை வரைக.

07. ''இந்துக்களின் வாழ்க்கை நெறியினை வளப்படுத்துவன புருடார்த்தங்கள்.'' இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

08. ''இந்துக் கோயில்கள் வளர்த்த கலைகளில் இசைக்கலையும் ஒன்று.'' இக்கூற்றினை பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் விளக்குக.
அ. நாயன்மார்களும் ஆழ்வார்களும்.
ஆ. பல்லவ, சோழ மன்னர்களின் ஆதரவு.
இ. பல்லவ, சோழர் கால சிற்பங்களில் இசைப்படிமங்கள்.
ஈ. உலகளாவிய ரீதியில் இசையின் இன்றைய நிலை.

09. இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் ஓவியக்கலை பெறும் முக்கியத்துவத்தினைப் பற்றித் தொகுத்து எழுதுக.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினைப்பற்றி சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
அ. அர்த்த சாஸ்திரம்.
ஆ. காஞ்சி கைலாச நாதர் கோயில்.
இ. ஆனந்தக் குமாரசுவாமி.
ஈ. இலிங்கோற்வர்.
உ. இந்துக்களின் அரசியற்கோட்பாடு.

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ஆவது தசாப்தத்தை நோக்கிய கல்விச்சேவையில்

O/L DAY CLASS

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

The Express Institute

Irupalai, Kopay.

# வடமராட்சி வெங்காயம் பெருமளவில் கொள்வனவு

வடமராட்சி,ஏப்.20

வடமராட்சிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தைக் கொள்வனவு செய்து, விதை வெங்காயமாகப் பயன்படுத்துவதற்கு வலிகாமம் பிரதேச விவசாயிகள் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தினமும் வலிகாமம் பிரதேச விவசாயிகள் பெருமளவில் வடமராட்சிக்கு வந்து ஒரு அந்தர் வெங்காயத்தை இரண்டாயிரத்து 500 ரூபா வீதம் வடமராட்சி விவசாயிகளிடம் கொள்வனவு செய்து எடுத்துச் செல்கின்றனர்.

கொள்வனவு செய்யப்படும் வெங்காயத்தை அடுத்து வரும் போகத்தில் பயிரிட விதை வெங்காயமாகப் பயன்படுத்தப்படவுள்ளதாக அவ்விவசாயிகள் தெரிவித்தனர். (04-236)

# சுற்றுலாப் பயணிகள் விரும்பும் சிற்றுண்டிகள்

தென்பகுதியிலிருந்து யாழ். வரும் சுற்றுலாப்பயணிகள் பருத்தித்துறை வடை, எள்ளு உருண்டைகளைப் பெருமளவில் ஆவலாக விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

இதனால் பருத்தித்துறைப் பகுதியில் வடை, எள்ளு உருண்டைகள் அன்றாடம் அதிக அளவில் விற்பனையாகின்றன.

பருத்தித்துறை வடை, எள்ளு உருண்டைகள் நாடு முழுவதும் அதிகமானோர் விரும்பிச் சுவைக்கும் சிற்றுண்டிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (04-236)

# தொலைக்காட்சி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.20

கைதடி அரச முதியோர் இல்லத்தில் வசிக்கும் முதியோர்களின் வசதிகருதி தொலைக்காட்சி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைக்காட்சியை நலன் விரும்பி ஒருவர் அன்பளிப்பாக வழங்கியதாக இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த நலன்விரும்பி முதியோர்களுக்கு மதிய உணவையும் வழங்கியுள்ளார். (04-224)

விற்பனைக்கு

உணவகங்களின் பாவனைக்கு உகந்த அலுமினியசோக்கேஸ் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0771751495

(97173)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06
05
1927

மறைவு
01
05
2009

## அமரர் கந்தையா கனகசபாபதி

(Rtd., Railway Head Guard)

திதி: பூர்வபட்ச ஸப்தமி

ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர் வாழ்பதிதனில்
அவர்க்கு நிகராய் எமை ஆளாக்கி
அறிவுடன் அன்பையும் ஊட்டி
பரிவுடன் பண்பையும் புகட்டிய
பாசம்மிகு அப்பாவே!
உறவோடு ஊரையும் அணைத்து
உயிர்க்குயிராய் எமைக்காத்த உத்தமரே!
ஆண்டொன்றானாலும் ஆறவில்லை எம் இதயம்
இறைபதம் அடைந்து இன்புற்றிருக்க
இறைஞ்சுகின்றோம் எந்நாளும்

என்றும் உங்கள் நினைவுடன்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

'விஜயாபதி',
கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய். 0213215011

(97157)

## முதலாம் ஆண்டு நினைவுகள்





| பிறப்பு | இறப்பு | இறப்பு | பிறப்பு |
|---|---|---|---|
| 1982 | 2009 | 2009 | 1993 |
| 01 | 01 | 04 | 06 |
| 18 | 10 | 20 | 08 |

அமரர் அருந்ததி-ஞானச்சந்திரன்

அமரர் அன்ரன்ஸ்ரனிலாஸ்-ஸ்ரலின்ராஜ்

ஆண்டு ஒன்று சென்றாலும்!
ஆறாது எம் துயரம்
மலர்ந்த உங்கள் முகம்
மண்ணில் மடிந்து போனதோ?
காலத்தால் அழியாது உங்கள் நினைவு
கனவிலும் நினைக்கின்றோம் உங்களை.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக பொலிகண்டி குழந்தை இயேசு ஆலயத்தில் 20.04.2010 காலை 7.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர்களின் பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், சகோதரர்
மற்றும் உறவினர்கள்.

ஆலடி,
பொலிகண்டி.

(97141)

## முதலாம் ஆண்டு நினைவாக



தோற்றம் 22 ★ 02 ★ 1946

மறைவு 18 ★ 02 ★ 2009



தோற்றம் 20 ★ 11 ★ 1980

மறைவு 30 ★ 04 ★ 2009

அமரர் இளையதம்பி அற்புதலிங்கம்

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
அரவணைக்கும் அன்புத் தெய்வமே!
ஊர் போற்றும் உத்தமராய் வாழ்ந்தவரே
தினமும் நீங்கள் நடமாடிய வீதி
திணறிப்போய் கிடக்கிறதே!
உள்ளம் எனும் கோயிலிலே
உயர்ந்து நடமாடுகிறீர்
உலகமெனும் மாயையிலே
உங்களை நாம் காண்போமே.

அமரர் அற்புதலிங்கம் காந்தராஜ் (வசந்தன்)

எங்கள் குடும்பத் தீபமே
எமதில்லம் ஒளி இழந்து போனதடா
இல்லை துயரென்று இனிய வார்த்தை
சொன்னாயடா
சொன்ன வார்த்தை ஓய முன்னர்
இதயத்துடிப்பு நின்றதடா
பெற்ற தாய் தினமும் கதறித் துடிக்கின்றா
உம்மை நாம் இனிஎங்கு காண்போம்.

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது எங்கள் துயரம்

பெரியவிளான்,
இளவாலை.

பிரிவால்வாடும்:
குடும்பத்தினர்.


(97156)

## முதலாம்ஆண்டு நினைவு அஞ்சலி

### அமரர் மயில்வாகனம் பேரின்பநாதன் (நாதன்)

தோற்றம் 03★11★1954

மறைவு 30★04★2009



திதி: ஷஷ்டி

வேலணை மண்ணில்
பூத்து,
நல்லூரில் வாழ்ந்து
எல்லோர் மனதிலும்
குடி கொண்டிருக்கும்
"மனிதருள்
மாணிக்கமே"
எங்களை விட்டு
பிரிந்து
ஒரு வருடம் என்ன?
ஓராயிரம் வருடங்கள்
சென்றாலும்
உங்கள்
நினைவலைகளைப்
பிரிக்க முடியாது.

உங்கள்
நினைவுகளுடன் வாழும்:
குடும்பத்தினர்.

'தெய்வ மயில் இல்லம்',
74/1, செட்டித்தெரு,
நல்லூர்.
T.P.2227038

(97155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.07.1990

★ சுமார் 150 ஈழத்தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு தமிழகம் நோக்கிச் சென்ற சில படகுகளை இலங்கைக் கடற்படையினர் தாக்கி மூழ்கடித்ததில் அகதிகள் பலர் மரணமடைந்ததாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.

★ வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி சார்க் அமைப்பின் நாடுகளுக்கு எடுத்துக் கூறுவதற்காக அங்கு செல்லவிருக்கும் அனைத்துக் கட்சிகள் குழுவில் ஐ.தே.கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளின் பிரதிநிதிகள் மாத்திரமே பங்கேற்கவிருப்பதாகத் தெரிவிப்பு.

17.07.1990

★ கடந்த மாதம் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஆரம்பித்த பின்னர் அம்பாறை மாவட்டத்தில் சுமார் 650 தமிழ்ப் பொது மக்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதி பிரேமதாச இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிப்பு.

★ இராணுவ நடவடிக்கையில் வெற்றியும் தோல்வியும் சகஜம் எனக் கூறியதன் மூலம் கொக்காவில் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றிய சம்பவத்தை துணைப்பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன சமாளிக்க முயல்வதாக விமர்சிப்பு.

18.07.1990

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நாட்டின் ஒற்றை ஆட்சி முறையை சமஷ்டி ஆட்சி முறைக்கு மாற்றுவதே ஒரேவழி என வடபகுதி மதத்தலைவர்கள் கூட்டாக ஜனாதிபதி பிரேமதாசவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிப்பு.

★ இலங்கையில் தற்போது நடைபெறும் யுத்தத்தில் எந்தவொரு வெளிநாட்டு அரசும் குறுக்கிடுவதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து இந்தியா கவலை அடைவதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் இலங்கை ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகரிடம் தெரிவிப்பு.

19.07.1990

★ அம்பாறை மாவட்டம் பாளையடி வட்டையில் இருந்த இலங்கை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிப்பு.

★ இலங்கையிலிருந்து இந்தியா சென்ற அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்குழு, இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றை இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி, நிலைமையை ஆராயுமாறு பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களிடம் தெரிவிப்பு.

20.07.1990

★ ஆனையிறவுக்கு அருகிலுள்ள குறிஞ்சாத்தீவில் உலங்கு வானூர்திகள் மூலம் இலங்கை இராணுவத்தினர் தரையிறக்கப்பட்டு வருவதோடு பலாலியிலும் விமானங்கள் மூலம் படையினர் கொண்டுவரப்பட்டுக் குவிக்கப்படுவதாகத் தெரிவிப்பு.

★ வடக்கு - கிழக்கில் இலங்கை அரசு பயங்கர நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதனை அமெரிக்கா சகித்துக் கொண்டிராது என அமெரிக்க துணை வெளியுறவு அமைச்சர் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை.

21.07.1990

★ வெடித்துச் சேதத்தை ஏற்படுத்தாத - துர்நாற்றத்தைக் கிளப்பும் - ஒரு வகைக் குண்டுகள், குண்டு வீச்சு விமானங்களிலிருந்து நேற்று யாழ்.நகரப் பகுதிகள் மீது பரவலாக வீசப்பட்டதாகத் தெரிவிப்பு.

★ ஈழத் தமிழரின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளிக்க ராஜதந்திர ரீதியிலான புதிய முன்முயற்சிகளை இந்தியா எடுக்க இருப்பதாக இந்தியப் பிரதமர் வி.பி.சிங். தெரிவிப்பு.

22.07.1990

★ கிளிநொச்சி பொலிஸ் நிலையம் மீதான தமது முற்றுகையின்போது தம்மிடம் சரணடைந்த 17 பொலிஸார் விடுதலைப் புலிகளால் பத்திரிகையாளர் முன்னிலையில் வைத்து விடுவிப்பு.

★ தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஈரோஸ் ஆகிய அமைப்புகள் அல்லாத ஆறு தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகள் கொழும்பில் கூடி வடக்கு - கிழக்கில் எழுந்துள்ள பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பது தொடர்பாகப் பேச்சுவார்த்தை மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

23.07.1990

★ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான யுத்தத்தில் அடுத்து வரும் பத்து நாள்களும் மிக முக்கியமான நாள்களாக இருக்கும் என வடபகுதிக்குப் பொறுப்பான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ தெரிவிப்பு.

★ தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஒற்றையாட்சிமுறையின் கீழ் தீர்வு காணும் வாய்ப்பு கைநழுவிப் போய்விட்டது என ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை ராஜினாமாச் செய்வதையொட்டி ஈழவர் ஜனநாயக முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிப்பு.

24.07.1990

★ ஜே.ஆர்.ராஜீவ் கைச்சாத்திட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தம் அவர்களின் காலத்திலேயே நிறைவேற்றப்படவில்லை எனத் தமிழக முதலமைச்சர் கருணாநிதி தெரிவிப்பு.

★ இலங்கையில் சுதந்திரதாயகம் ஒன்றை நிறுவும் விடயத்தில் தமிழக அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவதாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி குற்றச்சாட்டு.

25.07.1990

★ வவுனியா நகரத்தில் உள்ள பஸ் நிலையம் உட்பட முக்கிய இடங்களிலும் நகரை அண்டிய கிராமங்களிலும் தமிழில் 'கஜபாகு நகரம்' என எழுதப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★ ஆனையிறவு, பரந்தன் பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சண்டையில், எண்ணிக்கை குறிக்கப்படாத விடுதலைப் புலிகளுடன் போரிட 3 ஆயிரம் இராணுவத் துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

26.07.1990

★ ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேறி பரந்தனில் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவத்தினர் நேற்று கிளிநொச்சி இராணுவ முகாம்வரை முன்னேறிச் சென்றதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.

★ கடந்தவாரம் இடம்பெற்ற இராணுவத் தாக்குதல் காரணமாக கிளிநொச்சிச் செயலகம் முற்றாகச் சேதம் அடைந்ததாகத் தெரிவிப்பு.

27.07.1990

தென்பகுதியில் மீண்டும் ஜே.வி.பி.தீவிரவாதிகளின் வன்செயல்கள் தலைதூக்கியுள்ள தாகவும் மாத்தறையில் 15 கிராமவாசிகளை ஜே.வி.பி.தீவிரவாதிகள் கடத்திச் சென்று சுட்டுக்கொன்று விட்டதாகவும் தெரிவிப்பு.

★ ஐந்து தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழுவொன்று ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் மக்களின் உயிர், உடைமைகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுப்பு.

28.07.1990

★ இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவதற்கு இந்தியா, இலங்கை அரசுடன் தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகிறது என இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் தெரிவிப்பு.

★ யாழ்.கோட்டை முகாமுக்குள் முற்றுகைக்கு உட்பட்டிருக்கும் காயமடைந்துள்ள இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டுமானால் குடாநாட்டில் யுத்த நிறுத்தமொன்றை அறிவிக்குமாறு நிபந்தனை விதித்த விடுதலைப்புலிகளின் கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

29.07.1990

★ இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாண இயலாதென பிரதமர் டி.பி.விஜேதுங்க மாலைதீவில் வைத்துத் தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

★ திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்ற சிங்கள மக்கள் மீண்டும் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டு குடியமர்த்தப்பட்டு வருவதாகத் தெரிவிப்பு.

30.07.1990

★ யாழ்.குடாநாட்டுக்குள் உளவாளிகள் ஊடுருவுவதைக் கண்காணித்துத் தடுப்பதற்கான நடவடிக்கையாக யாழ்.மாவட்டத்துக்குள் வருவதற்கும் இங்கிருந்து வெளியேறுவதற்கும் தம்மிடம் அனுமதி பெறவேண்டும் என விடுதலைப்புலிகள் கட்டுப்பாடு விதிப்பு.

★ தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் உகந்த வழி என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ கருத்துத் தெரிவிப்பு.

31.07.1990

★ வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு எதிர்வரும் பத்து நாள்களுக்குள் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்படாவிட்டால் அங்கு பசி, பட்டினி நிலை ஏற்படும் எனச் சர்வதேச நிவாரண நிறுவனங்கள் தெரிவிப்பு.

★ வடக்கு - கிழக்கில் சண்டையை உடன் நிறுத்தும்படி இந்தியாவின் முப்பது முக்கிய பிரமுகர்கள் இலங்கை அரசிடம் விடுதலைப்புலிகள் இயக்கத்திடமும் வேண்டுகோள் விடுப்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பரிசோதகர், மருந்துக் கலவையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஏப்.20

வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் மருந்துக் கலவையாளர் பயிற்சிநெறி - 2010 இற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஜி.சீ.ஈ (உ/த) பரீட்சையில் விஞ்ஞானப்பிரிவில் உயிரியல் அல்லது இணைந்த கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருப்பதுடன், ஜி.சீ.ஈ (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களுக்கு குறையாமலும் ஆங்கிலமொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமலும் சிங்கள/ தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றுடன் மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் உள்ள ஆண்கள் மட்டுமே இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.இப்பயிற்சிநெறி 6 மாதங்கள் வெளிக் களப் பயிற்சியுடன் 1 1/2 வருடப் பயிற்சிக் காலம் கொண்டதாகும்.மருந்துக் கலவையாளர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஜி.சீ.ஈ (உ/த) பரீட்சையில் இரசாயனவியல் உட்பட பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகியவற்றில் ஏதாவது 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தலுடன் ஜி.சீ.ஈ (சா/த) பரீட்சையில் தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்திற்குத் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஒருவருட பயிற்சிக் காலம் கொண்ட இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் உள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை அல்லது அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பெற்று அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சுச் செயலாளர் இ. இரவீந்திரன் அறிவித்துள்ளார்.அத்துடன் ஏற்கனவே சேவையிலுள்ள அரச ஊழியர்கள் தமது விண்ணப்பத்தைத் தமது திணைக்களத் தலைவரூடாக அனுப்புமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(1-16)

## ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு ஆங்கில மொழிமூலம் தோற்றும் மாணவருக்குப் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஏப். 20

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு ஆங்கில மொழிமூலம் தோற்றவுள்ள யாழ். கல்விவலய மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

''வினாத்தாள்களுக்கு விடையளிக்கும் முறைமை'' எனும் தலைப்பில் நாளை செவ்வாய்க்கிழமை விஞ்ஞான பாடத்திற்கும், மறுநாள் புதன்கிழமை கணித பாடத்திற்குமான பயிற்சி வகுப்புக்கள் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

• இந்துமகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்தின் துறைசார் நிபுணர்களால் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புக்களில் ஆங்கில மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார்.

(ஒ-6)

## ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் மற்றும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.20

2009ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேற்றினை எய்திய மாணவர்களின் விவரத்தை சில பாடசாலைகள் அனுப்பிவைத்துள்ளன. அந்தப் பெறுபேறுகள் இங்கு பிரசுரமாகின்றன.

யாழ்.மத்திய கல்லூரி

தமிழ்மொழி மூலம்

பி.பனோஜன்-7ஏ2பி, ஏ.தனுசன்-6ஏ2பிசி, ரி.இந்துஜன்-5ஏ2பி2சி, எஸ்.ரஜித்குமாரன்-5ஏ3பிசி, ஆர்.கிரிசாந்- 4ஏ2பிசிஎஸ், யு.கெங்கேசன்- 4ஏ2பிசி2எஸ், என்.ரஜீவன்-4ஏ3பிசிஎஸ், ரி.ஜெயரூஜன்-4ஏ2பி2சிஎஸ், எஸ்.கிரிசாந்த்- 4ஏ4சி, எஸ்.நிதர்சன்-3ஏ3பிசி2எஸ், வை.துசிகன்-3ஏ2பி3சிஎஸ், ஆர்.டயான்சன்- 3ஏ3பி2சிஎஸ், வி.நிதுசன்-3ஏபி2சி2எஸ், கே.பௌசான்- 3ஏ2சி4எஸ், ரி.லவேன்சன்- 3ஏ2பி2சிஎஸ், எம்.மதன்ராஜ்-3ஏபி4சிஎஸ்,

ஜே.யூடெட்டானிஸ்ரான்-3ஏ3பிசி2எஸ், யு.டானியல்ரான்-3ஏ2பி3சிஎஸ், டபிள்யூ.பெனாஜா-3ஏபி3சிஎஸ், ஏ.கஜீபன்- 3ஏபி2சி3எஸ், என்.நிதர்சன்-3ஏசி3எஸ், எஸ். சதோக்- 2ஏ3பி3சிஎஸ், என்.பரந்தாமன்- 2ஏ3பி3சிஎஸ், ரி.யேசுரன்- 2ஏ4பி2சிஎஸ், எஸ்.பிரணவன்-2ஏ3பி4சி, பி.சுதர்சன்- 2ஏ3பி2சி2எஸ், எல்.லாவண்யன்-2ஏ3பி3 சிஎஸ்.

ஆங்கிலமொழி மூலம்

எஸ்.சிறீபிரவீண்-3ஏ3பி2சிஎஸ், எஸ்.சிறீலக்ஸ்மன்-2ஏ2பி3சி2எஸ், எஸ்.ஜீவிதன்- 2ஏபி3சி3எஸ், ஆர்.விதூசணன்- ஏபி3சி3எஸ், எஸ்.அம்புஜன்- ஏ5சி2எஸ், என்.நொரோசன்-ஏ5சி2எஸ்.

யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்

இ.டிலானி-5ஏ3பிசி, கா.ஜெயரூபினி-5ஏ2பிசிஎஸ், பா.ராஜினி-2ஏ2பி3சி2எஸ், த.மயூரியா-2ஏ3பி2சிஎஸ், சி.அகிலன்-2ஏபி3சி2எஸ், தெ.கீர்த்திகா- 2ஏபி2சி3எஸ், ப.வனிதா-2ஏபிசி3எஸ், ஆ.லக்ஷனா- 2ஏ2சி3எஸ், இ.கஜேந்தினி-ஏ2பி4சிஎஸ், இ.பாலேந்திரன்-ஏ2பி3சி2எஸ், கு.நிரோஜன்-ஏபி2சி3எஸ், கி.சுகந்தன்- ஏபிசி4எஸ்.

யா/கரணவாய் மகாவித்தியாலயம்

பு.தாஸ்மோகன்-6ஏ2பிஎஸ், சி.மயூரன்- 4ஏ3சிஎஸ், பா.துவாரகா- 4ஏ4பிசி.



சிங்கர் நிறுவனத்தின் 2009ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவின்போது மிகச்சிறந்த பிராந்திய முகாமையாளருக்கான விருதை சிரேஷ்ட பிராந்திய முகாமையாளர் மாணிக்கவேல் மகேசரட்ணம், ஆசியாவுக்கான சிங்கர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கெவின் லோக்கரிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் அருட்சகோதரி மேரி அஞ்சலிக்கா (A.C.) அவர்களின் பாசமிகு தாய் திருமதி மேபிள் அல்பிரட் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.

(சி/566975)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்க மிகப்பொருத்தமானவர் பொன்சேகாவே

## ஐ.தே.கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.20

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பதற்கு மிகவும் பொருத்தமானவர் ஜெனரல் சரத் பொன்சேகாவே - என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

கடந்த பதினான்கு ஆண்டுகளாக எதிர்க்கட்சித் தலைமை எவ்வாறு செயற்பட்டதென்பதை விளங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை என ஜனநயாக தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே, வலுவான எதிர்க்கட்சியொன்றின் செயற்பாட்டிற்கு சிறந்த எதிர்க்கட்சித் தலைமை தேவை எனவும், அந்தத் தகுதி தமது கட்சியின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கே காணப்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


எதிர்கட்சித் தலைவர் பதவியை வகிப்பவர் தேசிய ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் தலைவராக இருக்க வேண்டுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிக ஆசனங்களை பெற்றுக் கொண்ட எதிர்க்கட்சியிலிருந்து தலைவர் தெரிவு செய்யப்படுவது வழமை என்ற போதிலும், காத்திரமான எதிர்க்கட்சி செயற்பாட்டிற்காக மரபுகளை மீறுவதில் தவறில்லை என்றும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு தொடர்பில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென புதிய சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்துள்ளார்.

(சி)

## மரண அறிவித்தல்கள்



### ஆறுமுகம் தருமராசா

பண்ணாகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் தருமராசா நேற்று (19.04.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமிதேவியின் அன்புக் கணவரும் சுரேஸ் (லண்டன்), ரமேஸ் (சுவிஸ்), தனேஸ், பாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

(97176)

தகவல்:
தருமராசா தனேஸ் (மகன்).



### திருமதி மேபிள் அல்பிரட்

கரம்பனைப் பிறப்பிடமாகவும் இல. 12, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேபிள் அல்பிரட் 18.04.2010 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற ஊர்காவற்றுறை பிரபல வர்த்தகர் S.M.அல்பிரட்டின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை- முத்தம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் வசந்தி (UK), ராஜன், சாந்தி(Holland), றஞ்சன் (UK), காலஞ்சென்ற கொண்சி, அருட்சகோதரி ஞானதர்சினி A.C. (கார்மேல் மடம், கல்முனை ஆசிரியர் -கார்மேல் பத்திமா கல்லூரி, கல்முனை), மேசி (UK), அருட்சகோதரி அஞ்சலிக்கா A.C. (கார்மேல் மடம், றக்கா வீதி, யாழ்ப்பாணம், ஆசிரியர்- யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற திருமதி ஜோசப்பின் மற்றும் சேவியரின் சகோதரியும் ஜெயசீலன் (UK), அருமைநாயகம் (Holland), நிம்மி (UK), எரிக்வேதநாயகம் (UK) ஆகியோரின் மாமியும் செல்வி, அன்ரன், விக்ரர், உதயச்செல்வி, பிரியதர்சினி, தமிழ்செல்வன், தமிழ்வேந்தன், டறியோ, ருேத்திக்கா, தர்சிகா ஆகியோரின் பேர்த்தியும் டமியோவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுண்டிக்குளி புனித யுவானியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் கரம்பன் செபஸ்தியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, கரம்பன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4401

(97176)

தகவல்:
ராஜன் [illegible] (மகன்).

## கரப்பந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு,ஏப்.20

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை அணிகளின் 15,17,19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8.20 மணி முதல் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

(50-86)

## புதுவருட சேமிப்பு வாரம்

நாவற்குழி,ஏப்.20

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி திட்டத்தின் கீழ் சமுர்த்தி புதுவருடச் சேமிப்பு வாரம் தற்போது நடத்தப்பட்டு வருகின்றது.


சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கிராமம் கிராமமாக சமுர்த்தி பயனாளிகளுக்கு சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வை வழங்கி வருகின்றனர். சேமிப்புக்களை சமுர்த்தி வங்கியில் இடும் நடைமுறைகளுக்கு வழிகாட்டுதல்களையும் வழங்கி வருகின்றனர்.

வருடாந்த சித்திரைப் புத்தாண்டையொட்டி புதுவருடச் சேமிப்பு வாரம் சமுர்த்தி திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(50-121)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை ஆனந்தமூர்த்தி



12ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை (தம்பி ஐயா) ஆனந்தமூர்த்தி நேற்று (19.04.2010) திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தனபாக்கியலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் சின்னத்தங்கம் (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கண்ணகைதாசன் (கனடா), காலஞ்சென்ற சிலம்புச்செல்வன் மற்றும் திருவருட்செல்வன் (கனடா), பேரின்பதாசன் (கனடா), திருவருட்செல்வி (கனடா), செல்வலெட்சுமி (லண்டன்), தனலெட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேஸ்குமார், சுஜார்த்தனன், மோகனதாஸ், பாலகுமார், பிறவீனா, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனும் கமலாதேவி, விநாயகமூர்த்தி, காலஞ்சென்றவர்களான சத்தியமூர்த்தி, சுந்தரமூர்த்தி மற்றும் கிருபானந்த வாரி (பிரான்ஸ்), கிருஷ்ணமூர்த்தி, நல்லைவாசன் (கனடா), கண்ணகை, மணிமேகலை (முன்னாள் ஆசிரியை, கமலாம்பிகை வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் திருசுந்தரம்பிள்ளை, கமலம், மனோரஞ்சிதம், திலகவதி, கமலாதேவி, வசந்தமலர், கனகலிங்கம், ரதிதேவி, மயில்வாகனம், சிவபாக்கியம், சரஸ்வதி, பொன்மணி, காலஞ்சென்ற விஜயரெட்ணம் (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புங்குடுதீவு மணற்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(97174)

தகவல்:
தம்பிகிட்டு (சகோதரன்),
இன்பன் (மகன்).

### திருமதி செல்லம்மா நடராசா

கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி செல்லம்மா நடராசா நேற்று (19.04.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மகளும் அப்பாக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும் நடராசாவின் அன்பு மனைவியும் ஜெயசுந்தரி, ஜெய்சோதி (கொழும்பு), ஜெயபாலசுந்தரம் (பிரதேச சபை, கொடிகாமம்), ஜெயராசலிங்கம் (ஆட்டோ லிங்கம்), ஜெய்ராணி (ஜேர்மனி), ஜெயக்குமாரி (சுவிஸ்), முருகதாஸ் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயும் நடேசமூர்த்தி (கொழும்பு), சறோஜினிதேவி (சித்த ஆயுள் வேத கல்லூரி, கைதடி), காலஞ்சென்ற சாந்தநாயகி மற்றும் அருளம்பலம் (ஜேர்மனி), முருகையா (சுவிஸ்), அனுசுஜா (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற அன்னப்பிள்ளை மற்றும் சிவக்கொழுந்து, வள்ளியம்மை, செல்வராசா ஆகியோரின் மைத்துனியும் ஜெயந்தன், தர்சினி, நர்மதன், சுஜீவன், நிருபன், கஜானன், சதீசன், ரமணன், செந்தாளன், செந்தூரன், நந்தகோபன் (பிரான்ஸ்), ஜெயப்பிரதா ஜனனி (கொலண்ட்), கிரீஷன், தர்ஷன், சுலக்ஷன், கீர்த்தனா (ஜேர்மனி), தினேஷ், துவாரகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிராம்புவில் மேற்கு வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.

(சி/566973)


தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக்கான உங்கள் நுழைவாயிலில்...









# சர்வதேச வர்த்தகக் கண்காட்சியைக் கண்டுகளிக்க நேற்று அதிக எண்ணிக்கையான பார்வையாளர்கள்

'யாழ்ப்பாணத்துக்கான உங்கள் நுழைவாயில்' என்னும் தொனிப் பொருளிலான யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை -2010 கண்காட்சி நிகழ்வின் இரண்டாம் நாளான நேற்று அதிகளவிலான மக்கள் ஆர்வத்துடன் கண்டு களித்ததைக் காண முடிந்தது.

தொழில்முயற்சியாளர்கள், வர்த்தகச் சமூகத்தினர், தொழில்நுட்பத்துறை சார்ந்தோர், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

தென்பகுதியை சேர்ந்த வர்த்தக நிறுவனங்களினதும், இந்தியாவைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களினதும் காட்சிக் கூடங்களில் அதிக மக்களைக் காண முடிந்தது.

அத்துடன் வடபகுதியின் உள்ளூர் உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியுள்ள கூடங்களையும் ஆர்வத்துடன் தென்பகுதி மக்களும், வடபகுதி மக்களும் பார்வையிடுவதையும் பொருள்களை கொள்வனவு செய்து வருவதனையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும் யாழ் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெற்று வரும் தொடர் கருத்தரங்குகளிலும் அதிகளவில் மக்கள் பங்கேற்றனர். இந்தத் தொடர் கருத்தரங்கு சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஓர் அங்கமாகவே இடம்பெற்று வருகிறது.

யாழ்ப்பாணம் வர்த்தகக் கைத்தொழில் மன்றமும் வரையறுக்கப்பட்ட இலங்கை கண்காட்சி மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மூன்று நாள் சர்வதேச வர்த்தகச் சந்தையின் இறுதிநாள் இன்றாகும்.

(50-14)

# கண்காட்சியிலிருந்து வெளிவந்த கருத்துக்கள் சில...!



**செல்வி கௌசிதசில்வா**
**(நிறைவேற்றுப் பணிப்பாளர், நேர்ச்சர்ஸ் பியூட்டி கிறியேஷன்ஸ் லிமிட்டெட்)**

நாட்டின் பல்வேறு பாகங்களிலும், எமது கிளைகளை திறந்துள்ள நாம் தற்போது முதன் முறையாக இந்தக் கண்காட்சி நிகழ்வின் மூலம் எமது சேவைகளை யாழ்ப்பாண மக்களுக்கு அறிமுகப்படுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. தமது முக அழகைப் பேண விரும்பும் பெண்கள் எமது காட்சிக்கூடத்துக்கு வருகை தந்து முக அழகைப் பேணிக் கொள்வதுடன், அவை தொடர்பான அழகுக் குறிப்புக்களையும் பெற்றுச் செல்கின்றனர். இலவசமாகவே இவற்றை வழங்கி வருகின்றோம். அத்துடன் சலுகைக் கட்டண அடிப்படையிலும் கிறீம் வகைகளையும் வழங்கி வருகின்றோம்.

கடந்த இரண்டு தினங்களும் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் எமது காட்சிக்கூடத்தினூடாக முக அழகைப் பேணியுள்ளனர். தொடர்ந்தும் பெண்கள் ஆர்வத்துடன் எமது காட்சிக்கூடத்தை நாடி வருகின்றனர். அதிக எண்ணிக்கையான ஆண்களும் கிறீம் வகைகளை கொள்வனவு செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாண மக்கள் எமக்கு வழங்கி வரும் ஆதரவு கண்டு மகிழ்வடைகின்றோம். விரைவில் யாழ்ப்பாணத்தில் எமது கிளையைத் திறந்து மக்களுக்கு சேவையாற்றவுள்ளோம்.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை நிகழ்வு மூலம் யாழ்ப்பாண மக்களும் தொழில் முயற்சியாளர்களும் அதிக நன்மை அடைந்து வருகின்றனர்.



**எஸ்.சத்தியசீலன்**
**(உரிமையாளர், ராஜா கிறீம் கவுஸ்)**

நடைபெறும் இந்த வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாண மக்களுக்கு மிக மிகப் பயனுடையது. தென்பகுதி வடபகுதி தொழில் முயற்சியாளர்களை இது ஒன்றிணைத்துள்ளது.

இவ்வாறான கண்காட்சி நிகழ்வு தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவேண்டும். தொழில்நுட்ப அறிவினையும் சில நவீன இயந்திர சாதனங்களையும் இதன் மூலம் அறிய முடிந்தது.

ஹோட்டல் தொடர்பான காட்சிக்கூடமும், ஐஸ்கிறீம் தயாரித்தல் தொடர்பான காட்சிக்கூடமும் எனக்கு மிகவும் பிரயோசனமாக இருந்தது. இவை மட்டுமன்றி நடைபெற்று வரும் கருத்தரங்குகளும் புதிய தொழில் முயற்சியாளர்களுக்கு பயன்மிக்கதாக இருக்கும் என நம்புகிறேன்.

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து மக்களும் நிச்சயமாக பார்த்துப் பயன்பெற வேண்டிய கண்காட்சி இதுவாகும்.

நேர்காணல் : உமா
படங்கள் : ரட்ணம்



**ம. இராமகிருஷ்ணன்**
**(ஆசிரியர், கோட்டக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்)**

இந்த வர்த்தகச் சந்தை கண்காட்சி நிகழ்வு மிகவும் பயனுடையதாக அமைந்துள்ளது. கடந்த 30 வருட காலமாக எமது பகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பல்வேறு பொருள்களை யாழ்ப்பாணத்தில் பெறமுடியாதிருந்தது. யுத்தம் முடிவுற்ற நிலையில் யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக சர்வதேச வர்த்தகச் சந்தை இடம்பெறுகின்றது. இதன் மூலம் தென்பகுதி வர்த்தக நிறுவனங்கள் தொடர்பான விடயங்களை அறியமுடிகின்றது. மலிவு விலையில் பொருள்களைப் பெறமுடிகிறது.

இந்திய நிறுவனங்கள், இலங்கையின் தென்பகுதி நிறுவனங்களின் பொருள்களுடன் எமது பகுதி உள்ளூர் உற்பத்திகளும் காட்சிப்படுத்தியிருக்கின்றமையானது மிகவும் வரவேற்கத்தக்கது.

இவ்வாறான முயற்சிகள் எமது உள்ளூர் உற்பத்திகளுக்கு ஏற்ற சந்தை வாய்ப்பை பெறக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் எமது பகுதி உற்பத்திகளை சர்வதேச மட்டத்திற்கு அறிமுகப்படுத்தவும் உதவும்.

உள்ளூர் உற்பத்திகளுக்கும் இடம்கொடுத்து சர்வதேச வர்த்தகச் சந்தையினை யாழ்ப்பாணத்தில் நடத்துகின்றமை மிகப் பயனுள்ளதாகும்.



**சுரேன் குக்**
**(முகாமைத்துவ பணிப்பாளர், சுரேன் குக் ஏஜென்சி நிறுவனம்)**

கடந்த முப்பது வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் பெரியளவிலான வர்த்தகச் சந்தை இடம்பெற்று வருகின்றது. இதன் மூலம் யாழ்ப்பாண மக்கள் தமக்குத் தேவையான எந்தப் பொருளாக இருந்தாலும் அதனைப் பெறக்கூடியதாக இருக்கிறது.

எமது நிறுவனத்தின் காட்சிக்கூடமும் இங்கு உள்ளது. எமது காட்சிக்கூடத்தில் சில நவீன இயந்திரங்களையும் காட்சிப்படுத்தியுள்ளோம். குறிப்பாக டெங்கு நோய் தொற்றுக் காவிகளை கட்டுப்படுத்தும் மருந்துக்களை தெளிக்கும் நவீன மருந்து விசுறும் கருவிகளை காட்சிப் படுத்தியிருக்கிறோம்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வர்த்தகக் கண்காட்சிகள் இடம்பெற்றன. எனினும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் இந்த வர்த்தகக் கண்காட்சியிலேயே எமது நிறுவனம் பங்கேற்றுள்ளது.

புதிய சந்தை வாய்ப்புக்கள் யாழ்ப்பாணத்தில் உருவாகி வருகின்றன. அதற்கு ஏற்ற களம் அமைத்து தருவதாக ' யாழ்ப்பாணம் வர்த்தகச் சந்தை-2010' நிகழ்வு அமைந்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி

உதயன்

(ஏப். 18 - 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 17 ஆவது செயலமர்வு நாளை முதல் மூன்று நாள்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில்

## பேருரைகள், விசேட கருத்துரைகள் என்பன நடைபெறும்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பதினேழாவது வருடாந்தச் செயலமர்வுகள் நாளை புதன்கிழமை முதல் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 3 நாள்கள் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன. விஞ்ஞான சங்கத்தின் தலைவரும் மருத்துவ பீடாதிபதியுமான பேராசிரியர் க.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்துகொள்வார்.

முதலாம் நாள் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்விலே பேராசிரியர் க.பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்கப் பேருரை "உடலுக்கு வெளியே கருக்கட்டல் - இலங்கையில் முன்னேறியுள்ள கருவளக் கவனிப்பு (In - vitro Fertilization: Advanced Fertility care in SriLanka) என்னும் தலைப்பில் நடைபெறும். இப்பேருரையினை மகப் பேற்றியல் சக பெண்நோயியல்துறைப் பேராசிரியரும் கொழும்பு மருத்துவ பீடா திபதியுமான பேராசிரியர் ஹர்சலால் செனவிரத்ன நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் இந்தவருடக்கருப்பொருளான "பாரம்பரிய உணவுகள் (Traditional Foods)" பற்றிய கருத்தரங்கு நடைபெறும். உயிர் இரசாயனவியல் பேராசிரியை வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கிலே, யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.எஸ்.சிவலிங்கராஜா "யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய உணவுகள்" எனும் தலைப்பிலும், யாழ் மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறையைச் சேர்ந்த கலாநிதி எஸ்.சிவகணேஸ் "பாரம்பரிய உணவுகளும் சுகமும் (Health & Traditional Foods)என்னும் தலைப்பிலும், திருநெல்வேலி விவசாயத்திணைக்கள விவசாய விரிவாக்க உதவிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் "யாழ். குடாவில் பாரம்பரிய உணவுப்பயிர்கள் (Traditional Food Crops in Jaffna Peninsula)" என்னும் தலைப்பிலும், யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் "பாரம்பரிய உணவுகளின் தேவையும் வழங்கலும் (Demand & Supply of Traditional Foods)" என்னும் தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர்.

பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கணித - புள்ளிவிவரவியற்றுறைக் கலாநிதி சி.ஸ்ரீசற்குணராசா தலைமையில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தூய விஞ்ஞானப் பிரிவின் தலைவியும் யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல்துறைத் தலைவியுமான கலாநிதி திருமதி சிவசாந்தினி குகநாதன் "மீன்களில் அத்தியாவசிய கொழுப்பு அமிலங்கள் (Esse ntial Fatty Acids of Fish)" என்னும் தலைப்பில் உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலைப் புற்று நோயியல் சிகிச்சை நிபுணர் கலாநிதி ந.ஜெயக்குமாரன் "மருத்துவத்தில் கதிர்வீச்சின் பாதுகாப்பான பயன்பாடு (Safe Use of Radi ation in Medicine) என்னும் தலைப் பில் உரையாற்ற உள்ளார்.

பிற்பகல் 3.15 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறைக் கலாநிதி என்.சிவயோகன் தலைமையில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரயோக விஞ்ஞானப் பிரிவின் தலைவியும் யாழ். பல்கலைக்கழக விவசாய இரசாயனவியற்றுறைத் தலைவியுமான கலாநிதி திருமதி நளினா ஞானவேல்ராஜா "தாவர பரிகரிப்பு - குறைந்த தொழில்நுட்ப உயிர்ப் பரிகரிப்பு முறை (Phytoremedi ation: A low - Technology Bioremedi ation)" என்னும் தலைப்பில் உரையாற் றுவார்.

அதனைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக விவசாய இயந்திரவியற்றுறையைச் சேர்ந்த திருமதி துஷ்யந்தி மிகுந்தன் "நிலத்தடி நீரை முகாமைத்துவப்படுத்துவதில் கருவியாகும் நீர் பாதிப்புறும் தன்மையில் கணிப்பீடு (Vulnerability assessment- an effective tool for ground water manage ment)" என்னும்தலைப்பில்உரையாற்றுவார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வு யாழ். பல்கலைக்கழக நூலககேட்போர் கூடத்திலும் பௌதிகவியல் விரிவுரை மண்டபங்களிலும் நடைபெறும். இந்நிகழ்வுகளிலே தூய விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம், மருத்துவ விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த ஆராய்ச்சிகள் சமகாலத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளன. கலாநிதி இ.விக்னேஸ்வரன் (கணித புள்ளிவிவரவியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்), கலாநிதி மீனா செந்தில்நந்தனன் (இரசாயனவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி துஷ்யந்தி மிகுந்தன் (விவசாய இயந்திரவியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி நிர்மலா ரவிமன்னன் (தாவரவியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்), பேராசிரியர் க.சிவபாலன் (உடற்றொழிலியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோர் தலைமை தாங்குவர்.

பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறைக் கலாநிதி என்.சிவராஜா தலைமையில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் மருத்துவ விஞ்ஞானப் பிரிவின் தலைவி கலாநிதியும் யாழ். பல்கலைக்கழக நோயியல்துறைத் தலைவியுமான திருமதி கலாமதி முருகானந்தன் "புரியாத புதிராகும் ரைபஸ் காய்ச்சல் - யாழ்ப்பாண சமுதாயத்துக்கு ஒரு சவால் (Enigma of Emerging Typhus in Jaffna - A Public Health Challenge)" என்னும் தலைப்பில் உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமாரன் "தொற்று நோயல்லா நோய்களின் சவால்களும் கட்டுப்பாடும் (Challe nges and Control of Non - Communi cable Disea ses)" என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பேராசிரியர் வி.பி.சிவநாதன் தலைமை யில் ஆரம்பமாகும். இந்நிகழ்வு யாழ். பல்கலைக்கழக நூலகக்கேட்போர் கூடத்தில் நடைபெறும். காலை 9 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமுதாய விஞ்ஞானப் பிரிவின் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறைக் கலாநிதி எஸ்.சந்திரசேகரம் "அரசியல் ஆட்சிமுறைமையும் பொருளாதார வளர்ச்சியும் - ஒரு இலக்கிய மீளாய்வு (Political Regimes and Economic Growth: A review of Literature)" என்னும் தலைப்பில் உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் கே.ஏ.விமலேந்திரராஜா "மின்னியல் - அரசு: இலங்கை சார்ந்த கருத்தியலும் நடைமுறையும்(e-Government:The- ory and Practice- Sri Lankan Pers pective)" என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

இறுதிச் சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பதினெட்டாவது தலைவருரை பேராசிரியர் க.சிவபாலன் தலைமையில் பி.ப 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகக்கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இவ்வுரையினை 2010- 2011 நடப்பு வருடத் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக கணித - புள்ளி விவரவியற்றுறைக் கலாநிதி சி.ஸ்ரீசற்குணராசா "எண்களின் அழகும் அற்புதமும்' (the beauty and magic of num bers)" நிகழ்த்துவார்.

(50)

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் 'டெல்மேஜ்' நிறுவனம் வழங்கும் வாய்ப்புக்கள்

1850ஆம் ஆண்டு முதலான பெருமைமிகு வரலாற்றையும் யாழ்ப்பாண மக்களுக்குச் சேவை வழங்குவதில் 30 ஆண்டு கால அனுபவத்தையும் கொண்ட டேல்மேஜ் ஃபோர்சித் அன்ட் கம்பனி, அப்பிரதேசத்தில் புதிதாகத் தோன்றியுள்ள சுமுக நிலையினால் கிடைத்திருக்கும் விரிவான வாய்ப்புக்கள் குறித்து மகிழ்ச்சி அடைகிறது. யாழ்.மத்திய கல்லூரியில் ஏப்ரல் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை நடைபெறும் யாழ்ப்பாணம் 'சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2010', டெல்மேஜ் நிறுவனத்தின் பலதரப்பட்ட பொருள்களையும் சேவைகளையும் பிரதேச மக்களுக்கு நன்கு அறிமுகப்படுத்த ஒரு சிறந்த களமாக அமைகின்றது.

தொழிலறியும் அனுபவமும் வாய்ந்த அலுவலர்களினால் நடத்தப்படவிருக்கும் காட்சிக்கூடங்கள் மூலம் கம்பனியின் பல்வேறு பொருள் வகைகள் குறித்தும் தர முயர்ந்த சேவைகள் குறித்தும் பொதுமக்கள் மற்றும் வியாபாரத் துறையினர் நன்கு அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். பாவனைப் பொருள்கள், உள்ளக அலங் காரப் பொருள்கள், உடல்நலப் பராமரிப்புச் சாதனங்கள், விழிவெண்படலச் சத்திர சிகிச்சைக்குத் தேவைப்படும் வில்லைகள், கட்டுமானத் தொழிலுக்கான கருவிகள், காப்புறுதி வசதிகள், பயணத்துறைச் சேவைகள் என்பன காட்சிக்கு வைக்கப்படும். இப்பொருள்களையும் சேவைகளையும் இல.98, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பா ணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள டெல்மேஜ் பிரதேச அலுவலகத்தில் பெற் றுக்கொள்ள முடியும்.

மாபெரும் டெல்மேஜ் கூட்டு நிறுவனத்தின் வெவ்வேறு வியாபாரப் பிரிவுகள் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றுகின்றன. டெல்மேஜ் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ், டெல்மேஜ் மெடிக்கல், அல்கன் கற்ரகட் லென்சஸ், டெல்மேஜ் கொன்ஸ்ரக்ஷன் புரடக்ஸ், டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ், டெல்மேஜ் இன்டீரியர் டெக்கொர், டெல் எயார் ட்ரவல்ஸ் என்பனவே இந்த உப நிறுவனங்களாகும்.

டெல்மேஜ் ரிட்ரிபியூட்டர்ஸ் (பிறைவேற்) லிமிட்டட் உலகப் புகழ்பெற்ற சர்வதேசப் பெருள் வகைகளான மில்குரோ பால்மா, மோத்தா இன்சுவைப் பண்டங்கள் மற்றும் சொந்த வர்த்தகப் பெயரிலான டெல்மேஜ் தகரத்திலடைத்த மீன், சுப்பிரி சோய், அயடீன் உப்பு, தேயிலை, ஜாம் வகைகள், உடனடி நூடில்ஸ், இன் பண்டங்கள், குழந்தைகளுக்கான உணவுகள், பேக்கரி உற்பத்திகள், போத்தலில் அடைத்த நீர், வினாகரி என்பன உட்பட பல்வேறு பாவனைப் பொருள்களின் சந்தைப்படுத்த லிலும் விநியோகத்திலும் முன்னணி வகிக் கும் நிறுவனமாகும்.

டெல்மேஜ் இன்டீரியர் டெக்கொர் என்பது வீட்டின் உட்புறத்திற்குத் தேவைப்படும் பலதரப்பட்ட பொருள்களை வழங்கும் நிறுவனமாகும். Dux வெந்நீர் குழாய்கள் மற்றும் பொருத்துகள் பூட்டுகளும் கெண்டிப் பூட்டுகளும், நீர் சூடேற்றிகள், வெப்பக்காப்பு உலோகத்தாள், சமையலறைக் கழுவுதொட்டி, நிலவிரிப்புக் கம்பளங்கள், வினைல் மற்றும் ஸ்போட்ஸ் நிலப் போர்வைகள், லமினேற் நிலப் போர்வைகள், அலுவலக உபகரணங்கள், சுவர் போர்வைகள், சீலிங் வகைகள், மரக் குடிசைகள் [illegible] பனை செய் [illegible]

சர்வதேச விமானப் பயணச் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட முகவரான டெல் எயார் ட்ரவல்ஸ் நிறுவனம் இலங்கை மக்களுக்கு விரைவானதும் நம்பிக்கையானதுமான பயணச் சேவைகளை நியாயமான கட்டணங்களில் வழங்குகின்றது. அது உலகின் எந்தப் பகுதிக்கும் விசேட விடுமுறைப் பயணத் திட்டங்களை ஒழுங்கு செய்து கொடுப்பதுடன் இந்தியா, கனடா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு வீசா, கடவுச்சீட்டு போன்ற ஆவணங்களைப் பெற உதவுதல், பயணச்சீட்டுக்களை வழங்குதல் உள்ளடங்கலாகப் பல சேவைகளை வழங்குகின்றது.

இலங்கையில் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏற்ற வகையில் காப்புறுதித் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் தலைசிறந்த நிறுவனங்களுள் டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் ஒன்றாகும்.

விளம்பரம்

தனிப்பட்டவர்களாக இருந்தாலும் நிறுவனங்களாக இருந்தாலும், மிகச் சிறந்த காப்புறுதித் திட்டங்களை தனது வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பது நிறுவனத்தின் நோக்கமாகும்.

டெல்மேஜ் கொன்ஸ்ட்ரக்ஷன் புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் உலகப் புகழ் பெற்ற கட்டுமானத்துறைக் கருவிகளைச் சந்தைப்படுத்துகின்றது. Black & Decker, DeWalt [illegible] என்பன அவற்றுள் சிலவாகும். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கட்டட நிர்மாண முயற்சிகள் பாரிய அளவில் இடம்பெறவிருப்பதால், இக்கருவிகளுக்குப் பெரும் கிராக்கி ஏற்படும். மின்கருவிகள், வீட்டு உபகரணங்கள், கதவு மற்றும் யன்னல் பொருத்துக்கள் போன்ற பல்வேறு தரமுயர்ந்த பொருள்களை டெல்மேஜ் கொன்ஸ்ட்ரக்ஷன் புரடக்ட்ஸ் நிறுவனத்திடமிருந்து வசதியான விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

மருத்துவ உபகரணங்களின் விநியோகத்தில் முன்னணி வகிக்கும் டெல்மேஜ் மெடிக்கல் (பிறைவேட்) லிமிட்டட் வைத்தியசாலைகள், மருத்துவமனைகள், மருத்துவ ஆய்வுகூடங்கள் என்பவற்றிற்குத் தேவையான பல்வேறு சாதனங்களைச் சந்தைப்படுத்துகின்றது. பாவித்த பின் வீசியெறியும் மருந்தூசிகள், குளுக்கோஸ் அளவுமானிகள், டிஜிற்றல் வெப்பமானிகள், ஒட்டிப்பிடிக்கும் பன்டேஜ்கள், குருதியமுக்க அளவுமானிகள், எக்ஸ்-றே இயந்திரங்கள், அதியொலிப் பரிசோதனை இயந்திரங்கள், ECG இயந்திரங்கள் என்பன அவற்றுள் அடங்கும். சர்வதேச தர நியமங்களுக்கு அமைவான இம் மருத்துவ சாதனங்களுக்கு உன்னதமான பராமரிப்புச் சேவையையும் டெல்மேஜ் மெடிக்கல் வழங்குகின்றது. டெல்மேஜினால் விநியோகிக்கப்படும் அல்கன் கண்வில்லைகள் உலகெங்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குச் சிறந்த கண்பார்வையை வழங்கியுள்ளன.

உலகம் வழங்கக்கூடிய மிகச் சிறந்தவற்றை யாழ்ப்பாண மக்களுக்கும் பெற்றுக் கொடுப்பதில் டெல்மேஜ் அன்ட் ஃபோர்சித் கம்பனி பேரார்வம் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் அது பங்குபற்றுவதால், நம்பிக்கை வாய்ந்த ஒரு முன்னோடியுடன் இணைந்து முன்னேற யாழ்ப்பாண மக்களுக்குச் சிறந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.பி.எல். கிரிக்கெட் விவகாரம்

# பிரதமரின் கட்டளையை ஏற்று அமைச்சர் சசிதரூர் ராஜினாமா!

புதுடில்லி, ஏப். 20

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர்பாக முறைப்பாடு கூறப்பட்டமையையொட்டி, மத்திய அமைச்சர் பதவியில் இருந்து சசிதரூர் விலக வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங் கட்டளையிட்டார். இதை ஏற்று சசிதரூர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

ஐ.பி.எல். கொச்சி அணியில் தன்னுடைய காதலிக்கு ரூபா 70 கோடி மதிப்புள்ள பங்குகளைப் பெற்றுத்தர தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தினார் என மத்திய வெளிவிவகார அமைச்சர் சசிதரூர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எனவே, சசிதரூரை பதவி நீக்கம் செய்யக்கோரி, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. ஆனால் இந்தக் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது என்று நாடாளுமன்றத்தில் சசிதரூர் அறிக்கை தாக்கல் செய்தார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரை அவர் தனித்தனியே சந்தித்து விளக்கமளித்தார். அவரது பிரச்சினையில் இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பை பிரதமர் மன்மோகன்சிங்கிடம் ஒப்படைக்க காங்கிரஸ் முடிவு செய்தது. நாடாளுமன்றம் நேற்று கூடவிருந்தநிலையில், அதற்கு முன்பாக, சசிதரூர் விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்க திட்டமிடப்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலை, பிரதமர் மன்மோகன்சிங்கை அவரது இல்லத்தில் சசிதரூர் சந்தித்தார். அப்போது, தன்தரப்பு நியாயத்தை அவர் எடுத்துக் கூறினார் எனத் தெரிகிறது.

சந்திப்பை முடித்துக் கொண்டு வெளியே வந்த சசிதரூர், காத்திருந்த செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்காமல் சென்று விட்டார். அவரது இல்லத்தில் காத்திருந்த செய்தியாளர்களிடமும் அவர் எதுவும் பேசவில்லை.

பிரதமருடனான சந்திப்பின்போது, தான் எந்தத் தவறும் செய்யவில்லை, பண ஆதாயம் பெறவில்லை என்று சசிதரூர் கூறினார் என டில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. தான் மத்திய அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி இருந்தால், பதவி விலகத் தயாராக இருக்கிறார் எனவும் அவர் கூறினார் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதையடுத்து, நேற்றுமுன்தினம் மாலையில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் இல்லத்துக்குச் சென்றார். சசிதரூர் விவகாரம் குறித்து பிரதமருடன் தனியாக ஆலோசனை நடத்தினார். பின்னர் இப்பிரச்சினையில் இறுதி முடிவு எடுப்பதற்காக, சோனியா தலைமையில் காங்கிரஸ் கட்சியின் மேலிடக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதில், பிரதமர் மன்மோகன்சிங், பிரணாப் முகர்ஜி, பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி, மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், சோனியாவின் அரசியல் செயலாளர் அகமது படேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டம் 2 மணி நேரம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், சசிதரூர் தவறு செய்திருப்பதாகவும், அவர் பதவி விலக வேண்டும் என்றும் பெரும்பாலான உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர். பெரும்பான்மையினரின் கருத்து என்பதால், அதை சோனியாவும் ஏற்றுக் கொண்டார். எனவே, சசிதரூர் பதவி விலக வேண்டும் என்று இக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டம் முடிவடைந்த நிலையில், தன்னைச் சந்திக்க வருமாறு சசிதரூருக்கு பிரதமர் மன்மோகன்சிங் அழைப்பு விடுத்தார். அதன்படி, நேற்றுமுன்தினம் இரவு பிரதமரை சசிதரூர் சந்தித்தார். அப்போது, காங்கிரஸ் மேலிடக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை பிரதமர் எடுத்துக் கூறினார்.

மேலிடக்குழு முடிவுப்படி, மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார். பிரதமரின் கட்டளையை ஏற்று, சசிதரூர் தனது ராஜினாமாக் கடிதத்தை அவரிடம் சமர்ப்பித்தார்.

சசிதரூரின் ராஜினாமா கடிதத்தை பிரதமர் மன்மோகன்சிங் ஏற்றுக்கொண்டு அதை நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி மாளிகைக்கு அனுப்பி வைத்தார்.

## தமிழ் தானாகவே வளரும்! கவிஞர் வாலி பேச்சு

தமிழை யாரும் வளர்க்கத் தேவையில்லை. அது என்னைப் போன்ற கவிஞர்களை நம்பியில்லை. தானே வளரும் - என்று கவிஞர் வாலி கூறினார்.

விஷ்ணு - பியா நடிக்க, சித்தார்த் சந்திரசேகர் இயக்கத்தில் உருவாகியுள்ள பலே பாண்டியா படத்தின் ஓடியோ வெளியீட்டு விழாவில் வாலி மேலும் பேசியவை வருமாறு -

தமிழ்ப் படப் பாடல்களில் ஆங்கிலம் கலந்து எழுதப்படுகிறது எனச் சிலர் குறைபட்டுக் கொண்டனர். அப்படியெல்லாம் வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை. தமிழை யாராலும் ஒன்றும் செய்துவிட முடியாது. நான் துட்டுக்கு பாட்டு எழுதும் கவிஞன். தமிழை வளர்க்க நான் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. அது தன்னாலேயே வளரும் தன்மை கொண்டது - என்றார்.

## மஹிந்தவின் புதல்வர்கள் வருகையை எதிர்த்து சென்னையில் போராட்டம் நடத்திய 14 பேர் கைது!

சென்னை, ஏப். 20

சென்னை விமான நிலையம் ஊடாக ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பதற்கு இந்தியா வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர்கள் வருகையை எதிர்த்து சென்னை விமான நிலையத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ் ஆர்வலர்கள்14 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முன்னதாக ஜனாதிபதி மஹிந்தவின் புதல்வர்கள் இருவரும் சென்னை விமான நிலையத்தை அடைவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இறுதிநேரத்தில் அவர்கள் வெளியில் வரவில்லை.

ஆனால் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாக கூறப்பட்ட 50 பொலிஸ் அதிகாரிகள் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் வருவது தொடர்பான தகவலை அறிந்த பெரியார் திராவிட கழகப் போராளிகள் விமான நிலையத்தின் நுழைவாயிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களில் நாம் தமிழர் இயக்கத்தின் சென்னை மாவட்டப் பொறுப்பாளர் அதியமான் உட்பட்ட 14 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

எனினும் பிந்திக் கிடைத்த தகவல்களின் தகவல்களின் பிரகாரம் அவர்கள் சென்னை விமானநிலையத்தின் உறுப்பினர் விடுதியில் தங்க வைக்கப்பட்டு பின்னர் அங்கி ருந்து டில்லிக்கு மற்றுமொரு விமானம் மூலம் அழைத்துச் செல்லப் பட்டனர் எனத் தெரியவருகின்றது.

இந்தியச் செய்திகள்

## பெங்களூர் மைதானம் அருகே மேலும் குண்டுகள் கண்டுபிடிப்பு

பெங்களூர், ஏப். 20

பெங்களூர் சின்னச்சாமி மைதானத்திலிருந்து சற்றுதொலைவில் வெடிக்காமலிருந்த குண்டு ஒன்றை பொலிஸார் நேற்றுக் காலை கைப்பற்றினர். மேலும் கடந்த சனியன்று குண்டுவெடித்த இடத்துக்கு அருகே மேலும் சில வெடிபொருள்கள் கண்டெடுக்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மைதானத்துக்கு அருகே வெடிக்காமலிருந்த குண்டு ஒன்றுடன், மைதானத்தில் முதல் நுழைவாயிலின் அருகே மேலும் சில வெடிபொருள்கள் கண்டெடுக்கப்பட்டன என பொலிஸ் ஆணையர் சங்கர் பிதாரி தெரிவித்தார்.

பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் கடந்த சனியன்று இரு குண்டுகள் வெடித்தன. அதில் 15 பேர் காயமடைந்தனர். வெடிக்காமலிருந்த ஒரு குண்டும் கண்டுபிடிக்கப்பட்டது. அதுகுறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது என பொலிஸார் தெரிவித்தனர்.

# குதிரைச் சவாரியில் ஒசாமா ஆர்வம்: முன்னாள் பாதுகாவலர் தெரிவிப்பு



லண்டன், ஏப். 20

அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன் கால்பந்து, கூடைபந்து, குதிரை சவாரி ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் என அவரது முன்னாள் பாதுகாவலர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கிலுள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குக் காரணமானவர் அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன். ஆப்கானிஸ்தானில் தங்கியிருந்த ஒசாமா, அமெரிக்கா தாக்குதல் நடத்தி தலிபான்களை விரட்டியடித்த பின், பாகிஸ்தான் எல்லையில் பதுங்கியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

ஒசாமா பின்லேடனின் பாதுகாவலராக 1996 இல் இருந்து 2000 ஆம் ஆண்டு வரை இருந்த நசர் அல்-பஹாரி என்பவர் தான் எழுதிய, 'ஒசாமாவின் நிழலில்' என்ற புத்தகத்தில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

ஒசாமா சர்வதேச பயங்கரவாதியாக இருந்தாலும், கால்பந்திலும், கூடைபந்திலும் ஆர்வம் உள்ளவர். அவர் நீண்ட நெடிய உயரமானவர் என்பதால் கூடைபந்து விளையாடும்போது எகிறி குதிக்காமலேயே பந்தை தூக்கி கூடையில் போடுவார். கால்பந்து விளையாடும்போது கூட தலைபாகையை அவிழ்க்க மாட்டார்.

குதிரை சவாரி செய்வதிலும் அவருக்கு அலாதி பிரியம். படிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவார். முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்களைப் பற்றி நன்றாக படித்து தெளிந்தவர். இரண்டாம் உலகப் போரின் போது சிறப்பாகப் போரிட்ட தளபதிகளை அடிக்கடி நினைவு கூர்வார்.

பொது வாழ்வில் அவர் வீரராக இருந்தாலும், குடும்ப வாழ்க்கை அவருக்கு சோகமாக தான் இருந்தது. ஐந்து மனைவிகள். எல்லா மனைவிகளுமே இயந்திர துப்பாக்கியைக் கையாளத் தெரிந்தவர்கள். முதல் மனைவி சிரியா நாட்டைச் சேர்ந்தவர்; படிக்காதவர்; பொறாமை குணம் கொண்டவர்.

இரண்டாவது மனைவி சவூதியைச் சேர்ந்தவர்; அதிகம் படித்தவர். ஐந்தாவதாக ஏமன் நாட்டைச் சேர்ந்த 17 வயது பெண்ணை திருமணம் செய்துகொண்டார். இதனால், மற்ற நான்கு மனைவிகளும் அதிருப்தி அடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் ஒசாமா நான்கு ஆண்டு காலம் தங்கியிருந்தபோது அவரது நம்பிக்கை மிக்க காவலனாக இருந்தேன். என்னிடம் ஒரு கை துப்பாக்கியை கொடுத்து, "அமெரிக்க சிப்பந்திகளிடம் பிடிபட நேர்ந்தால் என் தலையில் இரண்டு தோட்டாக்களால் சுட்டு விடு" எனக் கூறியிருந்தார்.

அவர் தற்போது பாகிஸ்தானின் வாசிரிஸ்தான் பகுதியில் தங்கியிருக்கிறார் என நினைக்கிறேன். - இவ்வாறு நசர் அல்-பஹாரி கூறியுள்ளார்.

உலக அரங்கில்

## சீனாவில் 1,300 பேருக்கு கட்டாய கருத்தடை

சீனாவில் குடும்பக் கட்டுப்பாடு செய்யும் சட்டத்தை பின்பற்றாத 1,300 பேர் அதிரடியாக கைதுசெய்யப்பட்டனர். இவர்களுக்கு கட்டாய கருத்தடை செய்ய சீனா திட்டமிட்டுள்ளது.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த ஒரு குழந்தை மட்டும்தான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சீன அரசு சட்டம் இயற்றியது. ஆனால், தெற்கு சீனாவின் குவாங்டன் பகுதி மக்கள் இச்சட்டத்தை பின்பற்றவில்லை.

இதனையறிந்த குடும்பநல கட்டுப்பாட்டு வாரிய ஊழியர்கள் அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் பேரிடம் 20 நாள்கள் விழிப்புணர்வு பிரசாரம் செய்தனர். அரசின் இச்சட்டத்தை புறக்கணிப்பவர்களின் குழந்தைகளுக்கு இலவச கல்வி, உடல்நலக் காப்புறுதி ஆகியவை நிறுத்தப்படும் என்றும் எச்சரித்தனர்.

## எரிமலைச் சாம்பல் பரவியதால் ஒபாமாவின் பயணம் இரத்து

வாஷிங்ரன், ஏப். 20



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, அண்மையில் விமான விபத்தில் பலியான போலந்து ஜனாதிபதி லெக் காக்சைன்ஸ்கியின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக கடந்த ஞாயிற்றுக் கிழமை போலந்து தலை நகர் வார்ஸோவுக்கு பயணம் செய்ய இருந்தார்.

ஆனால், ஐஸ்லாந்து நாட்டில் எரிமலை வெடித்து வானவெளியில் சாம்பல் பரவியதன் காரணமாக ஜனாதிபதி ஒபாமாதனது பயணத்தை இரத்து செய்து விட்டார்.

"போலந்தின் தற்காலிக ஜனாதிபதி பொறுப்பு வகிக்கும் கோமோரோவ்ஸ்கியிடம் தொடர்புகொண்டு எரிமலை சாம்பல் பரவியதன் காரணமாக ஜனாதிபதி காக்சைன்ஸ்கியின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள முடியாததற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்" என இது குறித்து ஒபாமா வெளியிட்டுள்ள அறிக்கையில்குறிப்பிட்டுள்ளார்.

இதே காரணத்தால், ஜேர்மனிய ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கல், இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் ஆகியோரும் போலந்து ஜனாதிபதியின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளவில்லை.

## டைட்டானிக் பயணியின் கடிதம்: ரூ.1 கோடி 12 லட்சத்திற்கு ஏலம்!

லண்டன், ஏப். 20

டைட்டானிக் கப்பலில் பயணம் செய்த ஒரு பயணி, பயண அனுபவம் குறித்து தனது மனைவிக்கு எழுதிய கடிதம் லண்டனில் ரூ. ஒரு கோடியே 12 இலட்சத்து 20 ஆயிரத்துக்கு ஏலம் போனது.

டைட்டானிக் கப்பல் 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி கடலில் மூழ்கியது. அப்போது கைப்பற்றப்பட்ட ஒரு கடிதம் அண்மையில் லண்டனில் ஏலம் விடப்பட்டது. இதை லண்டன் அருங்காட்சியகம் ரூபா ஒரு கோடியே 12 இலட்சத்து 20 ஆயிரத்துக்கு ஏலம் எடுத்தது.

முதல் வகுப்பில் பயணம் செய்த [illegible] என்ற பயணி, பயண அனுபவம் பற்றி அவரது மனைவிக்கு எழுதிய கடிதம் அது. இதில் உள்ள வாசகங்கள், டைட்டானிக் பயண அனுபவத்தை நம் கண்முன் நிறுத்துவதாக உள்ளன.

"முதல் வகுப்பில் 370 பேர் உள்ளோம். வெப்பநிலை மிகவும் இதமாக உள்ளது. வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து ரம்மியமாக தோற்றமளிக்கின்றன. சிறிய அளவில் அதிர்வு காணப்படுகிறது.

"ஆனால், கடலில் பயணம் செய்வது போன்ற உணர்வே இல்லை. கப்பலின் உள் அலங்காரம் மனதுக்கு இதமளிக்கும் வகையில் உள்ளது. இவ்வளவு வசதிகள் உள்ளபோதிலும், நீ இல்லாமல் தனியாக பயணம் செய்வது வருத்தமளிக்கிறது. அடுத்த முறை நாம் இருவரும் சேர்ந்து பயணிக்கலாம்" என்றும் அதில் எழுதப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

20 * 04 * 2010

யாழ்ப்பாணம், நல்லூர்-வடக்கு, புதிய செம்மணி வீதியில்
'லலிதாவாசம்' இல்லத்தில் வசிக்கும்
மோகனதாஸ் சிவமதி தம்பதிகளின்
செல்வப்புதல்வன்



## கபிலன்

இன்று (20.04.2010) செவ்வாய்க்கிழமை தனது பிறந்தநாளை விமரிசையாகக் கொண்டாடுகின்றார். கபிலன் குட்டியை அவரது அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தி, அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர், நண்பர்கள் சகலரும் அ[illegible]ண்டு வளமுடன் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

தகவல்: அம்மப்பா.


## புத்தக தினத்தை ஒட்டி இலவச வகுப்புக்கள்

உலக புத்தக தினத்தையொட்டி சரசாலை பொது நூல் நிலையத்தினர் அடிப்படை ஆங்கில மற்றும் சிங்கள பயிற்சி வகுப்புக்களை இலவசமாக நடத்தவுள்ளனர்.

தரம் 4,5 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு அடிப்படை சிங்கள வகுப்புகளையும் ஏனைய மாணவர்களுக்கு அடிப்படை ஆங்கில வகுப்புக்களையும் நடத்தவுள்ளனர்.

பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளவுள்ள சரசாலை பொது நூலக எல்லைப் பகுதிகளில் வாழும் மாணவர்கள் பதிவினை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு நூலகர் இ.தாமலிங்கம் அறிவித்துள்ளார். (1-207)

## பளை அலுவலகங்கள் மே முதல் முழுமையாக இயங்கும் என அறிவிப்பு

பளைப் பிரதேச சபை தலைமை அலுவலகம், பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவை மே மாதம் தொடக்கம் முழுமையாக இயங்கவுள்ளன.

தற்போது இக் கட்டடங்களின் ஒரு பகுதி படையினரின் பாவனையில் உள்ளதாகவும் படையினர் இக் கட்டடங்களை விட்டு வெளியேறி வருவதால் மே மாதம் தொடக்கம் அலுவலகச் செயற்பாடுகள் முழுமையாக இயங்குமென தெரிவிக்கப்பட்டது. (1-207)


# வேலைக்கு ஆள் தேவை

★காவலாளி ★ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்
★சப்பிளையர் ★சமையலாளி.
★றோல் சுற்றுபவர்

உடன் தேவை.

பழமுதிர்ச்சோலை கிறீம் ஹவுஸ்
நல்லூர்.

# பிரிய யோகப் பயிற்சி நிலையம்

24.04.2010 சனிக்கிழமை
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.
397,பிரதான வீதி, யாழ்ப்பாணம் (பஸ்ரியன் சந்தி).
தொ.பே: 0772479652

# German, Swiss Deutsch மொழி வகுப்புக்கள்

மேற்படி வகுப்புகள் எதிர்வரும் வைகாசி மாதம் 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்புகளுக்கு:

**Miss.Kajenthini.S**
No-55,Somasundram Lane,
Chundukuly, Jaffna.
(யாழ்.கச்சேரிக்கு அருகாமையில்)
தொ.பே: 0771604823


# கேள்வி அறிவித்தல்

## இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம் (வடமாகாணம்)

### கேள்வி இல: NP/DGM/2010/17

### சுன்னாகம் மத்திய மின் நிலையக் கட்டடத்தைப் புதுப்பித்தல் (மீள்வர்ணம் பூசுதல்)

### RENOVATION (REPAINTING) OF CENTRAL POWER STATION BUILDING AT CHUNNAKAM

மேல்குறிப்பிடப்பட்ட வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி (Tender) 2010.04.30 ஆம் திகதி காலை 10 மணிவரை இலங்கை மின்சார சபை (வடமாகாணம்) மாகாண பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளர்கள், கேள்விப்பத்திரங்களை ரூபா 300.00 (முந்நூறு) இற்கான கொடுத்தல் பத்திரத்தினை எமது அலுவலகத்தில் பெற்று செலுத்துவதன் மூலம் அல்லது பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு என்ற பெயரில் பெறப்பட்ட வங்கிக் கட்டளையாகவோ சமர்ப்பித்து, இல.500, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள பிரதிப் பொதுமுகாமையாளர் (வடமாகாணம்) அலுவலகத்தில் 29.04.2010 ஆம் திகதிவரை வேலை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப.3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 2010.04.30 பிற்பகல் 2 மணிக்கு பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு), இலங்கை மின்சார சபை, 500, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம்.

கேள்வியாளர்கள் இலங்கை மின்சாரசபையிலிருந்து பெறப்பட்ட கேள்விப் பத்திரங்களில் மாத்திரம் இணைப்பிரதிகளில் (Duplicate) பூர்த்தி செய்து, கடித உறையிலிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "சுன்னாகம் மத்திய மின்நிலையக் கட்டடத்தைப் புதுப்பித்தல் (மீள்வர்ணம் பூசுதல்) வேலைகளை நிறைவேற்றுவதற்கான கேள்வி" எனக் குறிப்பிட்டு மேற்குறித்த முகவரிக்கு 30.04.2010 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது இவ் அலுவலகத் திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். இந்த அறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்தில் உள்ள பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

மாகாண பெறுகைக் குழு (வடமாகாணம்),
பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
இல.500, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
மாகாண பெறுகைக் குழு-
(வடமாகாணம்)

தொலைபேசி இல: 021 222 2496,
021 222 3233,
021 224 0277

தொலைநகல் இல: 021 222 2497

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளிற்கு கை கொடுக்கும்"
இலங்கை மின்சார சபை

(ஜ/566978)


# அன்று தலைநகரில் இன்று தாய் மண்ணில், யாழ்.மண்ணில்

## பிரண்ட்ஸ் இசைக்குழுவினர்

நவீன இசைக்கருவிகள், இளம் பாடக, பாடகிகளுடன் சுகுமாரும் சேர்ந்து வெற்றிநடை போடுகிறார்கள்.

பிரண்ட்ஸ் இசைக்குழு
11,A.V.றோட்,
கொழும்புத்துறை.

தொடர்புகளுக்கு:
0776366038,
0770871689, 0776510375.

[ஜ/566967]


# கண்ணீர் அஞ்சலி



## அமரர் கந்தசாமி சிவகுமார்

(ICRC-ஊழியர்)

*17.04.2010 அன்று இறைபதம் அடைந்த எமது சக ஊழியர் அமரர் கந்தசாமி சிவகுமார் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

யாழ்ப்பாணம். (97191) ICRC-நண்பர்கள்.

# மானிப்பாய், கோயிற்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பப் படிவத்தினை ரூபா 25.00 செலுத்தி கடமை நேரத்தில் மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை "தலைவர், மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பொன்னாலை வீதி, மானிப்பாய்" என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

* விண்ணப்ப முடிவு திகதி: 29.04.2010
* பொதுமுகாமையாளர் : 101:08
* சம்பள அளவுத்திட்டம்: 11200 - 14100

140 X 10 - 150 X 10 (கூ.வே. ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 66/2006 இன்படி)

தகைமைகள்:

(அ) கூட்டுறவு ஊழியரின் 09 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியரின் 10ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் அல்லது அதற்கு சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம்ஒன்றில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியரின் தராதரப்பத்திரம் உயர்தரம்/க.பொ.த. உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

வயதெல்லை: 21-50 (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

நிபந்தனைகள்:

(அ) நிறுவனங்களில் கடமைபுரிபவர்கள் நிறுவனத்தின் ஊடாக சிபாரிசு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதியும் இணைக்கப்படல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்களும் சான்றிதழ் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

(இ) மேற்படி பதவிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி, சங்கத்தால் விதிக்கப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.

தலைவர்,
மானிப்பாய், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்.

# நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு

2 ஆம் ஆண்டு



கு.ஜனந்தன் — பிறப்பு: 1981.03.02
ஜ.சர்மிளா — பிறப்பு: 1984.07.20
லோ.மதுஷாழினி — பிறப்பு: 2001.07.23

இறப்பு: 2009.04.20

கந்தராசா கோபிநாத் — பிறப்பு: 1987.11.03
இறப்பு: 2008.02.09

ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
ஆறிடுமோ எம் நெஞ்சம்
அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் கவர்ந்துவிட்டு
அவனியில் எம்மைவிட்டுச் சென்ற
உறவுகளின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
சி.கந்தராசா, க.கோகிலா குடும்பத்தினர்.
ஜ.மகிழிசை (மகள்)

[illegible]
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீசாலையில் புதுவருட தினத்தன்று

# விபத்தில் குடும்பஸ்தர் பலியான சம்பவம்; சைக்கிளோட்டி கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 20

புதுவருட தினத்தன்று கடந்த புதன் கிழமை இரவு மீசாலையில் இடம்பெற்ற மோட்டார் சைச்கிள் - சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் பலியான சம்பவம் தொடர்பாக சைக்கிளில் பயணம் செய்தவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மந்துவிலைச் சேர்ந்த குறிப்பிட்ட இளைஞரைக் கொடிகாமம் பொலிஸார் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்தனர். பின்னர் வழக்கை விசாரித்த நீதிவான் எதிர்வரும் 26ஆம் திகதிவரை அந்த இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பிரஸ்தாப இளைஞன் செலுத்திய சைக்கிள் அறவழி நிலையத்தினால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சியில் வழங்கப்பட்டதென்றும், இந்த நிலையத்திலிருந்து பெறப்பட்ட பதிவுகளின் பிரகாரம் இந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்து நிகழ்ந்தவேளை சைக்கிளோட்டி சைக்கிளைக் கைவிட்டுவிட்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

இந்த விபத்தில் மீசாலை மேற்கைச் சேர்ந்த மார்க்கண்டு சிறிரவிகுலன் (வயது 46) என்ற மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-16, 207)

## பித்தளை, அலுமினியம் தட்டுப்பாட்டால் உள்ளூர் தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்பு

கொழும்புத்துறை, ஏப். 20

குடாநாட்டில் பித்தளை மற்றும் அலுமினியத்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக வார்ப்பு உருக்குத் தொழிலில் ஈடுபட்டு வருவோர் கவலை தெரிவிக்கின்றனர்.

பழைய பித்தளை, அலுமினிய வகைகள் தென்னிலங்கைக்கு எடுத்துச்செல்லப்படுவதால் இவற்றுக்குத் தட்டுப்பாடும் அதிகரித்த விலையும் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த காலங்களில் ஒரு கிலோ 150 ரூபா வரை விற்கப்பட்ட பித்தளை தற்போது 200 தொடக்கம் 250 ரூபாவரை விலை அதிகரித்துள்ளதாகத் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பூட்டு, திறாங்கு போன்ற கட்டடப் பொருள்களும் கோவில் பயன்பாட்டுப் பொருள்களும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் இவற்றுக்கான தட்டுப்பாடு பல தொழிலாளர்களையும் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். குடாநாட்டில் சிறுகைத்தொழிலாக வார்ப்பு உருக்கு வேலையில் அநேகம் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

## தொழிற்பயிற்சி நிலையங்களின் பதிவு தொடர்பான கருத்தரங்கு

தொழில்பயிற்சி ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் தமது திணைக்கள அதிகாரிகளுடன் நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற தொழிற் பயிற்சி நிலையங்களைப் பதிவு செய்வது தொடர்பாக, நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் கருத்தரங்கில் அவர் பங்கு பற்றுவார்.

மாவட்டத்தில் தொழிற் பயிற்சி வழங்குபவர்களைக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-1)

## இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். - கொழும்பு அம்புலன்ஸ் சேவை

யாழ். மக்களின் நன்மைகருதி அகில இலங்கை இந்து மாமன்றம் மிகக்குறைந்த கட்டணத்தில் ''அம்புலன்ஸ்'' சேவையை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்குமென இந்த அம்புலன்ஸ் சேவை நடத்தப்படவுள்ளதாக இந்துமாமன்ற உபதலைவர் ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு மிகக் குறைந்த கட்டணத்தில் மனிதாபிமான அடிப்படையில் இந்த அம்புலன்ஸ் சேவையை அகில இலங்கை இந்துமாமன்றம் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

எனவே யாழ்ப்பாணத்தில் இருந்து நோயாளர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல வேண்டியவர்கள், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் யாழ்.அலுவலகம், 211/7,யாழ்.நல்லூர் கோயில் வீதி என்ற முகவரியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். அலுவலகத்துடன் அல்லது 021-222 1075 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-9)

## 3 நாள்கள் நடைபெறும் சைவப்புலவர் தேர்வு

அச்சுவேலி, ஏப். 20

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சைவப்புலவர் தேர்வுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் நான்கு இடங்களில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில், வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்திலும் மட்டக்களப்பில் ஆசிரிய கலாசாலையிலும், கொழும்பில் தமிழ்ச் சங்கத்திலும் லண்டன், ஜேர்மனி ஆகியவற்றில் குறிப்பிட்ட நிலையங்களிலும் தேர்வு நடைபெறும் என்று சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தெரிவித்தார்.

இந்தத் தேர்வில் இலக்கியம் உரைநடை, சாத்திரம் வரலாறு, இலக்கணம் ஆகிய பாடங்கள் இடம்பெறும். பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள், நேரசூசிகள் ஆகியன அனுப்பப்பட்டுள்ளன. அவை கிடைக்காதவர்கள் சங்கப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் மேலும் கூறினார். (ஒ-1)

## தீவகக் கல்வி வலய தமிழ்மொழித்தின கலைத்திறன் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 20

தீவகக் கல்வி வலய தமிழ் மொழித்தின கலைத்திறன் போட்டிகள் நாளை புதன் கிழமையும் மறுநாள் வியாழக் கிழமையும் காலை 8.30 மணி முதல் வேலணை மத்திய கல்லூரியில் நடை பெறவுள்ளன.

வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, பேச்சு, பாவோதல், இசையும் அசைவும், தனி நடனம், இசை - தனி ஆகிய நிகழ்வுகள் முதலாம் நாளும் - ஏனைய நிகழ்வுகள் இரண்டாம் நாளும் நடைபெறும்.

மாவட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும். (ஒ-1)

# நாவலப்பிட்டியில் மீள் வாக்களிப்புக்கு மூன்று அமைச்சர்கள்தானாம் காரணம்

### குற்றச்சாட்டை அவர்கள் தலையில் போடுகிறார் மஹிந்தானந்த அளுத்கமகே

கொழும்பு, ஏப்.20

நாவலப்பிட்டியில் இன்று இடம்பெறும் மீள் வாக்கெடுப்புக்கு முன்னாள் அமைச்சர்கள் மூவரின் சதித்திட்டமே காரணம் என்று சர்ச்சைக்குரிய முன்னாள் பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அந்த முன்னாள் அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பியுடன் சேர்ந்துகொண்டு தேர்தல் ஆணையாளருக்குப் பொய்த் தகவல்கள் வழங்கியமையாலேயே இப்போது மீள்வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது என்கிறார் அவர்.

மஹிந்தானந்த அளுத்கமகே இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாவலப்பிட்டியில் வாக்களிப்பு ரத்துச் செய்யப்பட்டு அங்கு மீள் வாக்களிப்பு நடத்தப்படுவதற்குக் காரணமானவர்களுள் முக்கியமானவர்கள் எங்களது அரசைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் மூவர் தான்.

அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடனும், ஜே.வி.பியுடனும் சேர்ந்துகொண்டு பொய்யான முறைப்பாடுகளைத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தப் பிரச்சினையை நான் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்வேன். 20ஆம் திகதிக்குப் பின்னர் இந்த விடயத்தை மக்களிடமும் நான் கூறுவேன்.

இதேவேளை, எமது கட்சியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவின் கவனத்திற்கும் நான் இதைக் கொண்டுவருவேன். அத்தோடு நாவலப்பிட்டியில் வன்முறைகள் இடம்பெறுகின்றன என்றும் அவற்றுக்கு நானே காரணம் என்றும் குற்றஞ் சாட்டப்படுகின்றது. அதை நான் மறுக்கின்றேன்.

நாவலப்பிட்டியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் அச்சமின்றி வாக்களிக்கமுடியும். தேர்தல் நீதியாகவும், நேர்மையாகவும் இடம்பெற்றது என்பதை நாவலப்பிட்டி மக்கள் நாட்டுக்குக் காட்ட வேண்டும் - என்றார்.



நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரம சிங்க சந்தித்தபோது.....

## நான்கு கத்தோலிக்க குருமார் புத்தளம் விபத்தில் படுகாயம்

### ஜேர்மன் நாட்டு வண பிதா மோசமாகப் பாதிப்பு

கொழும்பு, ஏப்.20

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த வண பிதா ஒருவரும், மற்றைய இரண்டு உள்நாட்டு கத்தோலிக்க குருமாரும் அருட்சகோதரி ஒருவருமாக நான்கு மத போதகர்கள் நேற்றுப் பிற்பகல் புத்தளம் பகுதியில் இடம்பெற்ற மோசமான வீதி விபத்தில் காயமடைந்துள்ளனர்.

இவர்களுள் படுகாயமடைந்த ஜேர்மன் நாட்டு கத்தோலிக்க மதகுரு மிக ஆபத்தான கட்டத்தில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இவர்கள் திரும்பிக்கொண்டிருந்த சமயம் புத்தளம் - அநுராதபுரம் வீதியில் இவர்களது வாகனம் விபத்தில் சிக்கியது என்று கூறப்படுகின்றது.

புத்தளம் பொலிஸார் இந்த விபத்துக் குறித்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## காலி விபத்தில் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஏப். 20

காலி ஹுங்காம எனும் இடத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் வீதியால் சென்ற ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இரண்டு பஸ்கள் ஒன்றை ஒன்று முந்துவதற்கு முயற்சித்தமையால் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் இடையில் சிக்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் காயமடைந்த மேலும் மூவர் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக காலி ஹுங்காம பொலிஸார் மேலதிக விசாரணையை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 38 மாகாணசபை உறுப்பினர்கள் இம்முறை எம்.பிக்களாகத் தெரிவு

கொழும்பு, ஏப்.20

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மாகாணசபை உறுப்பினர்கள் 38 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டமையால் மாகாண சபைகளில் 38 வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

மேல்மாகாண சபையில் இருந்து 11 உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகினர். அவர்களில் ஆளுங்கட்சியில் ஐவரும், எதிர்க்கட்சியில் ஆறுபேரும் அடங்குகின்றனர்.

தென்மாகாண சபையில் இருந்து ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஆறு பேரும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த இருவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

சப்ரகமுவ மாகாணசபையில் இருந்து ஐந்துபேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகினர். ஆளுங்கட்சியில் நான்கு உறுப்பினர்களும் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரும் அவர்களுள் அடங்குகின்றனர்.

மூன்று உறுப்பினர்கள் ஊவா மாகாண சபையில் இருந்து தெரிவாகின்றனர். அவர்களுள் இரண்டுபேர் ஆளுங்கட்சியையும் ஒருவர் எதிர்க்கட்சியையும் சேர்ந்தவர்களாவர்.

வடமேல் மாகாண சபையில் இருந்து 5 பேர் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகினர். அவர்களில் 4பேர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மாத்திரம் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து 4பேர் இம்மறை நாடாளுமன்ற உறுப்பினர்களாகியுள்ளனர்.

மத்திய மாகாணத்தின் மாத்தளை [illegible] இருந்து எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளார்.

## மின்னல் தாக்கி இதுவரை ஐவர் பலி

கொழும்பு, ஏப். 20

தென்னிலங்கையில் தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக இதுவரை நாட்டின் பல இடங்களில் மின்னல் தாக்கி 5பேர் உயிரிழந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அநுராதபுர மாவட்டத்தில் கடந்த 48 மணித்தியாலங்களாகப் பெய்த காற்றுடன் கூடிய அடைமழை காரணமாக அம்மாவட்டத்தில் 10 வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நிலவிவரும் பருவக்காற்றுக் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மின்னல் தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நாடாளுமன்றில் இடம்பெறுவோரின் முழு விவரம் நாளை அதிகாலை தெரியவரும்

கொழும்பு, ஏப். 20

இன்று இடம்பெறும் மீள்வாக்களிப்பின் முடிவுகளை இன்றிரவே வெளியிடுவதற்கு தேர்தல் செயலகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இந்த மீள்வாக்களிப்புடன் நாடாளுமன்றத் தேர்தலின் அனைத்து முடிவுகளும் தெரியவந்துவிடும்.

இன்று இரவு அல்லது நாளை காலை கட்சிகள் தேசியப் பட்டியல் மூலம் பெறும் ஆசனங்களின் விவரங்களும் தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இறுதி முடிவு வெளியிடப்பட்டதும் ஆளும்கட்சியின் தேசியப் பட்டியலில் இடம்பெறுவோரின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அக்கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகளுக்கு வாய்ப்புகளை வழங்கும் வகையிலேயே கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பிக்கள் ஒதுக்கீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

தேசியப் பட்டியல் ஆசனங்கள் உட்பட மொத்தமாக 143 ஆசனங்கள் ஆளும் கட்சிக்குக் கிடைக்கும் என்று சுசில் பிரேமஜயந்த நம்பிக்கை வெளியிட்டுள்ளார். தற்போது வெளிவந்துள்ள தேர்தல் முடிவுகளின்படி ஆளும் கட்சி 117 ஆசனங்களைப் பெற்று முன்னிலையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எட்டுவதற்குத் தேவையாக இருக்கின்ற மீதி ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை இம்மாதம் 22ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்படும் என்றும் இது தொடர்பாக பல கட்சிகளுடன் பேச்சுகள் நடத்தப்படும் என்றும் சுசில் பிரேமஜயந்த கூறினார். (அ-சி)

# இரவு நேரத்தில் வந்து பழக்கடைகளை அகற்ற எடுத்த முயற்சியால் நகரில் களேபரம்!

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ். நகரப்பகுதியில் - யாழ் பஸ் நிலையத்துக்கு பின்புறமாக- மின்சார நிலைய வீதியில்- பஸ் நிலையத்துக்கு அருகே அமைந்திருந்த நடைபாதைக் கடைகளை முன்னறிவித்தல் எதுவுமின்றி இருட்டில் வந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் மாநகரசபை ஊழியர்கள் ஈடுபட்டதால் நேற்று இரவு பெரும் களேபரம் உண்டாகியது.

கடை உரிமையாளர்கள் அங்கு வந்து எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து மாநகர சபை ஊழியர்கள் அகன்று சென்றனர்.

நேற்றிரவு 10.15 மணியளவில் மூன்று டிராக்டர்களில் வந்த மாநகரசபை ஊழியர்கள் கடைகளை இடித்துத்தள்ள ஆரம்பித்தனர். இதில் பழங்கள் வைக்கப்பட்டிருந்த இரு கடைகளும், மற்றும் ஆறு கடைகளும் முற்றாகச் சேதமடைந்தன.

இதைக்கேள்வியுற்று அங்கு வந்து திரண்ட நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட கடை உரிமையாளர்கள் காட்டிய எதிர்ப்பை அடுத்து, மாநகரசபை ஊழியர்கள் அவ்விடத்தில் இருந்து அகன்று சென்றனர்.

மாநகரசபை அதிகாரிகள் எமது கடைகளை அகற்றுமாறு கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக யாழ். மேயர் திருமதி ப.யோகேஸ்வரி, ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கமல் ஆகியோருடன் பேச்சு நடத்தினோம்.

மாற்று இடம் தருவதாக எமக்கு உறுதிமொழி தரப்பட்டதன் பேரில் எமது வியாபாரத்தை மேற்கொண்டோம்.

நேற்றிரவு மாநகரசபை ஊழியர்கள் வந்து அடாத்தாகக் கடைகளை அகற்ற முயன்றனர். எந்த அதிகாரியும் பிரசன்னமாக இருக்கவில்லை என்று கடை உரிமையாளர்கள் தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையால் சுமார் 2 இலட்சம் ரூபா பெறுமதியான பழவகைகள் சேதமாக்கப்பட்டன என்றும் கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

முன்னறிவித்தல் இன்றி இவ்வாறு அதிகாரத்தனம் செய்வது கண்டிக்கத்தக்கது என்றும், அடுத்தவர்கள் நலன்களைப் புறக்கணித்து நடந்தது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல என்றும் அவர்கள் சீற்றம் தெரிவித்தனர். (அ-1-16)

## சந்தேக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கை விசாரணை செய்து வரும் புலனாய்வுப் பொலிஸார் விடுமுறையில் சென்றுள்ளதால் நேற்று அவர்கள் பிரசன்னமாக இருக்கவில்லை. அவர்களின் கருத்தைப் பெறாமல் பிணை வழங்க முடியாது எனத் தெரிவித்து பிணை மனுவை நிராகரித்து எதிர்வரும் 27ஆம் திகதிக்கு வழக்கை நீதிவான் ஒத்தி வைத்தார்.

ஏற்கனவே பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஜீவனுக்கு எதிரான உத்தரவு தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் நீதிவான் அறிவித்தார்.

அடுத்த தவணை புலனாய்வுப் பொலிஸாரை நீதிமன்றத்தில் பிரசன்னமாக வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

மாணவன் கடத்தல் தொடர்பாக ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் மூவரும், வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ள வவுனியா ஸ்ரீநாகராசா வித்தியாசாலை ஆசிரியர் கணேஸ்வரராஜா தயாராஜூம் நீதிமன்றத்தால் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சார்பாகவே பிணை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ஒ-1-207)

## பிரபாகரனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதி அம்மாளையும் அவருக்கு துணையாக வந்த விஜயலட்சுமி என்ற பெண்ணையும் தடுத்திருக்கிறார்கள் அதிகாரிகள்.

இந்நிலையில், தமிழக சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்திற்குப் பிறகு, தமிழகத்திற்குச் சிகிச்சை பெற வந்த பிரபாகரனின் தாயார் மலேஷியாவுக்கு திரும்ப அனுப்பப்பட்டமை குறித்து சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இதன்மீது பேசிய பா.ம.க., மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பல்வேறு கட்சி உறுப்பினர்கள் பார்வதி அம்மாளுக்கு தமிழகத்தில் சிகிச்சை அளிக்க மத்திய அரசிடம் கூறி தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதற்குப் பதில் அளித்து பேசிய முதல்வர் கருணாநிதி கூறியவை வருமாறு:-

பார்வதி அம்மாள் சிகிச்சை பெற வருவது குறித்து தமிழக அரசுக்கு எந்தவிதத் தகவலும் கிடைக்கவில்லை. இது தொடர்பாக மத்திய அரசிடம் மட்டுமே செய்தித் தொடர்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அன்று நள்ளிரவு 12 மணிக்கு மேல் எனக்குத் தகவல் கிடைத்தது. நான் விமான நிலைய அதிகாரிகளை விசாரித்தபோது, அவர் மலேஷியாவுக்குத் திருப்பியனுப்பட்டார் எனத் தெரிய வந்தது.

பார்வதி அம்மாள் தமிழகத்தில் சிகிச்சை பெற விரும்பினால் இதுகுறித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி வலியுறுத்தத்தயார். தேவைப்பட்டால் மத்திய அரசின் விளக்கத்தைப் பெற்று அதனை, அவையில் தெரிவிக்கவும் தயார் என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார். (அ-சி)

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றங்களை ஆதரித்து வருவதாகவும் குற்றஞ்சுமத்தினர்.

இந்தியாவின் மேல் நீதிமன்ற நீதியசரர் ரஜிந்தர் சாச் சார், இந்திய உயர் நீதிமன்ற நீதியரசர் வி.ஆர். கிருஷ்ணஐயர், சர்வதேச மக்கள் போராட்டக் கழகத்தின் உபதலைவர் பேராசிரியர் ஜி.என். சாய்பாபா, உலக சீக்கியப் பத்திரிகையின் ஆசிரியர் பேராசிரியர் ஜக் மோகன் சிங், காஷ்மீர் அனைத்துக் கட்சி ஹூரியற் மாநாட்டின் தலைவர் செய்யத் அலி சஹா ஜெலாணி, சண்டிகார் உயர்நீதிமன்ற நீதிபதி அஜித் சிங் பெயின்ஸ், ஜேர்மனியின் சர்வதேச மனித உரிமைகள் சங்கத்தின் பிரமுகர் விராஜ் மென்டிஸ், பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோரும் இந்த மாநாட்டில் முக்கிய உரைகளை ஆற்றினர்.

புரட்சிக் கவிஞர் வர வர ராவ் மாநாட்டுக்கு அனுப்பி வைத்த கவிதையில், இலங்கை அரசாங்கம் ஈழத் தமிழர்களை இனப் பேரழிவு செய்வதற்கு இந்தியா முழு ஆதரவும் உதவிகளும் வழங்கியதாக தெரிவித்திருந்தார்.

இந்த மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஏனைய 4 தீர்மானங்களும் வருமாறு:-

* தமிழ் மக்கள் மீது இலங்கை அரசாங்கம் கட்டவிழ்த்த இனப் பேரழிவு போர்க் குற்றங்களை இந்த மாநாடு கண்டிக்கிறது.
* வலுக் கட்டாயமாகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல தமிழ் மக்களையும் விடுவிக்க வேண்டும்.
* தமிழ் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களை நிறுத்த வேண்டும்.
* சுயநிர்ணயத்துக்காகப் போராடும் தேசிய இனங்களுக்கு எதிராக இந்திய அரசாங்கம் நடத்தும் போரை இந்த மாநாடு கண்டிக்கிறது. (அ)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவைப் பெறுதல் போன்றவை தொடர்பாகவும் இச்சந்திப்பின்போது பேசப்பட்டது என்றும் அறியப்படுகிறது.

இந்தச் சந்திப்புக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே அழைப்பு விடுத்திருந்தார் என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலக வட்டாரம் நேற்றுத் தெரிவித்தது. (அ-சி)

## கப்பலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் உரிய முறையில் இவர்கள் மீது கவனம் செலுத்தவில்லை எனக் குற்றஞ் சாட்டப்படுகிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த அகதிகள் இந்தோனேஷியத் தலைநகர் ஜகர்த்தாவிலுள்ள விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து நாட்டின் பல பாகங்களிலுமுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

ஆனால், இந்த அகதிகள் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றிய போதிய விளக்கங்கள் இதுவரை வெளியாக வில்லை. ஆஸ்திரேலிய அரசு இவர்களை ஏற்பதாக அறிவித்தது பற்றிய தகவல்களும் இதுவரை வெளியிடப்படவில்லை.

கப்பல் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்கள், நோய்கள் காரணமாகவே இந்த அகதிகள் நாட்டிற்குள் செல்ல ஒப்புக்கொண்டிருக்கின்றனர் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை, இலங்கை அகதிகளை 3 மாதங்களுக்கும், ஆப்கானிஸ்தான் நாட்டவரை அடுத்த 6 மாதங்களுக்கும் ஏற்க மாட்டோம் என கடந்த 8ஆம் திகதி ஆஸ்திரேலிய அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## மீள் வாக்களிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. நாவலப்பிட்டியில் அளிக்கப்படும் வாக்குகளைக் கண்டி மாவட்ட செயலகத்தில் எண்ணுவதற்கும், கும்புறுப்பிட்டி வாக்குச்சாவடியில் அளிக்கப்படும் வாக்குகளைத் திருகோணமலைச் செயலகத்தில் வைத்து எண்ணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் எட்டாம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது நாவலப்பிட்டியில் உள்ள வாக்குச்சாவடிகளிலும், திருகோணமலை - கும்புறுப்பிட்டியவில் உள்ள வாக்குச்சாவடியிலும் வாக்கு மோசடிகள் இடம்பெற்றன என்று தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றமையைத் தொடர்ந்தே தேர்தல் ஆணையாளர் அந்த வாக்களிப்பு நிலையங்களில் நடந்த வாக்களிப்பை ரத்துச்செய்து மீள் வாக்களிப்பை அறிவித்தார்.

இன்று இடம்பெறும் மீள் வாக்களிப்பின் போது மோசடிகள் எவையும் இடம்பெற்றால் அந்த வாக்களிப்பு மீண்டும் ரத்துச் செய்யப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-சி)


Network Engineer
Government Scholarship
①System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
①வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
①USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree
*Carrier Guidance, Student Visa, Work Permit
①செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்
Per Module - 15000/= 3800/=
Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
Free Diploma in Hardware Technology-DHT, INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE-ICDL
இச்சலுகை இன்னும் சில நாட்கள் வரை மட்டுமே
MCS Supported By UNDP/JRRP T.P-772395895
324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம்



விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
O/L Day Class இற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்
பிரிவு 03
O/L DAY CLASS
ஆரம்பம்: 23.04.2010 (8.30-2.30)
* பிரிவு 2 இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.
* இம்முறையும் பிரிவு 6 மட்டுமே
* பிரிவு 4 மிக விரைவில்
* தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும். (வி/566980)



பொருளியற் கல்லூரி
தமிழ்
Mr. N.சந்திரவேந்தன் B.A. (Hons) Tamil.Spl. Master of Philosphy (Tamil, University of Jaffna)
A/L - 2012
புதிய பிரிவு பிரிவு II
ஆரம்பம்: 24.04.2010 சனி 9 A.M
பிரிவு I சனி, ஞாயிறு 12 P.M நடைபெறுகின்றன.
A/L - 2011
பிரிவு II சனி, ஞாயிறு 8 - 9 A.M
பிரிவு III சனி, ஞாயிறு 10 - 11 A.M
A/L - 2010
பிரிவு II சனி, ஞாயிறு 11 - 12 A.M
A/L Day Class
ஒரே கட்டணத்தில் மாதத்தில் 30 மணித்தியாலங்கள் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
திங், செவ், புதன், வியா, வெள் 8 - 9 A.M
சனி, ஞாயிறு 3 - 4 P.M
Note. மேற்குறிப்பிட்ட ஆசிரியர் யாழ். நகரில் எமது நிறுவனத்தில் மட்டும் தான் கற்பிப்பார். (C/566977)



தரம் 6 முதல் O/L வரை
யாழ் நகரின் No.1 கல்வி நிறுவனம்
எடிஷன் அக்கடமி
☆ யாழ்ப்பாணம் ☆ கொக்குவில் ☆ வட்டுக்கோட்டை ☆ சண்டிலிப்பாய்
ஆகிய எமது 4 கிளைகளில் ...
..O/L Day Class...
ஆரம்பம் – 28.04.2010 புதன் காலை 8.00 மணி


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org